கர வருடம்
தை மாதம்

செவ்வாய்க்கிழமை
17-01-2012

கதிர் ஒளி

கனடா — உலகத் தமிழரின் ஒரே நம்பிக்கை ஒளி — Vol: 04 • Issue: 209

Editor in Chief: RAJAPANDIAN PAULRAJ வார இதழ் - பக்கம் 44 epaper: www.kathiroli.digitalepaper.in

KATHIR OLI MEDIA INC. 2353 Eglinton Ave, East, Scarborough, ON. M1K 2M5 Tel: 416-752-NEWS (6397) Fax: 416-752-6399 kathirolinews@gmail.com Toll Free: 1.877.752.6309

கனடா மார்க்கம் மாநகர சபையில் பொங்கல் விழாவில் ராதிகா எம்.பி

தமிழர் திருநாளான தைப் பொங்கல் திருநாள் முதன் முதலாக கனடா நாட்டில் மார்க்கம் மாநகர சபையில் உத்தியோக பூர்வமாகக் கொண்டாடப்பட்டது. தமிழர்கள் மாத்திரமன்றி பல்லின மக்கள் ஒன்றிணைந்து வாழும் மார்க்கம் மாநகர சபை மண்டபத்தில் மார்க்கம் நகர சபையின் முதலாவது தமிழ் அங்கத்தவரான திரு. லோகன் கணபதியின் பாரியார் இராஜேஸ்வரி, கனடாவின் முதலாவது தமிழ் எம்.பி.செல்வி ராதிகா சிற்சபைஈசன் மார்கம் பாடசாலை அறங்காவலர் யுவனிதா நாதன் ஆகியோர் பொங்கல் பொங்கினார்கள்.

தமிழர் திருநாளான தைப் பொங்கலையும் புது வருடத் தினத்தையும் தமிழர்களின் பாரம்பரிய தினமாக மார்க்கம் மாநகர சபையினால் பிரகடனப் படுத்த திரு.லோகன் கணபதி கடந்த பல வருட காலமாக மேற் கொண்டு வந்த முயற்சி இவ் வருடம் கைகூடி வந்துள்ளது. இப் பொங்கல் விழா உலகெங்கும் வாழும் தமிழ் மக்களை உவகை கொள்ளச் செய்யும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பொங்கலாகும்.


இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தமிழ் எம்.பி.செல்வி ராதிகா சிற்சபைஈசன் உரையாற்றுகையில் 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பார்கள். அதனால் உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்கள் இன்புற்றிருக்க புதிய வழி பிறக்கும். எங்களை அடையாளப்படுத்தும் எமது கலாச்சார பாரம்பரியங்களை நாம் கடைப்பிடித்து வாழ வேண்டும். நான் ஐந்து வயதுச் சிறுமியாக கனடாவுக்கு வந்த போதிலும் எனது பெற்றோர் தமிழ் பாரம்பரியங்களுடனேயே என்னை வளர்த்தார்கள். இன்றைய நாளை மார்கம் மாநகரில் தமிழினத்தின் பாரம்பரிய நாளாகப் பிரகடனப் படுத்திய திரு. லோகன் கணபதிக்கு நாமனைவரும் நன்றியும் பாராட்டும் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம் என்றார்.





பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஒன்றாறியோ மாகாண கலாச்சார அமைச்சர் திரு.மைக்கல் சான் உரையாற்றுகையில் பல்லின மக்கள் வாழும் மாநகர சபையில் தமிழ் மக்களின் பொங்கல் திருநாள் கொண்டப்படுவது மிக்க மகிழ்ச்சிக்குரியது. தமிழ் மக்கள் சிறந்த பாரம்பரியத்தையும், கலாச்சாரத்தினையும் கொண்டவர்கள். அத்துடன் கடின உழைப்பாளிகள். தமிழ் மக்கள் அனைவருக்கும் நன்மை ஏற்பட வாழ்த்துகிறேன் என்றார்.

தமிழர் பண்பாட்டு வரலாறு: பன்முகப் பார்வை–37



பேராசிரியர்
இ.பாலசுந்தரம்
(அண்ணாமலைப் பல்கலைக் கழகம் - கனடா வளாகம்)

தொல்காப்பியர் ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய பெருந் தெய்வம் என நான்கு கடவுளரைக் குறிப்பிடுதல் சிந்திக்கத்தக்கது:

மாயோன் மேவிய காடுறை உலகமும்
சேயோன் மேவிய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே'
[தொல். அகம். 5]

அக்காலத்தில் மாயோன், சேயோன், வேந்தன், வருணன் என்ற 4 தெய்வங்களும் முறையே முல்லை. குறிஞ்சி, மருதம், நெய்தல் என்னும் நானிலங்களிலும் பெருந்தெய்வமாகப் போற்றப்பட்டுள்ளனர். ஆனால் சிலப்பதிகாரம் மணிமேகலை காலத்திற்குப் பின்னர் வருணன், வேந்தன் ஆகிய இரு தெய்வங்களும் மக்கள் வழிபாட்டிலிருந்து வழக்கொழிந்து போயின என்பது நோக்கத்தக்கது.

தமிழரின் பண்டைத் தெய்வமாகப் போற்றப்பட்ட சிவன், சங்க காலத்தில் எந்த நிலத்திற்கும் உரியவராக குறிப்பிடப் படவில்லை. சங்கப் பாடல்களில், மிகச் சில இடங்களில் மட்டுமே சிவன் பற்றிய குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. சிவன் அனைத்துத் தமிழ் மக்களுக்குரிய தெய்வமாகப் போற்றப்பட்டிருக்கலாம் . நிலம், நெருப்பு, வளி, விசும்பு என்ற ஐந்து பூதங்களையும் தோற்றுவித்தவன் சிவன் என்பதை மதுரைக்காஞ்சி *(453-455)* குறிப்பிடுகிறது. மலைபடுகடாம் *(62-83)* சிவனை நஞ்சுண்ட கண்டன் எனக் கூறுகிறது. திருமுருகாற்றுப்படையில் புராணக்கதைகளுடன் சிவன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளார். சிவனுடைய கோயில் 'முக்கட்செல்வர் நகர்' எனப் புறநானூறு *(6:18)* கூறுகிறது. இவ்வாறான குறிப்புக்கள் சங்கப் பாடல்களில் இடம் பெற்றாலும் சிவவழிபாடு அக்கால மக்களிடையே செல்வாக்குப் பெற்றிருக்கவில்லை என்பதே எமக்குக் கிடைத்துள்ள சங்கப்பாடல்களிலிருந்து அறியப்படுகிறது.


சங்கப் புலவர்கள் ஒவ்வொரு நிலத்திலும் வாழ்ந்த மக்களின் வாழ்வியல் இயல்புகளுக்கு ஏற்பத் தனித்தனித் தெய்வங்களை முதன்மைப் படுத்தியிருக்கலாம் எனக் கருத இடமேற்படுகிறது. அல்லாமலும் குறிஞ்சிக்குப் புணர்தல் என்றும், அங்கு முருகனே முழுமுதல் கடவுள் என்றும் பாடியமையால் அங்கு சிவன் பற்றிப்பாடும் வாய்ப்பு இல்லாது போயிருக்கலாம். கொற்றவை புதல்வனாகவும் சிவனின் மைந்தனாகவும் முருகன் சித்திரிக்கப்படுவதால் கொற்றவையும் சிவனும் முதன்மை பெறுகின்றனர் என்பது புலனாகின்றது.

தொல்காப்பியர் மேற்கூறிய சூத்திரத்திலிருந்து பண்டைத் தமிழரின் கடவுட் கோட்பாடு எவ்வாறிருந்தது என்பதை ஊகித்தறிய முடிகின்றது. குறிஞ்சி நில மக்களால் போற்றப்பட்ட முருகன், மக்களிடம் மிகவும் நம்பிக்கைக்குரிய தெய்வமாகவும், அக்கால மக்களின் காதல் வாழ்விலும், போரியல் வாழ்விலும் முக்கிய தெய்வமாகவும் வழிபடப் பட்டுள்ளான். மலைபடுகடாம் *(வரி-483)* முருகனை 'போரிலே வெற்றிகொள்ளும் கொற்றவைச் சிறுவன்' எனக் குறிப்பிடப் படுகின்றது. வெற்றித் தெய்வமான கொற்றவையின் சிறுவனாக திருமுருகாற்றுப் படை *(வரி 258)* பாடுகின்றது. பெரும் பாணாற்றுப்படை *(வரி - 75)* முருகனைக் கடம்ப மரத்திலுறை தெய்வமாக வருணிக்கிறது. புறநானூறும் *(125:20, 120-21, 14-19, 16-12)* அகநானூறும் *(266-21,158-16,)* முருகனைச் 'செருமிகு சேஎய்' எனச் சித்திரிக்கின்றன. சங்ககால மக்கள் முருகனுக்குக் கோட்டம் (கோயில்) அமைத்து வழிபட்டிருக்கிறார்கள். அக்கோயில் மக்களுக்குப் பயம் ஊட்டும் வகையில் அமைந்திருந்ததென 'அணங்குடை முருகன் கோட்டம்' என புறநானூறு 299-6) வருணிக்கிறது. திருச்சீர் அலைவாயிலில் அமைந்திருந்த கோயிலில், ஒளிபரப்பிய வண்ணம் அணையா விளக்கு ஒன்று எரிந்த வண்ணமிருந்த காட்சியை அகநானூறு *(266-20-21)* குறிப்பிடுகிறது.

பண்டைய வழிபாட்டுச் சடங்குகளில் ஆடலும் பாடலும் முக்கிய நிகழ்வுகளாகும். முருக வழிபாட்டிலும் ஆரவாரம் மிக்க ஆடலும் பாடலும் இடம்பெற்றன, காதல் மயக்கம் கொண்ட பெண்களுக்கான சடங்குகள் முருகன் கோயிலில் வேலன் வெறியாட்டு என்ற சடங்குடன் நிகழ்த்தப்பட்டது. அச்சடங்கில் மகளிர் பலர் சேர்ந்து ஆடினர் முழவு அதிர்ந்தது யாழ் ஒலித்தது முரசு அறைந்தனர். அவ்வழிபாட்டு நிகழ்ச்சி ஒரு களிமகிழ்வுச் சடங்காகவே நடத்தப்பட்டமையை பட்டினப்பாலை *(154-158)* விவரிக்கிறது.

ஆறுபடை வீடுகளில் ஒன்றாகிய குன்றுதோறாடல் (திருமுருகு. வரி: 190-217) என்ற இடத்திலிருந்த முருகன் கோயிலில் குரவைக் கூத்தாடுகின்றனர். குறவர் மகளிர் இலைதளிர்களாலும் பூமாலைகளாலும் தம்மை அலங்கரித்து குரவையிட்டு ஆடிப்பாடி வழிபாடியற்றுகின்றனர். அவர்களுடன் சேர்ந்து மலைக் குறவர்களும் ஆடுகின்றனர். மலைக் குறவர்களின் வழிபாட்டில் முருகன் முக்கியத்துவம் பெறுகிறான். நெற்பொரியுடன் ஆட்டுக் கடாவினைப் பலி கொடுத்து வழிபடும் காட்சியும் *(227-239)* வருணிக்கப்படுகிறது. அடுத்ததாக திருமுருகாற்றுப்படை *(47-56)* திருப்பரங்குன்றம் பற்றிக் கூறும்போது முருகனுக்கு பேய்க்கோலம் பூண்ட பெண்ணொருத்தி துணங்கைக் கூத்தாடி சடங்கு நடத்திய வருணனையைத் தருகிறது.

ஆனால் திருமுருகாற்றுப்படையின் பிற்பகுதியில் முருகன் சுப்பிரமணியன் ஆகின்றான். புராணக் கதைகளுடன் தொடர்புபடுத்தப்பட்டு முருகன்ஆரியக் கடவுளாக மாற்றப்படும் போக்குக் காணப்படுகிறது. திருமுருகாற்றுப்படை சங்க காலத்தின் இறுதிக் காலப்பகுதியில் தோன்றியது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. கி.பி. 4 ஆம் 5ஆம் நூற்றாண்டுகளில் ஆரிய வழிபாட்டு முறைகள் தமிழகத்தில் நன்கு நிலைபெற்றுவிட்டமையை திருமுருகாற்றுப்படை விளக்குகிறது எனலாம்.



திருமுருகாற்றுப்படை பாடிய நக்கீரர், தமிழ் மக்களின் பண்டை முருக வழிபாட்டு முறைகளையும், ஆரியரது கடவுளான சுப்பிரமணியர் மீதான வழிபாட்டு முறைகளையும் தவிர்க்க முடியாத நிலையில் கூற வேண்டிய நிலைக்கு ஆளாகியுள்ளார். காலப்போக்கில் முருக வழிபாட்டின் இடத்தை ஆரியக் கடவுளாகிய சுப்பிரமணியர் பெற்றுக்கொண்ட பண்பாட்டு மாற்றம் தமிழ் மக்களிடையே நிகழ்ந்த சமய வரலாறாக அமைகின்றது. ஆயினும் சுப்பிரமணியர் வழிபாடும் கந்தபுராணம் பாடப்பட்ட காலம் வரையுமுள்ள இடைப்பட்ட காலத்தில் செல்வாக்கு இழந்து போனமை ஆச்சரியமாக உள்ளது. தமிழரின் முழுமுதல் கடவுளாகிய முருகனது வழிபாடு மக்களிடமிருந்து நிலையிழந்து போகவே, அந்த இடத்தில் ஆரிய மயப்பட்ட சிவன் திருமால் வழிபாடு இடம்பிடித்துக் கொண்டமை தமிழர் பண்பாட்டு வரலாற்றின் தொடர்கதையாகவும், பண்பாட்டு நிலைமாறு நிகழ்வாகவும் அமைகின்றது.

தொடரும்

"Happy Thai Pongal Vaalthu"

வாங்க மோட்கேஜ் பற்றி பேசலாம் ! !

மோட்கேஜ் கிளினிக்

சனிக்கிழமை வோக் - இன் 9.00 am - 5.00 pm வரை

2 Yr Fixed Rate - 2.59%

(OAC)

தற்பொழுது நீங்கள் வைத்திருக்கும் மோட்கேஜ்
செக்கண்ட் மோட்கேஜ் , லைன் ஒவ் கிரடிட்
எல்லாத்தையும் ஒரு பேமன்ராக மாத்தலாமா ? ?

கொன்சுயுமார் புரபோசலுக்கு கட்ட வேண்டிய காசை
வீட்டுக்குளிருந்து எடுத்து கட்டலாமா ?

நல்ல றேட்டில மோட்கேஜ் இருக்கு ஆனால் பிரேக்
பண்ணாமல் கொஞ்ச காசு எடுக்கலாமா ?


வேற என்னென்ன கடனை ஒரே பேமன்ராக மோட்கேஜுடன் சேர்க்கலாம் ?

சாமத்திய வீட்டுகடன்   சீதனகாசுக்கடன்

மகளின்ர அரங்கேற்ற கடனை மறந்திட்டேனா ? ?


வந்துபேசிப்பாருங்கோ!! பிடிச்சிருந்தா .... மேல பேசுவம்

அழையுங்கள்



416-644-3555

22 ⟵ Ext ⟶ 28



CENTUM Rapid Mortgages Inc.

FSCO LIC # 10156

211-80 Nashdene Road, Scarborough ON M1V 5E4

தயா PK கந்தையா BAS, ABR, AMP
Principal Broker / President
FSCO License # M 08001083
T.P : 416-716-8707


ஜெ. இராசதுரை (Jey) MBA, BBA (Hons), AMP
Team Leader & Agent
FSCO License # M 09001428
T.P : 416-624-4843

Home Trust | Equitable Trust | FirstLine | TD | Scotiabank | CIBC

வெண்கலப் பதக்கம் வென்ற ஹாக்கி குழுவிற்கு கனடா பிரதமர் பாராட்டு

கனடா பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர் கனடா ஹாக்கி வீரர்கள் வெண்கலப் பதக்கம் வென்றதை முன்னிட்டு தனது மகிழ்ச்சியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக கொண்டுள்ளார். ''டீம் கனடா'' எனப்படும் கனடாவின் ஹாக்கி விளையாட்டுக் குழு சமீபத்தில் அல்பர்ட்டாவின் கால்கரியில் நடைபெற்ற 'சர்வதேச ஐஸ் ஹாக்கி' பெடரெசனல் உலக இளநிலை ஹாக்கிப் போட்டியில் பங்குப் பற்றி வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளது.

கனடாப் பிரதமர் ஹார்ப்பர் இது பற்றிய ஒரு அறிக்கையில் தனது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டார். ''உலக இளநிலை ஹாக்கி போட்டியில் 'டீம் கனடா' வெற்றிப் பெற்று வெண்கலப் பதக்கம் வென்றுள்ளதைக் கனடா நாட்டின் அனைத்துப் பிரஜைகளின் சார்பாகவும் பாராட்டுகிறேன்.



தாம் மிகச் சிறந்த உலகின் ஹாக்கி விளையாட்டு வீரர்கள் என்பதை மீண்டுமொருமுறை 'டீம் கனடா' நிரூபித்துள்ளது. இந்த உலகப் போட்டியில் கலந்துக் கொண்டு பதக்கங்கள் வென்று உலகத்தின் கவனத்தைத் தம் பக்கம் ஈர்த்த இதர குழுக்களுக்கும் எனது பாரட்டுக்களைத் தெரிவிக்கின்றேன். இந்த உலக இளநிலை ஹாக்கிப் போட்டியை ஏற்பாடு செய்தவர்களுக்கும், தொண்டு நிறுவனங்களுக்கும், பயிற்சியாளர்களுக்கும், பொறுப்பாளர்களுக்கும் மற்றும் கால்கரி, எட்மண்டன் மக்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கிறேன்.

அடுத்த ஆண்டில் உபா, ரஸ்யாவில் நடைபெறவுள்ள உலக இளநிலை ஹாக்கி ஆடவர் போட்டியிலும் டீம் கனடா வெற்றி பெற வாழ்த்துகிறேன். இவ்வாறு தனது பாராட்டு அறிக்கையில் பிரதமர் ஹார்ப்பர் தெரிவித்துள்ளார்.

கனேடிய செய்திகள்

மத சுதந்திர அலுவலகத்திற்கு கனடா வெளியுறவு அமைச்சர் ஆதரவு



''கனடாவில் மத சுதந்திர அலுவலகம் கனடா மக்களுக்கு மிகுந்த பயனை அளிக்கவல்லது. கனடா மக்களுக்கு என்னவேண்டுமோ அதனை அப்படியே தருவது இந்த அலுவலகம்'' என்கின்றார் கனடாவின் வெளியுறவு அமைச்சர் ஜான்பெயர்டு. இந்த அலுவலகம் உள்நாட்ட அரசியலுக்கான தலமாகவோ அல்லது மதத்தையும் அரசியலையும் தகாத முறையில் கலந்து கொச்சைப்படுத்துகின்ற இடமாகவோ 'மத சுதந்திர அலுவலகம்' இருக்காது என உறுதியளிக்கிறார் வெளியுறவு அமைச்சர் ஜான்.

அவர் மேலும் பத்திரிக்கையாளர்களிடம் இது பற்றி தெரிவிக்கையில் 'மனிதரின் மத உரிமை என்பது முதலானதாகும். மனித உரிமைப்பட்டியலில் இது முதன்மையாக விளங்குகிறது. ஐக்கிய நாடுகளின் பிரகடனத்திலும் மனித உரிமைப் பட்டியலிலும் மத உரிமை முதலிடத்தைப் பெறுகின்றது. இது ஒரு முக்கியமான மனித உரிமையாகும். இது பற்றி எனக்கு எந்தவித சந்தேகமும் ஏற்படவில்லை.

ஒரு ஜனநாயகச் சமுதாயத்தில் கிடைக்கும் நன்மைகள் அனைத்தையும் பெற்றுக் கனடா மக்கள் வாழ்நது கொண்டிருக்கிறார்கள். உலகில் சிறுபான்மை மதத்தினர் அடைந்து வரும் இன்னல்களையும் நான் கண்கூடாகப் பார்த்து வருகிறோம்.

புதிய மத சுதந்திர அலுவலகம் எப்படிப்பட்ட அடிப்படையில் இயங்கும் என்பது விரைவில் வெளியிடப்படும்'' இவ்வாறான தகவல்களை வெளியுறவு அமைச்சர் தெரிவித்ததாக 'கனடா நியூஸ் ரிர்போர்ட்' அறிவித்துள்ளது.

நலவாழ்வுத் திட்ட உதவியைத் தாமே

உணர்ந்த மன்ற உறுப்பினர்

தேசம் அளிக்கின்ற நல உதவிகளைப் பெற்று வாழ்க்கையை மேற்கொண்டால் வாழ்வு எப்படி இருக்கும் என்பதைத் தாமே உணர்ந்தார் புலம் பெயர்ந்த மன்ற உறுப்பினர் ஜக்ரூப் பிரார்.

நலிந்தோர் பெறுகின்ற ஏழ்மைக்கான நல உதவி பெறுவதில் இருக்கின்ற நடைமுறைபி பிரச்சினைகளைத் தெரிந்து கொள்ள விரும்பினார். ச்ரேயை அடித்தளமாகக் கொண்ட மன்ற உறுப்பினர் ஜக்ரூப்.

ஜனவரி 2012ம் மாதத்தை நல உதவியான அறுநூற்றுப் பத்து டாலர்களுடன் கழித்துவிட இவர் சபதம் மேற்கொண் டுள்ளார். அதோடு மட்டுமல்லாமல் இதர மன்ற உறுப்பினர்களையும் இவ் வாறு நல உதவிகளில் பங்கேற்று இதில் இருக்கும் சிரமங்களை நன்றாக முதல் படியாக உணர்ந்திடும்படி அறைகூவல் விடுத்துள்ளார்.

''என்னுடைய குடும்பத்தினர் மற்றும் நண்பர்களின் ஒத்துழைப்புடன் இந்தச் சவாலை நான் ஏற்றுக் கொண்டுள்ளேன். இதன் மூலம் ஒரு லட்சத்து எண்தாயிரம் நலத்திட்டப் பயனாளிகளின் உண்மையான நிலையை உணரக் கூடிய சந்தர்ப்பம் கிட்டுகின்றது'' எனத் தெரிவித்துள்ளார் பிரார்.

''கடந்த ஆண்டுகளில் நான் சமூக ஆர்வலர்களைச் சந்தித்து இந்த விடயங்களைப் பற்றி விவாதிக்கும் சந்தர்ப்பங்களையும் பெற்றுள்ளேன். நல உதவிகளில் வாழ்ந்து வரும் பல மக்களின் கடிதங்களையும், அவர்களின் கண்ணீர்க் கதைகளையும் அறிந்திருக்கிறேன். ஏழ்மை என்பது மனிதரின் சமூகப் பொருளாதார வாழ்விற்கு விடுக்கப்படும் ஒரு சவாலாகும், இது ஒரு சாபக்கேடும் ஆகும்'' என்கின்றார் ஜக்ரூப் பிரார்.

இந்தியாவில் பிறந்த பிரார் கனடாவிற்குக் குடிபெயர்ந்து மணிடோபா பல்கலைக்கழகத்தில் பொது நிர்வாகத்தில் முதுநிலைப்பட்டம் பெற்றார். 1995ம் ஆண்டு முதல் இவர் தமது குடும்பத்துடன் 'பிரிட்டிஷ் கொலம்பியா' வில் வசிதிது வருகிறார்.

இவர் 2004ம் ஆண்டு முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்ற உறுப்பினராகப் பணியாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏர் கனடா ஜெட் விமானத்தில் கோளாறு: அவசரமாக தரையிறக்கம்!

டொரண்டோவிலிருந்து புரோவிடென்ஷியல்சுக்கு சென்று கொண்டிருந்த ஏர் கனடா நிறுவனத்தைச் சேர்ந்த ஜெட் விமானம் ஒன்று எரிபொருள் பிரச்னை காரணமாக கரிபீயன் கடலில் உள்ள தீவில் அவசரமாக தரையிறக்கப்பட்டது.

இந்த விமானம் புரொவிடென்ஷியல்ஸ் தீவுக்கு சென்று கொண்டிருந்த போது விமானக் கட்பனுக்கு ஓர் எச்சரிக்கை கிடைத்தது, உடனே விமானத்தை அவசரமாக கைகோஸ் தீவில் தரையிறக்கினார்.



பின்பு அவசர வண்டிகளை அழைத்து 110 பயணிகளையும் வேறாரு ஏர்பஸ்க்கு மாற்றினார். பின்பு அந்த விமானம் எரிபொருள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இந்த விமானத்தில் ஹைட்ராலிக் கருவிகளில் பிரச்னை ஏற்பட்டதால், விமானம் தொடர்ந்து வெகுதூரம் பறக்க இயலாது என்பதால் வழியில் பாதுகாப்பாக இறக்கினர்.

கனடா பிரதமர் சிறுதொழில் அதிபர்களுடன் வேலைவாய்ப்பை அதிகரிக்க ஆலோசனை

கனடா பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர் சமீபத்தில் வடவான்கூவரில் சிறு தொழில் அதிபர்களைச் சந்தித்து ஆலோசித்தார். இந்தச் சந்திப்பின் போது, சாதகமற்ற உலக பொருளாதார நிலையில் கனடாவின் வேலைவாய்ப்புகளையும் பொருளாதார வளர்ச்சியையும் எவ்வாறு முன்னேற்றுவது என்பது பற்றி விவாதிக்கப்பட்டது.

''இன்றைய நிச்சயமற்ற உலகப் பொருளாதாரத்தில், எமது அரசு குறைந்த வரித் திட்டத்தை அமுல்படுத்தும். இந்தத் திட்டம் நன்கு வேலை செய்து கனடாவின் மக்களுக்கு உதவிகரமாகவும் இருந்துள்ளது. அடுத்த வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் போது அடுத்த கட்டப் பொருளாதார வளர்ச்சிக்கான மக்களின் ஈடுபாட்டை ஏற்படுத்துவோம். கனடாவின் பொருளாதார செயல் திட்டம் மற்றும் கனடாவின் ஸ்திரமான பொருளாதார மற்றும் நிதி அடிப்படைகளினாலும் மற்ற தொழில் வளம் மிக்க நாடுகளைக் காட்டிலும் உலகப் பொருளாதாரப் பின்னடைவை நல்ல முறையில் எதிர்கொண்டு, வெற்றியும் பெற்றுள்ளது. ஜி-7 நாடுகளைப் பொறுத்தமட்டில், வேலைவாய்ப்பில் ஒரு உறுதியான முன்னேற்றத்தைக் கண்டு ஆறு லட்சம் புதிய வேலை வாய்ப்புகளை 2009ம் ஆண்டு முதல் உருவாக்கியுள்ளது. வருகின்ற மாதங்களில் பிரதமரும், இதர அமைச்சர்களும் சிறிய நகரங்கள், பெரு நகரங்கள் முதலியவற்றிற்கு நாடு முழுவதிலும் விஜயம் செய்து, கனடாவின் நீண்டகால பொருளாதாரச் செயல் திட்டம் தொடர்பான கருத்துக்கள் கேட்டறிப்படும்'', என்று பிரதமர் ஹார்ப்பர் தெரிவித்தார்.

எரிபொருள் கொண்டு செல்லப்படும் திட்டத்திற்கு எதிராக கனடாவில் வழக்கு விசாரணை

கனடாவில் நார்தன் கேட்வெ பைல்லென் திட்டத்திற்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டதால் பொது விசாரணை தொடங்கியது.

4300 தனிநபரும், குழுக்களும் இந்த விசாரணையில் தங்கள் கருத்துக்களைப் பதிவு செய்கின்றனர்.

குழாய் வழியாக எரிபொருளைக் கொண்டு செல்லும் இத்திட்டத்தின் மூலம் 5.5 பில்லியன் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். பிரிட்டிஷ் கொலம்பியா வழியாக செல்லும் இந்தக் குழாய்கள் மூலம் ஆசியாவுக்கு எண்ணெய் ஏற்றுமதி செய்யப்படும். ஆனால் பிரிட்டிஷ் கொலம்பியாவில் வாழும் பழங்குடியின மக்கள் இதனால் சுற்றுச் சூழல் பாதிக்கப்படும் என்று எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

செகானி இனக்குழுச் சங்கத்தின் துணைத்தலைவர் கூறுகையில், இது எங்கள் மூதாதையர் வாழ்ந்த பாரம்பரியமான நிலப்பகுதி, எங்களின் வாழிடம், இந்த எரிபொருள் ஏற்றுமதிக்காக எங்கள் நிலத்தின் வளத்தை இழக்க நாங்கள் தயாராக இல்லை என்று தெரிவித்தார். இந்தத் திட்டத்தால் கிடைக்கும் பொருளாதார நலங்களை விட சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்படும் ஆபத்துகளே அதிகம் என்பதை இவர் விளக்கிக் கூறினார்.

இத்திட்டத்தால் உள்நாட்டிலும், உலக அளவிலும் பல அச்சுறுத்தல்கள் இருப்பதாக எரிக் ஸ்வான்ஸன் கூறினார். பெரிய பெரிய பெட்டகங்கள் மூலமாக கடல் வழியே கப்பல்களில் இந்த எரிபொருள் ஆசியாவுக்கு எடுத்துச் செல்லப்படும்.

ஆசிரியர் அரங்கம்!

தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு!

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டுமாயின் ஸ்ரீலங்கா அரசு தமது தற்போதைய அரசியல் நடவடிக்கைகளில் மாற்றத்தினை ஏற்படுத்த முன்வர வேண்டும். அதற்கு ஸ்ரீலங்கா அரசு இணக்கம் தெரிவிக்கும் பட்சத்தில் உலகத் தமிழர் அமைப்பு அரசியல் தீர்வு குறித்து பேச்சுவார்த்தை நடாத்த தயார்.

இவ்வாறு உலகத் தமிழர் அமைப்பு *(The Global Tamil Forum)* ஸ்ரீலங்கா ஊடகங்களுக்கும், சர்வதேச ஊடகங்களுக்கும் ஈ-மெயில் அனுப்பி வைத்துள்ளது. சுமார் மூன்று வருடங்களுக்கு முன்னர் யுத்தம் முடிவடைந்த போதிலும் இனப் பிரச்சினை முடிந்து விடவில்லை.

யுத்தம் முடிவடைந்ததும் ஸ்ரீலங்கா அரசு தமிழ் தேசிய கூட்டணிப் பிரமுகர்களுடன் பேச்சுவார்தைகளை நடாத்தியது. ஆனால் அப்பேச்சுவார்த்தைகளின் போது இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் சாதகமான முடிவு எதனையும் எடுக்கத் தவறி விட்டது.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் நடவடிக்கையினை ஊக்குவிக்கு முகமாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா இவ்வாரம் கொழும்பு சென்றுள்ளார். இத்தருணத்தில் ஆளும் கட்சியினர் தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்பதனை உணர்ந்து பாரம்பரியமாக தமிழ்ப் பேசும் மக்கள் வாழ்ந்து வரும் பிரதேசங்களில் மாற்ற முடியாத சுய ஆட்சியைப் பெறும் உரிமை உடையவர்கள் என்பதனை அங்கீகரிக்க வேண்டும்.

இதனை ஸ்ரீலங்கா அரசு ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் அதனை நேர்மையான முறையில் முற்றாக அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகளுக்கு நாம் எம்மாலியன்ற ஒத்துழைப்பினை வழங்கத் தயாராக உள்ளோம். அத்துடன் ஸ்ரீலங்கா அரசுக்கு ஆதரவளிக்குமாறு சர்வதேச சமூகத்தினரையும் கேட்டுக் கொள்வோம்.

நாம் தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு குறித்து அமெரிக்கா, பிரித்தானியா போன்ற வெளிநாடுகளின் அரசியல் பிரமுகர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தி வருகின்றோம் எனவும் அவர்கள் தமது ஈ-மெயிலில் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் அரசாங்கம் அதற்கு இதுவரையில் அதனை ஏற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ இல்லை. மொத்தத்தில் அதனைப் பற்றி அலட்டிக் கொள்ளவே இல்லை.

மனம் உண்டானால் இடமுண்டு என்பது நூற்றுக்கு நூறு வீதம் உண்மை. மூன்று இனங்களுக்கும் பொருத்மான பொது ஆட்சி முறையினை அமுல்படுத்தி நாட்டில் ஒற்றுமை, அமைதி, ஆனந்தம் ஆகியவற்றினை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் மனதில் வேரூன்றி விட்டால் அது ஆல விருட்சம் போன்று வளர்ந்து அனைவருக்கும் நிழல் தரும் என்பது திண்ணம்.

ஆக்கம்:

இணையாசிரியர், வீரகேசரி மூர்த்தி

ஆசிரியர்,

பவுல்ராஜ் ராஜபாண்டியன்,

'கதிர் ஒளி'

உங்கள் தொடர்புகட்கு:

Kathir Oli Media Inc.
2353 Eglinton Ave - East (Low Level),
Scarborough, On. M1K 2M5
Tel: 416.752.NEWS(6397) / 514.276.4206 (Montreal) /
Fax: 416.752.6399 / Toll free: 1.877.752.6309
kathirolinews1@gmail.com / www.kathirolinews.com /
www.kathiroli.digitalepaper.in

Published by : Kathiroli Media Inc.
Publisher : Vijayaletchumi Hanna
Director & Editor in chief : Rev. Rajapandian Paulraj
Associate Editor: Veera kesary Moorthy Sellathurai
Children's Section: Radha Ram, Canada
Editorial, Layout & Designing : IFS Team-India, email: newssmartinfo@gmail.com
Digital E-Paper : Newssmart, India,
www.newssmart.in,email:digitalepaper@yahoo.com
Printers : Printwell Web Press, Canada
Total Circulation: 20,000 Copies
Annual Subscription in Canada $ 200 and USA $ 250, Other Countries $ 300
Special Writer's : Dr. Balasundaram, Mr. Perri Muthuraman, Sinthanai pookal
Mr. Pathmanathan, Pudhuvai Raman, Mr. K.Kulandaivelu, Guru,
Dr. Paul Joseph and newssmart India & Srilanka.
Distribution : Montrial, Cornwall
GTA, Markham, Missisauga, North York, Brampton: Mr. Ravi Vairamuthu
Ottawa: Mr. Siva

மொன்றியல் தொடர்புகளுக்கு...

மொன்றியல் வர்த்தகர்கள் மற்றும் ஆக்கங்களை எழுதுபவர்களும் மற்ற அனைத்து தொடர்புகளுக்கும் அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்:

சிவா: 1-514-276-4206

தூணாய் நின்ற தமிழன் துரும்பானதற்கான காரணங்கள்

அனலை நிதிஸ் ச. குமாரன்

ஒருவர் மீது பழியைப் போட்டுவிட்டு தப்பிக்கும் தந்திரம் ஒட்டுமொத்த இனத் தையே அழித்துவிடும். பாரம்பரியமிகு தமிழினத்திற்கு இக்கேடு நிகழ்ந்து விடக் கூடாதென்கிற நோக்கில் சமீபத்தில் ஒரு கட்டுரையை தமிழ்த் தேசிய இயக்கத் தலைவர் பழ நெடுமாறன் அவர்கள் எழுதியிருந்தார். அக்கட்டுரையின் தலைப்பு என்னவென்றால், 'தூணாக நின்ற தமிழன் துரும்பானது ஏன்?' இக் கட்டுரையை ஒவ்வொரு தமிழனும் வாசித்து சிந்தித்து செயற்படுவது இக்கால த்தின் இன்றியமையாத கடமையாகும்.

நெடுமாறன் அவர்களின் கட்டுரையை சற்று அலசுவதற்காகவே இக்கட்டுரை எழுதுவதற்கான காரணம். பழ நெடுமாறன் அவர்கள் தனது கட்டுரையில் வட இந்திய ஆதிக்க சக்திகளையும், தற்காலத்து தமிழக அரசியல்வாதிகளை யும் விமர்சித்து எழுதியுள்ளார். ஒவ் வொரு செய்கைக்கும் எதிர்வினை உண்டு. ஒருவரின் ஆக்கத்தை விமர்சிப் பதன் மூலமாக நல்லதொரு சமூகத்தை உருவாக்கலாம்.

தனது கட்டுரையில் நெடுமாறன் அவர் கள் எழுதியுள்ளதாவது: 'இந்திய மக்கள் தொகையில் ஏறத்தாழ பதினாறில் ஒரு பங்கு தமிழர்கள் வாழ்ந்தாலும் அவர் களுக்குரிய அங்கீகாரம் என்பது இந்திய அரசியலில் அளிக்கப்படவில்லை. இந்திய அரசும் சரி, அகில இந்திய அரசியல் கட்சிகளும் சரி தமிழர்களின் தலையாய பிரச்னைகளைக் குறித்துக் கொஞ்சமும் கவலைப்படுவதில்லை.'

நாம் சோம்பேறிகளாக இருக்கும் போது மற்றவன் எம்மை சீண்டிப் பார்த்து க்கொண்டேதான் இருப்பான். அந்த வகை யில், தமிழ் அரசியல்வாதிகளே தமது சுகபோக வாழ்விற்காக தமது குரல்களை எழுப்பாமல் இருக்கும்போது எப்படி நாம் இந்திய மத்திய அரசையோ அல்லது அகில இந்திய அரசியல் கட்சிகளையோ ஆதரவளிக்கும்படி கேட்க முடியும்?'

வெறும் அரசியல்வாதிகளை மட்டும் குற்றம் சொல்லிவிட்டு ஒன்றும் தெரியாத பாப்பாக்கள் மாதிரி தமிழ் மக்கள் இருந் தால் எப்படி நீதியைப் பெற முடியும். நீதியைப் பெற வேண்டுமாயின் ஒட்டு மொத்த தமிழ் மக்களும் ஓரணியில் திரண் டால் அனைத்து அரசியல்வாதிகளும் எமக்குப் பின் வருவார்கள். அரசியல் வாதிகளுக்கு வேண்டியதெல்லாம் மக்களின் வாக்கே. மக்கள் தெளிவாக ஓரணியில் திரண்டால் அரசியல்வாதிகள் எமக்கு ஆதரவாக இருப்பார்கள். மக்கள் சார்பு தன்னலமற்ற அமைப்புக்கள் மற்றும் தமிழ் மக்களின் உயர்வில் அக்கறை கொண்ட அனைத்து இயக்கங் களும் ஒன்றிணைந்து மக்களை ஓரணியில் திரட்டி போராடினால் அனைத்து பிரச் சினைகளும் தீர்ந்துவிடும்.

மற்றவர்களை வாழவைத்தே பழக்கப்பட்ட தமிழினம்

சீனத்து மக்கள் தமக்குள் அதீத ஒற்றுமையைக் கடைப்பிடிப்பவர்கள். தமது இனத்தவர் ஒருவருக்கு தீங்கு விளைந்தால் ஒட்டுமொத்த சீனத்தவர் களும் ஓரணியில் திரண்டு விடுவார்கள். தமிழர்கள் அப்படியல்ல. இன்னொரு தமிழன் அடிவாங்கும் போது மற்றவர் களுடன் இணைந்து தானும் அடித்தே பழக்கப்பட்டுவிட்டான் தமிழன் என்பதே உண்மை. தமிழீழ விடுதலைப் போர் ஆரம்பித்த பின்னர்தான் ஓரளவிற்கு தமிழர்களுக்குள் ஒற்றுமை வந்தது. இவ் ஒற்றுமை என்பது பரிதாபத்தினால் வந் ததே. பரிதாபத்தினால் வந்த ஒற்றுமை காலப்போக்கில் இல்லாமல் போய் விடும்.

தமிழகத் தமிழர்கள் சினிமா மோகத் தில் மூழ்கி இருக்கிறார்கள் என்பதே உண்மை. குடிசையில் வாழ்ந்தாலும், ஒரு வேளைக்கு சாப்பாடு இல்லாமல் இருந் தாலும் தொலைக்காட்சிக்கு முன் உட்கார்ந்து நாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் வெள்ளித்திரை நிகழ்ச்சிகளைப் பார்த்து ஆனந்தம் அடையும் நிலையே தமிழகத்தில் பட்டிதொட்டி அனைத்தும் அன்றாட நிகழ்வுகளாக இருக்கிறது.

ஏழு கோடித் தமிழர்களில் எத்தனை பேர் செய்திகளைப் பார்க்கிறார்கள் என் கிற கேள்வி எழும்போது, விரல்விட்டு எண்ணக்கூடியவர்களே செய்திகளை பார்க்கிறார்கள் என்கிற பதில் வருகிறது. செய்தி நேரம் வந்துவிட்டால் தமக்கு இடைவேளை வந்துவிட்டதாக எண்ணி தமது அன்றாட வேலைகளைச் செய்ய ஆரம்பிக்கிறார்கள் பலர். இதற்கு ஒரு முடிவுகட்ட தமிழ் மக்கள் மீது கரிசனை கொண்ட தலைவர்கள் யாராவது முன் வருகிறார்களா என்று கேட்டால் இல்லை என்று தான் பதில் வருகிறது.

மக்களை வழிநடத்த வேண்டிய அரசியல்வாதிகளே தொலைக்காட்சி நிறுவனங்களை நடத்துவதென்பது வெட்கக்கேடான இன்னொரு விடயம். கேட்டால் தமது கட்சிக் கொள்கையை மக்கள் அறியும் வண்ணம் செய்யவே தொலைக்காட்சிகளை ஆரம்பிப்பதாக கூறுகிறார்கள் குறித்த அரசியல்வாதிகள். குறித்த தொலைக்காட்சிகளில் தமிழரின் கலாச்சாரத்திற்கு எதிரான நிகழ்ச்சிகளை பல மணித்தியாலங்களாக ஒளிபரப்படு கிறது. இதனை யாராலும் மறுக்க முடி யுமா என்று கேட்டால் இல்லை என்று தான் பதில் வருகிறது.

பழ நெடுமாறன் தனது கட்டுரையில் எழுதியுள்ளதாவது, 'தமிழ்நாட்டின் அண்டை மாநிலங்கள் தமிழகத்திலிருந்து உணவுப்பொருள்கள், துணி, சிமெண்ட், மின்சாரம் போன்ற பலவற்றை எவ்வித மான தங்குதடையுமில்லாமல் பெற்றுக் கொள்கின்றன. இயற்கையிலேயே தண்ணீர்ப் பற்றாக்குறையான தமிழகத்துக் குத் தங்களிடம் மிகையாக உள்ள தண் ணீரைக்கூடத் தர அவர்களுக்கு மன மில்லை. பிடிவாதமாக மறுக்கின்றன.'

நெடுமாறன் அவர்களுக்குத் தெரியாத பல விடயங்கள் இருக்க முடியாது. இந்திய அரசியலில் விதை விதைத்து பழம் சாப்பிட்டவர்தான் அவர். ஆகை யினால், இவருடைய ஆதங்கங்களுக்கு காரணம் உண்டு. யாருடைய கட்டுப் பாட்டின் கீழ் பல தமிழக தொழில் நிறுவனங்கள் இருக்கிறதென்று நெடுமாறன் அவர்களுக்கு நன்றாகவே தெரியும். தமிழக மக்கள் இன்றும் தமது மாநிலத்திலேயே அடிமைகளாகத்தான் வாழ்கிறார்கள் என்பதனை யாராலும் மறுக்க முடியுமா?

யூதர்களின் கட்டுப்பாட்டின் கீழ்த்தான் பல நிறுவனங்கள் மேற்கத்தைய நாடு களில் இருக்கின்றன. அதன் காரணத்தி னால் பல உலக நாடுகள் யூதர்களைப் பகைக்க விரும்பவில்லை. சிறிய நாடான இஸ்ரேல் பாலஸ்தீனத்திற்கு எதிராக பல காலங்களாக போரைச் செய்து வருகிறது. பாலஸ்தீனர்களின் தாயகப் பூமியை அபகரிக்கும் நடவடிக்கைகளை உலக நாடுகள் அறிந்தும் யூதர்களைப் பகைக்கக் கூடாது என்கிற காரணத்தினால் இஸ்ரேலு க்கு ஆதரவாக குரல் கொடுக்கிறார்கள். அதைப்போலத்தான் யாரின் கையில் அதிகாரங்கள் இருக்கிறதோ அவர்கள் செய்யும் ஒவ்வொரு விடயத்தையும் கண் டும் காணாமல் இருந்தால்த்தான் தமிழகத் தமிழர்கள் வாழலாமென்கிற நிலையே இன்று தமிழகத்தில் நிலவுகிறது.

தமிழகத்திலிருந்து உணவுப்பொருள் கள், துணி, சிமெண்ட், மின்சாரம் போன்ற பலவற்றை எவ்விதமான தங்குதடையு மில்லாமல் அண்டை மாநிலங்களுக்கு செல்வதை தமிழக மக்கள் தடுக்க முடி யாது. ஆதிக்கத்தை தம் கையில் வைத் துள்ளவர்கள் இயற்கையாகக் கிடைக்கும் தண்ணீரைக் கூட தடை செய்யலாம்.

அண்டை மாநில மக்களே முன் நின்று தடுக்கும் நிலை வந்ததற்கு காரணம் குறித்த மாநிலங்களில் இயங்கும் வல்லா திக்கம் படைத்த நபர்களே. தமிழகம் சொல்வதைக் கேட்க வேண்டிய அவசி யம் மத்திய அரசிற்கு இல்லை. கேரளம் என்ன சொல்கிறதோ அதனை உடனேயே அமுல்ப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் மத்திய அரசு இருக்கிறது. மலையாளி களின் ஆதிக்கம் இந்திய நடுவன் அரசில் மித மிஞ்சிப்போய் இருக்கிறது என்பதை யாராலும் மறுக்க முடியுமா? சீக்கியர் சொல்வதை மத்திய அரசு கேட்டே ஆக வேண்டிய சூழ்நிலை. சீக்கியர் இல்லை யென்றால் இந்திய இராணுவம் பலமற்ற தாகப் போய்விடும்.

வந்தோரை வாழ வைப்பதே தமிழ் நாடென்று பழமொழிகளைக் கூறிக் கொண்டு சோம்பேறிகளாக வாழ்பவர் களே தமிழர்கள் என்றால் மிகையாகாது. மக்களை வழி நடத்த முற்போக்கு சிந்தனையாளர்கள் முன்வர வேண்டும். மக்களுக்கு தகுந்த படிப்பினைகளைக் கொடுத்து அவர்களைச் சிறந்த பிரஜை களாக ஆக்க வேண்டிய பொறுப்பு முற்போக்குவாதிகளுக்கு உண்டு.

நெடுமாறன் போன்றவர்களின் தலைமையில் இளைஞர் மற்றும் யுவதி கள் பட்டாளம் ஒன்றிணைய வேண்டும். திருவள்ளுவர் போன்ற மகான்களைப் போற்றுவதற்குப் பதில் ஷேக்ஸ்பியர் போன்றவர்களை புகழ்பாடுவதுதான் தமிழர்களின் வழக்கம். இதன் மூலமாக தமிழையும் தமிழர்களையும் நாமே ஓரம் கட்டுகிறோம் என்றே பொருள். அனைத்தையும் அறிவதில் எந்தவிதமான பிழையும் இல்லை. எம்மை நாம் தாழ்த் திக் கொண்டு மற்றவர்களை உயர்த்திக் காட்டுவதுதான் நமது பண்பாடாக இருக் கிறது.

தமிழர்களின் பங்கு அளப்பரியதே

இந்திய விடுதலைப் போரில் தமிழகம் செலுத்தியிருக்கிற பங்கு அளப்பரியதா கும் எனக் குறிப்பிட்டுள்ளார் நெடுமாறன். அவர் மேலும் கூறுகையில், 'தென்னாப்பிரிக்காவில் வழக்கறிஞராகப் பணியாற்றிய மோகன்தாஸ் காந்தியின் அறப்போராட்டங்களுக்குத் துணையாக நின்று அவரை மகாத்மா காந்தியாக ஆக்கி யவர்கள் தமிழர்கள். அவர் அழைப்பை ஏற்றுச் சிறை புகுந்தவர்களில் பெரும் பாலோர் தமிழர்கள். அவர்களில் ஒருத்தி யான தில்லையாடி வள்ளியம்மை தனது உயிரைத் தியாகம் செய்து காந்தியடிகளின் அறப்போராட்டத்துக்கு முக்கியத்து வத்தை ஏற்படுத்தினார்.'

'தமிழ்நாட்டைச் சேர்ந்த ராஜாஜி, சத்தியமூர்த்தி, காமராஜ் போன்ற பல தலைவர்களும் எண்ணற்ற தொண்டர் களும் காந்தியடிகளை உளமாறப் பின் பற்றி எண்ணற்ற தியாகங்களைச் செய் தார்கள். அண்ணலின் அழைப்பையேற்று அறப்போரில் தடியடிக்கு ஆளாகி உயிர் நீத்தான் திருப்பூர் குமரன். நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சிங்கப்பூரில் முதலாவது இந்திய சுதந்திர அரசை நிறுவி, இந்திய தேசிய ராணுவத்தை அமைத்தபோது அவ ருக்குத் தோள்கொடுத்துத் துணை நின்ற வர்களில் பெரும்பாலோர் தமிழர்கள்.'

நெடுமாறன் அவர்களின் கூற்றுக்கள் அனைத்துமே உண்மையே. இருப்பினும், தமிழர்கள் அன்றும் காந்தி போன்றவர் களுக்கு அடிமைகளாக இருந்தார்கள் என் பதே உண்மை. நேரு இரண்டாம் நிலை யில் இருந்து போராடினார். காந்திக்கு பல வழிகளில் உதவிய தமிழர்களை நேரு இருந்த இடத்திற்கு அண்மையில் கூட வைத்திருக்கவில்லை காந்தி. வெறும் போராட்ட சக்திகளாகவே தமிழர்களைப் பாவித்தார்களே தவிர தமிழர்களை உயர் நிலையில் வைத்திருக்க வேண்டுமென் பதற்காக வைத்திருக்கவில்லை.

நெடுமாறன் மேலும் எழுதியுள்ளதா வது, 'முதலாவது சுதந்திர இந்திய அரசு அமைக்கப்பட்டபோது நிதியமைச்சர் பொறுப்பைத் தமிழரான ஆர்.கே.சண்முகம் செட்டியாரிடம் பிரதமர் நேரு ஒப்படைத்ததைத் தொடர் ந்து, முதலாவது கவர்னர் ஜெனரலாக ராஜாஜி, மத்திய அமைச்சர்களாக டி.டி.கிருஷ்ணமாச்சாரியார், ஓ.வி. அளகேசன், ஆர். வெங்கட்ராமன், சி. சுப்பிரமணியம் போன்ற பலர் பெரும் பொறுப்புகள் வகித்துச் சிறப்பாகத் தொண்டாற்றி தமிழகத்துக்குப் பெருமை ஈட்டிக்கொடுத்தார்கள்.'

'அவர்களுடன் நமக்குக் கருத்து மாறு பாடு இருக்கலாம். ஆனால், அவர்கள் ஒருபோதும் தமிழுக்கோ, தமிழினத் துக்கோ, தமிழகத்துக்கோ சிறுமை தேடித் தரவில்லை. அகில இந்திய கட்சிகளின் தலைவர்களாகவும் பல தமிழர்கள் சிறந்து விளங்கினார்கள். காங்கிரஸ் தலைவராகக் காமராஜ், முஸ்லிம் லீக் தலைவராக 'காயிதே மில்லத்' முகமது இஸ்மாயில், பார்வர்ட் பிளாக் கட்சித் தலைவராக உ. முத்துராமலிங்கத்தேவர் மற்றும் பி.கே. மூக்கையாத் தேவர் போன்ற பலர் பொறுப்பு வகித்து அந்த பதவிகளுக்குப் பெருமை தேடித் தந்தார்கள்.'

நெடுமாறன் அவர்கள் கூறுவது நூற்று க்கு நூறு சதவீதம் உண்மையே. எதற்காக தமிழர்களுக்கு நேரு அவர்கள் முக்கியத்து வத்தை தனது அரசாங்கத்தில் அளித்தார் என்பதை ஆராய வேண்டும். சீக்கியர் மற்றும் மலையாளிகளின் அதிகாரங்கள் இன்று எந்தவகையில் அகில இந்திய அளவில் இருக்கிறதோ, அதைப் போலத் தான் அன்று தமிழர்களின் பலம் இருந் தது. தமிழர்கள் பல நாடுகளில் பணி யாற்றிக் கொண்டிருந்தார்கள். அவர்களு டைய செல்வாக்கு இந்திய நாட்டிற்கு அன்று தேவைப்பட்டது.

நேரு அவர்கள் பரந்த சிந்தனையுட னேயே அவ்வாறான நிலையை அன்று எடுத்தார். இந்து சமுத்திரத்தின் குரல் வளையாக இருப்பது தமிழகம். பூகோள அரசியல் மற்றும் இராணுவ நலன்களுக்கு ஏற்ற இடமாகவே தமிழகம் இன்றும் இருக்கிறது. இந்திய இராணுவப் பல த்தை அதிகரிப்பது என்பது இன்றியமை யாத தேவையாக அன்று இந்திய நடுவன் அரசிற்கு இருந்தது.

ஒட்டுமொத்த இந்து சமுத்திரத்தையும் இந்திய கடற்படை தனது கட்டுப்பாட் டின் கீழ் வைத்திருக்க வேண்டுமென்பது நேருவின் கனவு. இதனை நிறைவேற்ற தமிழகத்தின் ஆதரவு தேவை. இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேசியா, பிஜி, மொரிசியஸ், பர்மா, தென் ஆபிரிக்கா, அந்தமான்ஃநிகோபார் போன்ற இடங்களில் தமிழர்களின் பிரசன் னம் அதிகமாக இருந்தது. அவர்களின் கடினமான உழைப்பினால், குறித்த நாடுகள் பொருளாதார ரீதியில் பல அனுகூலங்களை அனுபவித்தார்கள். இவ் மக்களின் செல்வாக்கை வைத்தே இந்தியாவின் உலக நாடுகளுடனான இராஜதந்திர நல்லுறவை மேம்படுத்த லாம் என்பதை அன்று நன்கே உணர்ந்தார் நேரு.

காலம் இன்று மாறிவிட்டது. உலகின் முக்கிய சக்தியாக இன்று இந்தியா வளர்ந் துள்ளது. தமிழர்களின் தயவின்றி தனது செல்வாக்கை உலக அளவில் இன்று இந்தியா வைத்துள்ளது. தமிழர்களின் கடின உழைப்பு இன்று இந்திய அரசிற்கு தேவையில்லை. அன்று மக்கள் செய்த வேலைகளை இன்று இயந்திரங்கள் செய் கின்றன.

தமிழர்கள் இன்று வேண்டப்படாத இனத்தவராகவே இந்திய நடுவன் அரசி னால் பார்க்கப்படுகிறார்கள். இவர்களின் வாக்குகள் கூட இந்திய தேசியக் கட்சி களுக்கு இல்லையென்கிற நிலையே தமிழகத்தில் நிலவுகிறது. ஆக தமிழர் களை முன்னர் நன்றாகவே கசக்கி பிழிந்து அனைத்து சக்திகளையும் எடுத்துவிட்டு அவர்களை இக்கட்டான நிலைக்குள் தள்ளிவிட்டார்கள் பிற இனத்தவர்கள் என்பதே உண்மை. தமது இனத்தின் மீது பற்று அற்றவர்களாகவேதான் இன்றும் பல கோடித் தமிழர்கள் இருக்கிறார்கள்.

தூணாய் நின்ற தமிழன் துரும்பானதற்கான காரணங்கள் பல. இந்திய அரசியல்வாதிகளை மட்டும் குறைகூறிவிட்டு நாம் தப்பிக்க முடியாது. நமக்கு புண் வந்துவிட்டால் நாமேதான் மருத்துவமனை சென்று மருத்துவரைப் பார்க்க வேண்டும். நாம் வீட்டிற்குள் சோம்பேறிகளாக தூங்கிக் கொண்டிருந்துவிட்டு மருத்துவர் நமது வீடு வந்து புண்ணுக்கு மருந்து கொடுப்பாரென யதார்த்தத்திற்கு ஒத்துவராத கனவைக் காண்பது முட்டாள்த்தனம். நமது உரிமைகளை நிலைநாட்ட நாமே களம் காண வேண்டும். மற்றவர்கள் அதனை நமக்கு கொண்டுவந்து தரமாட்டார்கள் என்பதை தமிழ் மக்கள் அனைவரும் உணர்ந்தால் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைத்துவிடும்.

---இக்கட்டுரையின் தொடர்ச்சி அடுத்த வாரம்---

மனிதர்களிடம் கருணை காட்டாதவர்களுக்கு, இறைவனும் கருணை காட்டுவதில்லை. - சேத்ரக்ஞர்

புது அடுப்பு, புதுப்பானை, மஞ்சள், கரும்பு, பொங்கலோ! பொங்கல்!!

'கதிர் ஒளி' வாசகர்கள் அனைவருக்கும் தமிழர்த்திருநாளாம் இப்பொங்கல் திருநாளில் எங்கள் நல் வாழ்த்துக்கள். இந்த நாளை தமிழர்த் திருநாளென்றும், உழவர்த் திருநாளென்றும், சொல்லி வந்த தமிழர்களாகிய நாம், கடந்த இரண்டு வருடங்களாக இந்நாளை தமிழ்ப் புத்தாண்டு பிறப்பு நாளாகவும் அனுசரித்து வருகிறோம். மொத்தத்தில் இது ஒரு இனிமையான நாளாகும். காரணம் பால் பொங்கல், சர்க்கரைப் பொங்கல், இனிமையான கரும்பு போன்ற உணவு வகைகள் இந்நாளில் முக்கிய இடம் பெறுகின்றன. இந்நாளை மங்களகரமான நாளாக்க மஞ்சல் குலை பயன்படுத்தப்படுகிறது. ஆகையால் இந்நன்நாளில் பொங்கல் நாளில் பயன் படுத்தப்படும் புது அடுப்பு, புதுப்பானை, மஞ்சள், கரும்பு ஆகிய பொருட்களுக்கும் நமது ஆன்மீக வாழ்வுக்கும் என்ன சம்பந்தம் என இங்கு ஆராய்ந்து பார்ப்போம்.

பொதுவாக தமிழர்களாகிய நாம் தெய்வ பக்தியில் சிறந்தவர்கள். காரணம் கடவுளுக் கென்று நாம் எதைக் கொடுக்க முற்பட்டாலும், நம்மிடம் இருப்பதிலேயே சிறந்த, சுத்தமான பொருளைத்தான் கொடுக்க முன் வருவோம். ஆகவேதான் பொங்கல் திருநாளிலும் நம்முடைய முன்னோர்கள் உட்பட இந்நாள்வரையிலும், கடவுளுக் கென்று படைக்கப் போகும் உணவு வகைகளை சமைக்கவும் புது அடுப்பு, புதுப் பானை, தோட்டத்தில் விளைந்த புது மஞ்சள் குலை, புது கரும்பு, புது அரிசி என தெரிவு செய்து படைக்கிறோம். இவைகளை புதிதாக விளைந்தவை அல்லது துாய்மையானவை என்பதற்காக மட்டும் நாம் படைப்பதில்லை. இவைகளையெல்லாம் நமக்காக விளையச் செய்த அந்தக் கடவுளுக்கு நன்றி கூறும் விதத்திலும் படைக்கிறோம். இப்பகுதியில் கடவுள் நாம் படைக்கும் பொருட்களின் தன்மையைப்பார்க்கிறாரா அல்லது இவைகளைப் படைக்கும் மனிதர்களாகிய நம்முடைய உள்ளங்களைப் பார்க்கிறாரா என்பதைப் பற்றி சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

புது அடுப்பு:



கற்கால நாகரீக நாட்களில் சிக்கி முக்கி என்ற கற்களை ஒன்றோடொன்று உரசி நெருப்பை உண்டாக்கி இந்த நெருப்பில் வேட்டையாடின மிருகங்களையும், பறவைகளையும் சுட்டு சாப்பிட்டு ஜீவித்தார்கள். நாகரீகம் கொஞ்சம் வளர்ந்து வந்த காலங்களில் கற்களை ஒன்றின் அருகில் ஒன்றாக அடுக்கி அவைகளில் காட்டு மரக்கட்டைகளை வைத்து நெருப்பை உண்டாக்கி சமைக்க ஆரம்பித்தார்கள். இந்தக் காலத்தை கற்காலம் என்றும் சொல்வார்கள். அதாவது கற்களை அடுப்பாக மட்டும் பயன்படுத்தவில்லை. கற்களை கூர்மையான ஆயுதங்களாகச் செய்து மிருகங்களை வேட்டையாடவும், யுத்தத்திற்கும் பயன்படுத்தினார்கள். கற்காலம் மங்கி பொற்காலம் வந்தபோது நமது முன்னோர்கள் நாகரீகத்தில் வளர்ச்சியடைந்து ஆடைகள் அணியவும், பொன் ஆபரணங்களை அணியவும், பழகிக் கொண்டார்கள். இப்படியாக கல் அடுப்பு அச்சியில் வார்க்கப்பட்ட மண் அடுப்பாக மாறியது. 20 ஆம் நுாற்றாண்டில் மண் அடுப்பு மாறி இரும்பு அடுப்பாகவும், நாளடைவில் வாயு (Gas) அடுப்பாகவும் மாறியது. 21 ஆம் நுாற்றாண்டில் வித விதமான மின்சார அடுப்புக்களும், எலக்ரானிக் என்று சொல்லப்படும் மின்னனுக்களால் சமைக்கக்கூடிய மைக்ரோவேவ் என்ற உபகரணமாகவும் மாறிவிட்டது. இவையெல்லாம் இருந்தும், இப்பொங்கல் திருநாளில் நாம் புது அடுப்புகளில் சமைத்து கடவுளுக்கு படைக்கிறோம். ஆனால் இன்னும் நமது எதிராளிகளைப்பற்றிய எரிச்சலை நமது உள்ளத்தைவிட்டு அகற்றவில்லை. காரணமில்லாமல் கணவன், மனைவி சண்டையிட்டுக்கொண்டு அந்தக் கோபத்தை நெகிழ்ந்து விடாமல், அடுப்பைவிட இன்னும் அதிகமான உஷ்ணமாக நமது உள்ளங்களை வேகவைத்துக் கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட எரிச்சலோடு நாம் புத்தம் புது அடுப்பில் சமைத்து கடவுளுக்குப்படைத்து என்ன பயன்? பரிசுத்த வேதாகமத்தில் மத்தேயு 5:44ல் வாசிக்கிறோம் 'உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்: உங்களை சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்: உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்: உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்'. சத்துருக்களை மன்னித்து, சிநேகிக்க வேண்டிய நாம் கணவன் - மனைவி உறவில் பகையாயிருக்கலாமா? எபேசியர் 4:26ல் 'நீங்கள் கோபங் கொண்டாலும் பாவம் செய்யாதிருங்கள்: சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தனியக்கடவது. எபேசியர் 4:31ம் வசனத்தில் ' சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், துாஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது' என வாசிக்கிறோம். அதாவது குடும்பத்தில் ஏற்படுகின்ற சண்டைகளை சூரியன் மறையும் முன்னமே மன்னித்து மறந்து படுக்கச் செல்லும்போது சமாதானமாகச் செல்ல வேண்டும். ஆகையால் இந்தப் பொங்கல் திருநாளில் அடுப்புக்களை புதிதாக்கும் முன் நமது இதயமாகிய அடுப்பைச் சுத்தம் செய்வோம். அப்போது நாம் கடவுளுக்குப் படைக்கும் உணவுகளை அவர் ஏற்றுக் கொள்வார். ஏனெனில் நமது இதயமாகிய அடுப்பில் நெடுநாட்களாக எரிந்து கரியாக மாறிய அசுத்தங்களைத் துாய்மைப்படுத்தாமல் பொங்கல் கொண்டாடுவதில் பிரயோஜனமில்லை.

புதுப்பானை:

நம்முடைய வீட்டில் எத்தனையோ விலை உயர்ந்த வெள்ளிப்பாத்திரங்கள், பித்தளை, அலுமினியம் என்று வித விதமான பாத்திரங்கள் இருந்தாலும் பொங்கல் நாளில் புதிய மண் பானைகளைத்தான் உபயோகிக்கிறோம். இது ஒரு தொண்டு தொட்டு வருகின்ற வழக்கமாயிருக்கிறது. நமது இல்லங்களில் எத்தனையோ வித விதமான பாத்திங்கள் இருந்தாலும் பால் காய்ச்சுவதற்குத் தனியாக ஒரு பாத்திரம் வைத்திருக்கிறோம். அது போலத்தான் இந்த பொங்கல் நாளிலும் நாம் பாத்திரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம். இதைவிட, கடவுள் தம்மால் படைக்கப்பட்ட மண்பாண்டங்களாகிய நமக்கு மிக முக்கியத்துவம் கொடுத்து வைத்துள்ளார்.

ஆதியாகமம் 2:7ல் வாசிக்கிறோம் ' தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்'. அதாவது ஜீவன்-ஆத்துமா உருவானது. இவ்விரண்டும் ஒன்றோடொன்று தொடர்புடையது. கடவுள் தாம் மனுஷனுள் ஊதிய ஆவியை எடுக்கும் போது ஜீவனும் - ஆத்துமாவும் இணைந்தபடியே ஆண்டவரிடம் சென்று விடும். அப்போதுதான் மனிதன் மரண நிலையை அடைகிறான். இந்த ஜீவனையும் ஆத்துமாவையும் எந்த மருத்துவரும் அல்லது விஞ்ஞானியும் பிடித்து வைக்க முடியாது. காலம் வரும்போது ஆவி தன்னைத்தந்த தேவனிடத்திற்குச் சென்று விடும். அது மீண்டும் பூமிக்கு வருவதில்லை. மனிதன் ஒருதரம் பிறப்பதும் பின்பு நியாயத்தீர்படைவதும் அவனுக்கு நியமிக்கப்பட்டாயிற்று.

ஆகையால் இங்கே நான் குறிப்பிட விரும்புகின்ற கருத்து என்னவென்றால், நாம் ஒவ்வொருவரும் மண் பாண்டங்களாக கடவுளின் கையால் உருவாக்கப்பட்டுள்ளோம் என்ற உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும். வாழ்நாள் முழுவதும் இந்த உண்மையை நாம் மறக்கக்கூடாது. மண் சட்டியை நாம் கீழே போட்டாலோ அல்லது ஏதாவது ஒரு பொருளின்மேல் மோதினாலோ அது எளிதில் உடைந்து விடும். இதுபோலத்தான் நமது சரீர வாழ்க்கை. ஏதாவது ஒரு பாவ செயலுக்குள் நாம் நுழையும் போது பாவமற்ற நம் சரீரம் பாவத்திற்குள்ளாகி, தேவ மகிமையை இழந்து அசுத்தமாகி விடுகிறோம். அதாவது அடுப்பில் அடிக்கடி வைக்கப்பட்ட மண் பானை எப்படி கரி பிடித்து கருப்பாகி விடுகிறதோ அப்படித்தான் நம் ஒவ்வொருவரின் வாழ்க்கையும் இருக்கிறது. இந்தக் கரியைச் சுத்தப்படுத்திதான் நாம் கடவுளுக்குப்பிரியமானவர்களாக மாற முடியும். ஆதியிலே தேவ சாயலைப்பெற்ற நமது ஆதி தாய் தகப்பனான ஆதாமும் ஏவாளும் கீழ்ப்படியாமையினாலே பாவக் கறையானார்கள். அந்தப்பாவக்கறையைப் போக்கத்தான் கடவுள் மனித அவதாரம் எடுத்து இரட்சகராக அதாவது இயேசுகிறிஸ்துவாக உலகில் பிறந்தார். இதைக்குறித்து பவுல் அப்போஸ்தலன் 1தீமோத்தேயு 1:15ல் 'பாவிகளை இரட்சிக் இயேசுகிறிஸ்து உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்பிற்கும் பாத்திரமுமானது, அவர்களில் பிரதான பாவி நான் என்று தன்னையும் சேர்த்து கூறுகிறார். ஆகையால் தேவன் ஒருவர் தவிர பாவமில்லாத மனுஷர் ஒருவருமே உலகில் இல்லை. எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களானோம் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகிறது. கலாத்தியர் 5:19-21 வரை வாசிப்பீர்களானால் என்னென்ன பாவங்கள் நம்மை ஆட்கொண்டு கறைப்படுத்தியுள்ளது என்று அறிந்து கொள்வீர்கள். அதாவது' மாமிசத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன, அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரக ஆராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்க பேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுக்கள் முதலானவைகளே: இப்படிப்பட்டவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். புரம குயவனாகிய அவர் மண் பாண்டங்களாகிய நம்மை தம்முடைய பிரயோஜனத்திற்கென்று உருவாக்கினார். ஆனால் நாம் இவ்விதமான பாவங்களைச் செய்து தேவ மகிமையை இழந்து விட்டோம். மீண்டும் அவர் நம்மை தமக்குப்பிரியமான நல்ல மண்பாண்டமாக வணைய விரும்புகிறார். ஆனால் இன்றைய மனித சமுதாயம் அதற்கு இடம் கொடாமல் கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என வாழ்ந்து கொண்டிருக்கின்றது.



எரேமியா 18:1-4 வரையிலுள்ள வசனத்தைப்படித்துப் பாருங்கள். எரேமியா என்ற தீர்க்கத்தரிசி கடவுளுடைய சத்தத்தைக் கேட்டார். அவருக்கு கடவுளிடமிருந்து ஒரு கட்டளை பிறந்தது. நீ எழுந்து ஒரு குயவன் வீட்டிற்குப் போ அங்கே என் வார்த்தைகளை உனக்குத்தெரிவிப்பேன். ஆப்படியே எரேமியாதீர்க்கத்தரிசி ஒரு குயவன் வீட்டிற்குப் போனார். அங்கே ஒரு குயவன் ஒரு பானையை வணைந்து கொண்டிருந்தான். அது அந்தக் குயவன் கையிலேயே கெட்டுப்போயிற்று. மீண்டும் அந்தக் குயவன் தன் கையிலிருந்த களி மண்ணை மற்ற மண்களோடு போட்டு குளைத்து பின்பு அந்த திருத்தப்பட்ட மண்ணினாலே வேறே பாண்டம் வணைந்தான். இது போலத்தான் நம் கடவுளும் நம்மை அழிக்க விரும்பாமல் திருத்தி எடுத்து தமக்குப்பிரியமான நல்ல பாண்டமாக வணைய விரும்புகிறார். ஆகையால் இந்தத் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளில் மண் பாண்டமான நமது சரீரத்தை இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் சுத்திகரித்துப் புது பானையாக மாற்றி, அவருக்குப் பிரியமான இனிய உணவாக நம் ஒவ்வொருவரின் வாழ்வையும் மாற்றியமைத்துக் கொள்வோம்.

புது மஞ்சள்:

பொங்கல் திருநாளில் அனைவர் இல்லங்களிலும் புது மஞ்சள் குலையை வைத்து பூஜை செய்கிறோம். பொதுவாக மஞ்சள் மங்கலகரமான காரியத்தை நமக்கு நினைவூட்டும். இந்த மஞ்சலில் மிக முக்கியமான அம்சங்கள் அடங்கியுள்ளன. 1) மங்கலகரமானது, 2) முகத்திற்கு அழகைக் கொடுக்கிறது, 3) இது ஒரு கிருமி நாசினி. நான் சிறுவனாயிருந்த காலத்தில் எனது தாய், சகோதரி குளிக்கும்போது முகத்திற்கு மஞ்சள் பூசித்தான் குளிப்பார்கள். அவர்கள் இன்னை பெண்மணிகளைப் போல பலவித அலங்காரப் பொருட்களை முகத்தில் பூசுவதில்லை. ஆனால் அவர்கள் முகங்களில் ஒரு பிரகாசமும் பழ பழப்பும் காணப்பட்டது. இன்றைய சகோதரிகள் எத்தனையோவித விதமான அழகு சாதனங்களைப் பூசியும் பருக்களும், குண்டும் குழியுமான, துாங்கி வழியும் முகமுமாயிருக்கிறார்கள். காரணம் என்ன? அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள். அதாவது அவர்கள் இருதயத்தில் நிம்மதி, சமாதானமற்ற நிலை. குடிகார கணவரால், கீழ்ப்படியாத பிள்ளைகளால், வருமானக் குறைவினால், கடன் தொல்லை நெருக்கங்களினால், பீடித்துள்ள நோயினால் ஏற்படுகின்ற வேதனைகள்தான் இதற்குக்காரணம். இதிலிருந்து நாம் விடுதலை பெற என்ன செய்ய வேண்டும்? கடவுளிடம் எங்கள் வாழ்க்கையை முற்றிலும் ஒப்புக்கொடுக்க வேண்டும். இதை நீங்கள் செய்யும்போது மஞ்சள் எப்படி மங்களகரமாகக் காட்சியளிக்கிறதோ அது போல உங்கள் வாழ்க்கை மங்களகரமாக மாறும். உங்கள் முகக்களையைப்பார்க்கின்றவர்கள் உங்களுக்குள்ளிருக்கின்ற அந்தக் கடவுளுடைய சாயலை உங்கள் மூலம் கண்டு களிகூறுவார்கள். உங்களுக்குள்ளிருக்கின்ற பாவ கிருமி நாசினிகள் விலகி ஓடிப் போகும். உங்கள் வாழ்வில் சுபிட்சம் உண்டாகும். இதுதான் உண்மையான தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் நாள். இந்நாளில் நீங்கள் அனைவரும் உங்கள் குடும்ப சகிதங்களோடு மகிழ்ச்சியாக இந்நாளைக் கொண்டாட இறைவன் இயேசு கிறிஸ்து ஆசீர்வதிப்பார் என வாழ்த்தி விடைபெறுகிறேன். மீண்டும் அடுத்த இதழில் இனிப்பான கரும்பைக்குறித்துத் தியானிப்போம். இந்தப் பொங்கல நாளில் நீங்கள் சுவைத்த கரும்பு ருசியும், அடுத்த இதழில் நாம் தியானிக்கப் போகின்ற கரும்பின் ருசியும் எப்படி இருக்கிறதென்று அறிந்து கொள்வோம்.

உங்கள் குடும்பத்தின் ஆசீர்வாதங்களுக்காக இயேசுமாறாதவர் திருச்சபை போதகரும், விசுவாசிகளும் ஜெபிக்கிறோம். நீங்கள் நோய் நொடி, கவலையின்றி பல்லாண்டு காலம் மகிழ்ச்சியாய் வாழ ஆண்டவர் அருள் புரிவாராக. உங்களுடைய ஜெபத்தேவைகளுக்கும், ஆவிக்குரிய ஆலோசனைகளுக்கும், மருத்துவமனையில் வியாதியாயிருக்கின்ற உங்கள் குடும்பத்தைச்சார்ந்த யாருக்காகிலும் நாங்கள் வந்து ஜெபிக்க வேண்டும் என்று நீங்கள் விரும்பினாலும் எங்களை அழைக்கலாம். தொலைபேசி எண் (647) 856-0264.

போதகர் ஜோன் ஆபிரகாமுக்காக ஜெபித்த அனைவருக்கும் அவர் சார்பிலும், கதிர் ஒளி சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். போதகர் அவர்கள் இருதய சிகிட்சை சுகம் பெற்று, தன் இல்லம் வந்து ஊழியத்திலும் கலந்து கொண்டார்.

இயேசுவுக்கே! நன்றி.

தமிழ் மொழி எம் அனைவரையும் ஒன்றிணைப்பது! தமிழ் மரபுத் திங்கள் விழாவில் தமிழ் எம்.பி.றாதிகா



'தமிழ் மொழி சமயத்தையும், கலாச்சாரத்தினையும் மாத்திரம் கொண்ட மொழியல்ல. வீரமும், வெற்றியும் கொண்ட மொழி. பல்வேறு கண்டங்களிலும் பிரிந்து வாழும் எங்கள் அனைவரையும் ஒன்றிணைக்கும் மொழி. தமிழ் மொழியையும், தமிழ்க் கலாச்சாரத்தினையும் நாம் அனைவரும் பேணிப் பாதுகாக்க வேண்டும்'.

நோத் யோர்க் நூலகத்தில் கடந்த வியாழக்கிழமை மாலை நடைபெற்ற தமிழ் மரபுத் திங்கள் தொடக்க விழா வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழ் எம்.பி.றாதிகா சிற்சபைஈசன் இவ்வாறு கூறினார்.

இவ்வைபவத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய மார்க்கம் மாநகர சபையின் தமிழ் உறுப்பினரான திரு.லோகன் கணபதி பேசுகையில், நான் மாநகர சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட 2006ம் ஆண்டிலிருந்து தமிழர் திருநாளான தைப்பொங்கல் திருநாளை தமிழர்களின் மரபு நாளாக மாநகர சபை யில் பிரகடனப் படுத்த முயற்சி மேற்கொண்டு வந்தேன். அது தற்போது தான் நிறை வேறியுள்ளது. அதற்காக நான் மாநகர சபை அங்கத்தவர்கள், மேயர் ஆகிய அனைவருக்கும் எனது நன்றியையும், பாராட்டினையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். இவ்வைபவத்தில் மூன்றாம் வகுப்பு மாணவி தமிழில் சிறப்பாக உரையாற்றியதைக் கண்டு நான் மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். எமது அடுத்த சந்ததியினர் தமிழ் கலை கலாச்சாரங்களை மறந்து விடாது பேணி வரவேண்டும். அதனால் நான் ஏழாம் வகுப்பில் கல்வி பயின்று கொண்டிருக்கும் என் மகனையும் இவ்விழாவிற்கு அழைத்து வந்துள்ளேன் எனக் கூறினார்.

விழாவினை முன்நின்று நடாத்திய நீதன் சான் தமிழ் மரபு நடவடிக்கைகளை மாணவர் சபையில் ஆரம்பி த்து மாகாண ரீதியிலும், நாடளாவிய ரீதியிலும் விஸ்த்தரிக்க முடியும். ஊடகத் துறையினர் முதல் பல் வேறு அமைப்புக்களும் எம்முடன் இணைந்து செயலாற்ற முன் வந்திருப்பது வரவேற்கத்தக்கது என்றார்.

கனடா அறிவகம், கனடா தமிழ் கவிஞர்கள் சங்கம், கனடா தமிழ் காங்கிரஸ், கனடா தமிழ் இளைஞர் இணையம், சீடஹூட் தமிழ் வரியிறுப்பாளர் சங்கம், டுரம் தமிழர் சங்கம், டுரம் தமிழ் கல்வி கலாச்சார மன்றம், சர்வதேச தமிழ் கலாச்சார இயக்கம், மார்க்கம் தமிழர் அமைப்பு, கனடா தமிழர் தேசிய சபை, தமிழ் கலாச்சார, தொழில் நுட்ப கல்வி நிலையம், தமிழ் தகவல் நிலையம், தமிழ் தொழிலாளர் இணை யம், கனடா தமிழ் இளைஞர் நிறுவனம் ஆகியன கூட்டாக இவ்விழாவினை ஏற்பாடு செய்திருந்தன.

வீரகேசரி மூர்த்தி

கனடா தொண்டு நிறுவனத்தின் ஊடாக 'மயிலம்பாக்கம்' அநாதைச் சிறுவர் விடுதி கட்டிட நிதிக்கு கைகொடுங்கள்!

(வீரகேசரி மூர்த்தி)

புலம் பெயர்ந்து வந்தாலும் தமது தாயத்து உறவுகளையும் அவர்களது தேவைகளையும் நிறை வேற்ற வேண்டும் என்ற உன்னதமான கொள்கையினை உடைய கனடா பல்கலைக் கழக மாண வர்களினால் அமைக்கப்பட்ட அமைப்பு *Children Aid Rehabilitation and Education Program* (குழந்தைகளுக்கு மறுசீர் அமைப்பு, கல்வித் திட்டம்) என்ற அமைப்பு சூறாவளியின் போதும் யுத்தத்தினால் ஏற்பட்ட பாதிப்பின் போதும் ஸ்ரீலங்காவுக்கு நிதியுடன் ஓடிச் சென்று உதவிக்கரம் நீட்டிய அமைப்பு. இதனை சுருக்கமாக 'சி றெப்' என அழைக்கிறார்கள். இந்த அமைப்பு கனடாவிலும் ஸ்ரீலங்காவிலும் சட்ட ரீதியாக பதிவு செய்யப்பட்ட தொண்டு அமைப்பாகும்.

இந்த அமைப்பினர் ஸ்ரீலங்காவில் நூறு அநாதைச் சிறுவர்களைப் பொறுப்பேற்று வாழ்வளித்து, கல்வி வசதியும் அளிக்க திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றனர். அதற்கு நிதி திரட்டுவதற்கான ஆலோசனைக் கூட்டம் ஒன்றினை இன்று மாலை ஸ்காபுறோ புறேகிரஸ் வீதியிலுள்ள அறிவகம் நூல் நிலையத்தில் நடாத்தினார்கள். அமைப்பின் தலைவி நிருபா தனபாலசிங்கமும், பொருளாளர் சகுல் சோமசுந்தரமும் தமது திட்டத்தினைப் பற்றி பூரணமாக எடுத்து விளக்கி அதனைப் பூர்த்தி செய்ய பொது மக்களிடம் இருந்து நிதியுதவியை எதிர்பார்ப்பதாகக் கூறினார்கள்.


யுத்தத்தின் விளைவால் தாய் தந்தையரை இழந்து அநாதைகளாகி முகாம்களிலும், தமது உறவினர்களுடனும் தங்கியிருக்கும் குழந்தைகளுக்கு வாழ்வளித்து, கல்வி அறிவூட்டவும் இவ்வமைப்பு மட்டக்களப்பில் திருகோண மலை வீதியில் ஒருவர் தயாள சிந்தையுடன் அன்பளிப்பாக வழங்கிய ஐந்து ஏக்கர் நிலத்தில் மயிலம்பாக்கம் சிறுவர் காப்பகத்துக்காக இருமாடிகளைக் கொண்ட கட்டிடம் ஒன்றினை நிர்மானித்து வருகின்றனர். இதற்கான அடிக்கல் நாட்டு விழா 2010ம் ஆண்டு ஏப்பிரல் 28ம் திகதி இடம்பெற்றது. 5160 சதுர அடியில் இக்கட்டிடம் அமை க்கப்பட்டு வருகிறது. இது வரையில் 89 ஆயிரம் டொலர்கள் செலவிடப்பட்டுள்ளன. கீழ்மாடியின் முக்கால் பகுதி வேலைகள் பூர்த்தியாகி விட்டன. மேலும் 88 ஆயிரம் டொலர்கள் தேவைப்படுவதாகவும் கூறினார்கள். இவ்வா ண்டு ஏப்பிரல் மாதம் கட்டிட வேலையை பூர்த்தி செய்ய திட்டமிட்டிருந்த போதிலும் போதிய நிதிவசதி இல்லாத காரணத்தினால் கட்டிடப் பணி தாமதப் படுகின்றது. அதனால் பொது மக்களிடம் இருந்து உடனடியாக ஒரு சதுர அடிக்கு 101டொலர் வீதம் திரட்ட உத்தேசித்து இருப்பதா கக் கூறினார்கள்.



கட்டிட வேலை பூர்த்தியடைந்த பின்னரே தற்போது சிரமங்களுக்கு மத்தியிலும் போதிய உணவு வசதி இன்றியும் அவஸ்தைப்படும் குழந்தைகளை பொறுப்பேற்று நல்வாழ்வும், கல்வி அறிவும் வழங்க முடியும். அதனால் பொது மக்கள் தாமாகவே முன்வந்து நிதியுதவி செய்ய வேண்டும் என தலைவியும், பொருளாளரும் விநயமாகக் கேட் டுக் கொண்டனர். அதற்கான பற்றுச் சீட்டினையும், சான்றிதழ்களையும் நாம் வழங்குவோமெனவும் அவர்கள் கூறினார்கள்.

எமது அன்பளிப்புகளின் மூலம் தாயகத்து ஏழைச் சிறுவர்களின் சிரிப்பில் இறைவனைக் காண் போம். இவர்களுடன் தொடர்பு கொள்ள விரும்புவோர் 416 799 5729 என்ற தொலைபேசி இலக்கத்திலும் *crepcanada@gmail.com* என்ற இணையத் தளம் மூலமாகவும் தொடர்பு கொள்ளலாம்.

குறுக்கெழுத்து போட்டி: 53



இடமிருந்து வலம்

01. மார்கழி மாதத்தில் எல்லா இந்துக் கோயில்களிலும் நடைபெறும் விழா. 07. வசிட்டரின் மனைவி (குழம்பியுள்ளது) 08. தங்குமிடம் (குழம்பியுள்ளது) 10. வெறுத்தல் செய்/கசப்பாயிரு (திரும்பியுள்ளது) 11. அமைதி என்பதின் எதிர்பதம் (குழம்பியுள்ளது) 13. ஆப்பிள் பழத்தில் எத்தனை .... உள்ளதென்று தெரியுமா? 15. உள்ளீடற்ற தானியம் (திரும்பியுள்ளது) 17. எண்சாண் உடம்பிற்கு இதுவே பிரதானம் 19. குதிரையைக் கட்டுப்படுத்த குதிரைவாயில் மாட்டப்படும் இரும்புத்துண்டு.

மேலிருந்து கீழ்

01. திருக்குறளை உலகிற்கு அருளியவர் 02. உருவமில்லாதது (தலைகீழாகவுள்ளது) 03. சமையலுக்கு பயன்படும் ஒருவகை விதை......... 04. குடை பிடித்து செருப்புமிட்டு .... கொண்டு சூடு குடென நடந்துவரும் குழந்தைகளே கேளீர் (குழம்பியுள்ளது) 05. கிறிஸ்தவ மதகுரு 06. நிந்தி/சபி/ஏசு 09. மெல்லுதல் செய் (குழம்பியுள்ளது) 12. யானைக் கொம்பு 14. யாழ் மாவட்டத்தில் இந்த இடத்தில் தான் வயோதிகர் இல்லம், அரசினர் சித்த ஆயுர்வேத வைத்தியசாலை நவீல்ட் பாடசாலை என்பன அமைந்துள்ளன. தவறுதலான வெடிவிபத்தில் வெப். கேணல் பொன்னம்மான் இறந்ததும் இந்த இடத்தில்தான். 16. கடையெழுந்து இல்லாபடியால் பகற்காலம் வரவில்லை. 18. பருவமடையாத பெண் (தலைகீழாகவுள்ளது)

- மார்க்கம் சந்திரன்

அனுப்ப வேண்டிய முகவரி


குறுக்கெழுத்துப் போட்டி, ஆசிரியர் - கதிரொளி
2353 Eglinton Ave - East, (Low Level), Scarborough, On. M1K 2M5

சொல்லக் கூடாத பேச்சானால், அதை சொல்லாமல் இருப்பதே மேல். - மகாவீர்

மூழ்கிய கப்பலில் பயணித்த சுவிஸ்ஸின் சுற்றுலாப் பயணிகள்

இத்தாலிப் பயணக்கப்பல் கடலில் மூழ்கியதில் குறைந்தது இரண்டு சுவிஸ் பயணிகள் மட்டும் கண்டறியப்பட்டுள் ளது என்று வெளியுறவுத்துறை அமைச்ச கம் தெரிவித்தது. சுவிஸ் பயணிகள் மருத் துவமணையில் சேர்க்கப்பட்டுப் பின்பு வீடு திரும்பினர்.

69 பேர் அந்தக் கப்பலில் பயணம் செய் ததாக தகவல் இருக்கிறது. ஆனால் மருத் துவமனையில் சேர்க்கப்பட்ட இந்த இரு வரைத் தவிர மற்றவர்கள் நிலை என்ன என்பது தெரியவில்லை என்று அமைச்சக அதிகாரிகள் தெரிவித்தனர்.



உரோம் நகரத்தில் உள்ள சுவிஸ் தூதர கமும் மிலன் நகரத்தில் உள்ள தூதரகமும் இவர்கள் பற்றிய தகவல்களை அறிவதில் ஆர்வமாகச் செயல்படுகின்றன.

4000 பேர் பயணித்த கோஸ்டோ கன் கார்டியா என்ற கப்பல் கவிழ்ந்ததில் ஐந்து பேர் உயிரிழந்தனர். 60 பேர் காயமுற்றனர். மற்றவர்கள் பற்றி தகவல்கள் இன்னும் வரவில்லை கப்பலின் கப்டன் கைது செய் யப்பட்டுள்ளார்.

ஈராக்கில் ஷியா முஸ்லீம்கள் படுகொலை: 53 பேர் பலி




ஈராக் நாட்டில் 53 ஷியா முஸ்லீம்கள் வெடிகுண்டுத் தாக்குதலில் உயிரிழந்த னர். இச்சம்பவம் பாஸ்ரா நகரின் தென் பகுதியில், சனிக்கிழமையன்று நடை பெற்றது. அமெரிக்கா தன் இராணுவத்தை விலக்கிக் கொண்டு சில வாரங்களேயான நிலையில் ஷியா - சன்னி பிரிவினர் மோதல் ஈராக்கில் அதிகமாகிக்கொண்டே வருகிறது.

ஷியா முஸ்லீம்கள் அர்பாயீன் என்ற நாற்பது நாள் நோன்புக்காலத்தில் ஈராக் கில் உள்ள கர்பாலா என்ற புனிதத்தலத் திற்கு வருகை தருவது வழக்கமாகும். ஆயிரக்கணக்கில் யாத்ரீகர்கள் கூடும் இத் தலத்தில் இந்தக் குண்டுவெடிப்பு நடந்தது ஷியாக்கள் மத்தியில் ஆத்திரத்தை எழுப் பியுள்ளது.

சுபாயீர் நகருக்கு வெளியேயுள்ள இமாம் அலி பள்ளிவாசலுக்கு யாத்ரீகர் கள் நடந்துகொண்டிருந்த போது இந்தத் தாக்குதல் நடந்ததாக, அரசுச் செய்தித் தொடர்பாளர் அயாத் அல் - எமாராஹ் தெரிவித்தார்.

சன்னி முஸ்லீம்கள் வாழ் கின்ற நகரத்துக்கு அருகில் இந்தப்பகுதி இருப்பதால் இந்தத் தாக்குதலை அவர்கள் நடத்தியிருக்கலாம் என்ற சந்தேகம் தோன்றியுள்ளது. அல் - எமாராஹ் இந்தக் குண்டுவெடிப்பு தெருவோ ரத்திலிருந்து எறியப்பட்ட தால் நடந்திருக்கலாம் அல் லது தற்கொலைப் படை தாக் குதலாக இருக்கலாம் என் றார்.

ஆனால் ஈராக்கின் இராணுவப் புலனாய்வு அதி காரி ஒருவர் அது தெருவோரத்திலிருந்து வீசப்பட்ட குண்டு தான் என்று உறுதிபடத் தெரிவித்தார். ஏனென்றால் யாத்ரீகர்கள் பயன்படுத்திய பஸ்ராவிலிருந்து சுபேய ருக்கு வரும் அந்தச் சாலையில் போக்கு



வரத்து தடைசெய்யப்பட்டு இருந்தது.

அதை மீறி இவர்கள் அந்தச் சாலை யைப் பயன்படுத்தியென்பதால் தெரு ஓரத்திலிருந்து குண்டு வீசப்பட்டிருக்க லாம், என்றார்.

குண்டுவெடிப்பில் காயம்பட்டவர்கள் 137 பேர் பிஸ்ரா மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்றனர். இறந்து போன 53 பேரின் உடல்களும் அங்குதான் வைக் கப்பட்டுள்ளது என்று அந்நகரத்தின் சுகா தாரத்துறை இயக்குநர் தெரிவித்தார்.

மகாத்மா காந்தியின் பென்சில் ஓவியங்கள் லண்டனில் ஏலம்

பென்சிலால் வரை யப்பட்ட மகாத்மா காந் தியின் அபூர்வ ஓவியங்க ள் லண்டனில் இம்மாத இறுதியில் ஏலம் விடப் பட உள்ளன. ஆங்கி லோ - யூத சமுதாயத் தைச் சேர்ந்த பிரபல ஓவியர் கிளியர் வின்ஸ்டன்.



இவரது மகள் தியோடரா இந்த ஓவியங்கள் குறித்து கூறுகையில், 'எனது பெற்றோர் 1930ம் ஆண்டுகளில் தான் முதல் முறையாக காந்தியை சந்தித்தனர். அதன் பின்னர் எனது தாய் பென்சிலால் அவரது உருவத்தை ஓவியமாக தீட்டி வந்தார். காந்தியு டன் என் பெற்றோர் நட்பு கொண்டிருந்தனர்' என் றார். இந்த அபூர்வ ஓவிய ங்கள் வரும் 24ம் தேதி லண்டன் லட்லோ ரேஸ்கோர்ஸ் வளா கத்தில் அபூர்வ மனிதர்களின் வாழ்க்கை வரலாறுகள், சரித்திர புகழ் பெற்ற ஆவணங்கள் ஆகியவற்றை ஏலம் விடும் நிகழ்ச்சியில், ஏலம் விடப்படுகின்றன.

ஊழல் வழக்குகளை விசாரிக்க பாகிஸ்தான் முடிவு

பாகிஸ்தானில் நீதித் துறையால் ஏற் பட்டுள்ள நெருக்கடியில் இருந்து தப்பிக் கும் வகையில், ஊழல் வழக்கில் சிக்கி யோரின் பணக் குவிப்பு குறித்து சுவிட்சர் லாந்து அதிகாரிகளுக்கு கடிதம் எழுத, ஆளும் கூட்டணி தீர்மானித்துள்ளது.

அதோடு, அடுத்தாண்டு நடக்க உள்ள தேர்தலை இந்தாண்டே நடத்தவும் முடிவு செய்துள்ளது. கடந்த 2007ல் அப்போதைய அதிபர் முஷாரப் கொண்டு வந்த தேசிய நல்லிணக்க அவசரச் சட்டம், 2009ல் உச்ச நீதிமன்றம் ரத்து செய்யப்பட்டது.

அதோடு, அந்த சட்டத்தால் ஊழல் வழக்குகளில் இருந்து விடுவிக்கப்பட்ட, முன்னாள் பிரதமர் பெனசிர் புட்டோ, அவரது கணவரும் தற்போதைய அதிபரு மான சர்தாரி ஆகியோர் மீதான வழக்கு களை மீண்டும் துவங்க உச்ச நீதிமன்றம், அரசுக்கு உத்தரவிட்டது.

ஆனால், முஷாரபுக்குப் பின் சர்தாரி, கிலானி தலைமையில் அமைந்த அரசு, கோர்ட்டின் உத்தரவுகளை கிடப்பில் போட்டது.

இவ்வழக்கை சமீபத்தில் விசாரித்த உச்ச நீதிமன்றம், சர்தாரி மீதான வழக்கு களை தோண்டியெடுப்பது உள்ளிட்ட ஆறு நடவடிக்கைகளை அரசு உடனடி யாக எடுக்க வேண்டும் என்றும், அதைச் செய்யத் தவறினால், அதிபர், பிரதமர் இருவரையும் தகுதி நீக்கம் செய்வோம் என்றும் உத்தரவிட்டிருந்தது. வழக்கை நாளை மீண்டும் விசாரிக்க உள்ளது.

இந்நிலையில், நீதித் துறையிலான மோதல், நாட்டில் மீண்டும் ராணுவம் தலைமையிலான சர்வாதிகாரத்திற்கு இட்டுச் சென்று விடும் என பீதியடைந் துள்ள ஆளும் பாக்., மக்கள் கட்சி தலை மையிலான கூட்டணி, ஊழல் வழக்கு களில் பணம் குவித்தோர் பற்றிய விவரங் களைத் தரும்படி, சுவிட்சர்லாந்து அதிகா ரிகளுக்கு கடிதம் எழுதத் தீர்மானித்துள் ளது.

அதோடு, நவாஸ் தலைமையிலான எதிர்க்கட்சியின் கோரிக்கைக்கு இணங்க, அடுத்தாண்டு நடக்க உள்ள பொதுத் தேர்தலை இந்தாண்டு ஆகஸ்ட் அல்லது செப்டம்பர் மாதத்தில் நடத்தவும் அரசு தீர்மானித்துள்ளது.

இது பற்றிய தகவல்கள், கூட்டணிக் கட்சிகள் மற்றும் எதிர்க்கட்சிகளுக்கு அர சால் அனுப்பப் பட்டுள்ளன. இந்த முடிவு கள், பாகிஸ்தானில் ராணுவப் புரட்சி நடக்க இருப்பதைத் தடுத்து நிறுத்திவிடும் என, நிபு ணர்கள் கருதுகின்றனர்.

ஏமனில் முக்கிய நகரை கைப்பற்றிய 'அல் கொய்தா' தீவிரவாதிகள்

ஏமன் நாட்டில் அரசியல் போராட்ட ங்கள் காரணமாக, கடந்த ஓர் ஆண்டாக அரசு நெருக்கடியில் சிக்கி தவிக்கிறது. இந்த நிலையில் அங்கு 'அல் கொய்தா' இயக்க தீவிரவாதிகளின் கை ஓங்கி வருகிறது. ஏற்கெனவே தெற்கு ஏமனில் அபியன் மாகாண ங்களில் உள்ள சில நகரங்களை அவர்கள் கைப்பற்றி உள்ளனர். தற்போது தலைநகர் சனாவில் இருந்து 160 கிலோ மீட்டர் தூரம் தெற்கில் அமைந்துள்ள முக்கிய நகரமான ரட்டாவை 'அல் கொய் தா'க்கள் கைப்பற்றி உள்ளனர். ரட்டா நகரை கைப்பற்ற நடந்த மோதலில் இரு ராணுவ வீரர்கள் கொல் லப்பட்டனர். மற்றொருவர் காயம் அடைந்தார்.



ரஷ்யாவில் அரசு அதிகாரிகள் 700 பேர் மீது ஊழல் வழக்கு!



ரஷ்யாவில் கடந்தாண்டு மட்டும், எம்.பி.,க்கள், அரசுத் தரப்பு வழக்கறிஞர் கள்,நீதிபதிகள் என அரசின் முக்கிய அதிகாரிகள் என 700 பேர்களின் மீது ஊழல் வழக்குகள் பதியப்பட்டுள்ளன.

ரஷ்யாவில் சமீபத்தில் நடந்த பொதுத் தேர்தலில், ஆளும் ஐக்கிய ரஷ்ய கட்சி பல்வேறு மோசடிகள் மூலம் வெற்றி பெற்றது. இதையடுத்து, பிரதமர் விளாடி மிர் புடினுக்கு எதிராக மக்கள் தொடர் ஆர்ப்பாட்டத்தில் குதித்தனர்.

மேலும், எம்.பி.,க் கள், நீதிபதிகள்,வழக்கறிஞர்கள், அரசுத் தரப்பு வழக்கறிஞர்கள், புலனாய்வுத் துறை அதிகாரிகள்,என மொத்தம் 700 பேர் மீது ஊழல் வழக்குகள் பதியப் பட்டுள் ளதாகவும் கூறினார். கடந்தாண்டில் மாஸ் கோ மற்றும் மாஸ்கோ மண்டலத்தில் மட்டும் ஏழாயிரத்து 900 ஊழல் வழக்கு கள் பதியப்பட்டுள் ளன. மாஸ்கோவில் தேர்தல் கமிஷன் அதிகாரி ஒருவர் மீதும் ஊழல் வழக்குப் பதிவாகியுள்ளது.

ரஷ்யாவின் தற்போ தைய பெரும் சவாலாகக் கருதப்படுவது ஊழல் தான். அதை ஊட்டி வளர்ப்பது புடின் என்ப தால் மக்களிடையே அவருக்கு எதிர்ப்பலை எழுந்துள்ளது. இந் நிலை யில், அரசு ஊழலுக்கு எதிராகக் கடும் நடவடிக் கைகளை அதிகாரி ஒரு வர் நேற்று முன்தினம் அளித்த பேட்டியில் தெரி வித்தார்.

இரு நாடுகளுக்கும் பொதுவான இலக்குகள் உள்ளன: ராபர்ட் ஷெர்

இந்தியாவுக்கு ஆயுத ங்களை விற்பனை செய் வதற்காக ராணுவ ஒப்பந் தம் செய்யப்படவில்லை என்று அமெரிக்க பாது காப்புத்துறை துணை அமைச்சர் ராபர்ட் ஷெர் தெரிவித்தார்.



இந்தியா, அமெரிக்கா இடையிலான ராணுவ ஒத்துழைப்பை மேலும் அதிகரிப்பது என்பது வெறுமனே ஆயுத விற்ப னைக்காக மட்டும் மேற் கொள்ளப்படுவதில்லை. உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு களாக இந்தியாவும், அமெரிக்காவும் திகழ்கின்றன.

இரு நாடுகளின் நலனுக்கும் பொது வான சில அம்சங்கள் இதில் உள்ளன. அவற்றை எட்டுவதற்காக இரு நாடுகளி டையிலான உறவை மேலும் வலுப் படுத்த வேண்டிய அவசியம் உள்ளது என்று அவர் குறிப்பிட் டார்.

தெற்கு மற்றும் தென் கிழக்கு ஆசிய நாடு களுக்கு பொறுப்பு வகிக் கும் ஷெர், இரு நாடு களிடையே பொதுவான சில இலக்குகள் உள்ளன. அதேபோல பொதுவான ஒத்துப்போகும் விஷயங் களும் உள்ளன. இரு நாடுகளின் மக்களிடையே பரஸ்பரம் உறவை வலுப் படுத்த இரு நாடுகளிடை யிலான ஒப்பந்தம் மிகவும் அவசியமானதாகும்.

ராணுவ ஒத்துழைப்பில், கடல் பிராந் திய பாதுகாப்பில் இணைந்து செயல்பட அமெரிக்கா ஆர்வமாக உள்ளது. இதே போல சர்வதேச அளவிலான பிரச்னை களில் இரு நாடுகளுக்கும் சில பொது வான இலக்குகள் உள்ளன என்று ஷேர் கூறினார்.

இந்த வாரத்தில் பிறந்த பிரபலங்கள்



வினோத் காம்பளி

பிறப்பு - ஜனவரி 18, 1972, இந்தியா
தொழில்கள் - முன்னாள் கிரிக்கெட் விளையாட்டு வீரர்




டாக்டர். சீர்காழி கோவிந்தராஜன்

பிறப்பு - ஜனவரி 19, 1933, இந்தியா
தொழில் - தமிழ் கருநாடக இசைப் பாடகர் மற்றும் திரைப்படப் பின்னணிப் பாடகர்




சௌந்தர்யா அஸ்வின்

பிறப்பு - ஜனவரி 20, 1983, இந்தியா
தொழில்கள் - ஃபிலிம் க்ராபிக்ஸ் டிசைனர், தயாரிப்பாளர் மற்றும் இயக்குநர்



ஜெகத் கஸ்பர் ராஜ்

பிறப்பு - ஜனவரி 22, 1972, இந்தியா
தொழில்கள் - தமிழ் மையம், சென்னை சங்கமம்



ஷக்தி வாசுதேவன்

பிறப்பு - ஜனவரி 23, 1983, இந்தியா
தொழில் - தமிழ்த் திரைப்பட நடிகர்

கழுத்துக்கு வந்த காலின் தடம்

ச.வே. பஞ்சாட்சரம்

உருவகக் கதை

அந்த அடர்ந்த காட்டினுள், வயல் வெளியில் அண்டி ஒரு பெரும்புதர் இருள் மண்டிக் கிடந்தது. அந்தப் புதரின் நடுவில், கோரைப் புற்களின் மத்தியில் தன்னால் அமைக்கப் பட்ட பாதுகாப்பான பொந்து ஒன்றில் அந்த விடலை ஆண்முயல் வசித்து வந்தது. மேய்ச்சலில் அந்தப் பக்கம் வந்த கன்னி முயல் ஒன்று அந்தப் பொந்தைக் கண்டு மயங்கியது. அந்த அழகியைக் கண்டு விடலை மயங்கியது. அவை இரண்டும் கணவன் மனைவியாகிக் கொண்டன.

சில நாள் கழித்து இரவு நேரம் இரண்டு முயல்களும் பக்கத்துப் பசிய வயல் பரப்பில் நுழைந்தன. ஒரு சாண் உயரத்துக்கு வளர்ந்திருந்த நெற்பயிரைக் கண்டு வாயூறிய பெண் முயல், பயிரை மேய்வோமா? என்று குழைந்தது. மாமிசம் உண்ணாத அதாவது உயிர்க்கொலை புரியாத புண்ணியப் பிறவிகள் நாங்கள், மனிதர், காக்கை, குருவிகள், எறும்புகளுக்கு உணவாக வேண்டிய நெற்பயிரைத் தின்றழிக்காத புண்ணியர்களாகவும் நாம் வாழ உதவத்தான் புல், செடிகளைக் கடவுள் படைத்திருக்கிறார். எனவே பயிருக்குப் பதில் வயல் வரம்பில் செழித்திருக்கும் அருகம்புல்லையே மேய்வோம் என்று கண்டிப்பாகக் கூறி விட்டது. கணவன் முயல் மேலும் வற்புறுத்தத் துணிவின்றி மனத்தை அடக்கிக் குமுறிய மனைவி, காலம் வரும், பார்த்துக் கொள்கிறேன்! என்று மனதுள் கறுவிக்கொண்டது.

பெண் முயல் இரண்டு குட்டிகளைப் போட்டது. குட்டிகள் பொந்து சூழ் பற்றைக் கோரைப் புற்களில் மேய்ச்சல் பழகி, மெல்லப் பெற்றோருடன் வயல் வரம்புகளுக்குப் போய் மேய்ந்து வரலாயின. அந்தப் பொந்து வீடு தான் அமைத்த தனது வீடு என்று தன் குட்டிகளுக்கு இரகசியமாகச் சொல்லி வைத்த அம்மா முயல், அவை நன்கு வளர்ந்த பின், வயலில் மீண்டும் சிறு போக விதைப்பில் பயிராகியிருந்த அந்த இளம் நெல் மிக ருசியானதென்றும், அதை மேய விடும்படி அப்பாவைக் கேட்கும் படியும் அவற்றுக்கு வாலுருவிவிட்டது. அன்றிரவு வயலில் அப்படியே குட்டிகள் அப்பா முயலிடம் அனுமதி கேட்டன. ஆனால் வயற்காரன் வலையில் வீழ்ந்து அவனால் கொல்லப்பட நேரும் என்று மறுத்துவிட்டது தந்தை முயல். மறுநாட்காலை தந்தை வெளியிற் போயிருந்த நேரம், நீங்கள் நல்லாச் சாப்பிட்டுப் பெரிதாக வளர்ந்தால் பொந்துக்கள் இட நெருக்கடி வரும் என்றுதான் உங்களை அப்பா பட்டினி போடுகிறார் என்று குட்டிகளுக்கு உருவேற்றி வைத்தது தாய். மதியம் போல் வீடு திரும்பிய தந்தை முயலிடமே, பிள்ளைகளைப் பட்டினி போடும் நீங்கள் எங்கள் அப்பா அல்ல, எங்கள் எதிரி. இனிமேல் இந்தப் பக்கம் தலைகாட்டப்படாது. உடனடியாக நடையைக் கட்டுங்கள் என்று குட்டி முயல்கள் போர்க்கொடி தூக்கின. அதிர்ச்சிக்குள்ளாகி, வாயடைத்துப்போன அப்பா முயல் பேசாமல் திரும்பிக் காட்டுக்குள் சென்றுவிட்டது. தன் பாசப் பிள்ளைகள் பாவப்பிள்ளைகளாகி, எங்கோ மாட்டுப்பட்டு அழியப்போகின்றனவே என்று புலம்பிக்கொண்டு ஊணுறக்கமின்றிக் காடெல்லாம் அலைந்தது. துயரம் முற்றிப் பைத்தியமான நிலையில் தன்னை மறந்து ஒரு நண்பகல் தன் இழந்த பொந்துப் பக்கமாகச் சென்ற முயல் அங்கு குட்டிகளைக் காணாததால் வயற் பக்கமாகச் சென்றது. அங்கு ஒரு வயலினது பயிர் மேய்ச்சலால் மொட்டை அடித்துக் காணப்பட்டது. அதன் வரம்பில் ஓர் உழவன் போய்க்கொண்டிருந்தான். அவன் ஒரு கையில் கீச்கீச் என்று கத்தும் இரு குட்டி முயல்களையும், மறுகையில் பிணமாகிவிட்ட தாய் முயலையும் செவிகளில் பிடித்துத் தூக்கிச் சென்று கொண்டிருந்தான். அவன் பின்னால் தோளில் வலைச் சுருளைச் சுமந்து இன்னொருவன் நடந்து கொண்டிருந்தான்.

மார்கழிமாலை


கடந்த ஆண்டு மார்கழித்திங்கள் 28ஆம் நாளன்று ஸ்காபரோவில் நடை பெற்ற மார்கழிமாலை நிகழ்வின்போது எடுக்கப்பட்ட நிழற் படங்கள் சில.



கனடா மாதகல் நலன்புரிசங்கம் ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி.சரஸ்வதி. சிவராஜன் அவர்களைச் சிறப்பிக்கும் காட்சி



மார்க்கம் நகரசபையில் தை 13,14,15ஆம் நாட்களைத் தமிழர் மரபுநாளாகப் பிரகடனப்படுத்தியமைக்காக திரு.லோகன் கணபதி அவர்கள் தமிழ் ஆர்வலர் என்று பெயர்சூட்டிச் சிறப்பிக்கப்படும் காட்சி.



மாதகல் சென்யோசெப் மகா வித்தியாலய விளையாட்டுத்திடல் கொள்வளவு செய்வதற்கான பெருந்தொகைப்பணத்தைத் திரட்ட உதவிய கனடா மாதகல் நலன்புரி சங்கச் செயலவை உறுப்பினரை முன்னாள் தலைவர் சிறப்பிக்கும் காட்சி.

நீ அமைதியாக வாழ விரும்பினால், சந்தேகப் பேர்வழியாக இராதே. - ஜான்சன்

"கதிர் ஒளி"யின் திருமண சேவை

தொடர்புகளுக்கு: 647-984 -0264 / 416-752-6397



பிள்ளைகளுடைய திருமணம் கைகூடவில்லை என்று யோசனையா? பொருத்தமான வரன் இன்னும் அமை வில்லை என்ற வருத்தமா? ....கவலையை விடுங்கள்! "கதிர் ஒளி" திருமண சேவை மூலமாக உங்கள் பிள்ளைக-ளின் திருமணத்திற்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்.

இந்து சமய மணமகள் தேவை

KO-256 1977-06-16 யாழ் பண்டதரிப்பை பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட மணமகனுக்கு மணமகள் தேவை. (கனடாவில் or பிரான் விரும்பதக்கது)

KO-260 1971-03-13 யாழ் கொக்கு விலை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப் பிடமாகவும் கொண்டவிவாகரத்தான மண மகனுக்கு மணமகள் தேவை.

KO-262 1974-03-03 யாழ் நவாலி வடக்கை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட மணமகனுக்கு மணமகள் தேவை.

KO-268 1975-05-2011 யாழ் புலோலியை பிறப்பிடமாகவும் USA California வை வதிவிடமாக கொண்ட Engineer மண மகனுக்கு மணமகள் தேவை.

KO-269 1971-11-02 புங்குடுதீவை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாக வும் கொண்ட மணமகனுக்கு மணமகள் தேவை. (விவாகரத்தானவர்களும் விரும்ப தக்கது)

KO-270 1980-05-24 யாழ் உடுப்பிட் டியை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பி டமாகவும் கொண்ட R.B.C Dexia Accountant பணிபுரியும் 7ல் செவ்வாய்யுள்ள மண மகனுக்கு மணமகள் தேவை.

KO-272 1974-03-17 யாழ் புங்குடுதிவை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட மணமகனுக்கு மனமகள் தேவை.

KO-273 1977-10-23 யாழ் வட்டுகோட் டையை பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப் பிடமாகவும் கொண்ட மணமகனுக்கு மண மகள் தேவை.

KO-274 1968-11-13 யாழ் வட்டு கோட்டையை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட மணமகனுக்கு மணமகள் தேவை.

KO-277 1979-04-27 யாழ் திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட B.c.s and M.s.c படித்து முகாமையாளராக தொழில் செய்யும் மணமகனுக்கு மண மகள் தேவை. (இலங்கையிலும் விரும்ப தக்கது)

KO-280 1976 ஜுன் இரண்டாம் திகதி மானிப்பாயில் பிறந்து கனடாவில் வசிக்கும் சொந்த தொழில் செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை.

KO-284 1979-05-13 யாழ் தெல்லிப் பளையை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட Computer Engineer மணமகனுக்கு மணமகள் தேவை.

KO-287 1977-04-12 மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாக வும் கொண்ட விவாகரத்தான மணமகனு க்கு மணமகள் தேவை. (இலங்கையிலும் விரும்பதக்கது.)

KO-291 1977-10-24 யாழ் கோப்பாயை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாக வும் கொண்ட B.Com., படித்த மணமக னுக்கு மணமகள் தேவை.

KO-293 1973-11-15 யாழ் Hospital road பிறப்பிடமாகவும் கனடாவை வசிப் பிடமாகவும் கொண்ட 7ல் செவ்வாயுள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.

KO-294 1978-10-25 யாழ் கரம்பனை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாக வும் கொண்ட Material handler தொழில் செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை.

KO-295 1971-10-17 யாழ் அலவெட்டியை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட மண மகனுக்கு மணமகள் தேவை.

KO-296 1975-07-28 யாழ் மயிலிட் டியை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பி டமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட மணமகனுக்கு மனமகள் தேவை.

இந்து சமய மணமகன் தேவை



KO-257 1984-07-26 யாழ் வல்வட்டிதுறையை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பி டமாகவும் கொண்ட Computer Engineering படித்த மணமகளுக்கு மணமகன் தேவை.

KO-258 1982-08-18 யாழ் வேலனையை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாக வும் கொண்ட 8ல் செவ்வாயுள்ள *Account Assistant* தொழில் செய்யும் மணமகளுக்கு மணமகன் தேவை.

KO-259 1984-07-07 யாழ் மீசாலையை பிறப்பிடமாகவும் இந்தியாவை வசிப்பிட மாகவும் கொண்ட மணமகளுக்கு கனடாவில் மணமகன் தேவை.

KO-261 1980-11-23 யாழ் கரவெட்டியை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாக வும் கொண்ட C.G.A. Accountan படித்து தொழில் செய்யும் மணமகளுக்கு மண மகன் தேவை.

KO-264 1974-12-09 யாழ் புங்குடுதீவை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிட மாகவும் கொணட வாய் பேசமுடியாத மணமகளுக்கு மணமகன் தேவை. (வாய் பேசமுடியாதவர்களும் விவாகரத்தானவர் களும் விரும்பத்தக்கது.

KO-267 1977-12-09 யாழ் நவாலியை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாக வும் கொண்ட Engineer மணமகளுக்கு மணமகன் தேவை (விவாகரத்தானவர் களும் விரும்பத்தக்கது).

KO-271 1981-08-13 சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிட மாகவும் கொண்டு TD S. B யில் Settlement Worker ஆக பணியாற்றும் B.A பட்ட தாரி மணமகளுக்கு மணமகன் தேவை.

KO-275 1976-08-12 யாழ் கொக்கு விலை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட *Dental assistant* தொழில் செய்யும் மணமகளுக்கு மணமகன் தேவை. விவாகரத்தானவர் களும் விரும்பதக்கது.

KO-276 1980-07-07 கரவெட்டியை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிட மாகவும் கொண்ட B.A படித்த மணம-களுக்கு மணமகன் தேவை.

KO-278 1986-05-14 யாழ் சுளிபுரத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாக வும் கொண்ட business management accounting major and finance minor படித்து தொழில் செய்யும் செவ்வாய்யுள்ள மணம-களுக்கு மணமகன் தேவை.

KO-279 1983-04-20 யாழ் point peter

தொடர்பு கொள்ள வேண்டிய நேரம்
திங்கள் முதல் வெள்ளிவரை
காலை 10.00 - 08.00வரை மட்டும்
சனிக்கிழமை 12.00 - 08.00வரை மட்டும்

ரை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிட மாகவும் கொண்ட Computer Engineering (MBA) படித்து Research In Motion தொழில் செய்யும் மணமகளுக்கு மண மகன் தேவை.

KO-281 1981 செப்டம்பர் முதலாம் திகதி நீர்வெளியில் பிறந்து அங்கே வசிக்கின்ற GAQ படித்த மணமகளுக்கு கனடாவில் மணமகன் தேவை.

KO-282 1973 டிசம்பர் 7 யாழ்ப்பாணத்தில் பிறந்து கனடாவில் வசிக்கும் B.Sc., படித்த மணமகளுக்கு மணமகன் தேவை. விவாகரத்தானவர் களும் விரும்பதக்கது.

KO-283 1978-02-08 யாழ் வேலனையை பிறப்பிடமாகவும் கனடாவை பிறப்பிடமாக வும் கொண்ட 8ல் செவ்வாயுள்ள Doctor மணமகளுக்கு மணமகன் தேவை.

KO-285 1977-10-09 யாழ் கொல்லங் கலட்டியை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட Financial Analyst (C.G.A) படித்து தொழில் செய்யும் மணமகளுக்கு மணமகன் தேவை (விவா-கரத்தானவரும் விரும்பதக்கது)

KO-288 1984-03-04 மல்லாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மணமகளுக்கு மணமகன் தேவை.

KO-289 1977-05-29 யாழ் நெல்லி யடியை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட CIBC Processing தொழில் செய்யும் மணமகளுக்கு மணமகன் தேவை.

KO-290 1985-06-28 யாழ் அச்சுவேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாமசியில் தொழில் செய்யும் மணமகளுக்கு மணமகன் தேவை.


KO-292 1976-11-14 யாழ் நவின்டலை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாக வும் கொண்ட Computer science படித்து தொழில் செய்யும் மணமகளுக்கு கனடா வில் or இலங்கையில் மணமகன் தேவை.

அளவில்லாத ஆசை, நம் குணங்களையெல்லாம் அழித்து விடும். - மகாவீர்

அதிகாரப்பகிர்வு மறுக்கும் அதிபர் ராஜபக்சே இலங்கை தமிழ்கட்சி கிருஷ்ணாவிடம் வலியுறுத்தல்

இலங்கையில் வாழும் வடகிழக்கு மாகாண தமிழர்களுக்கு அதிகாரப்பகிர்வு கொடுக்க அந்நாட்டு அதிபர் ராஜபக்சே காலம் தாழ்த்தி வருகிறார் என்றும் , தமிழ் இன பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண இந்தியா வலியுறுத்த வேண்டும் என்றும் அங்குள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினர் இந்திய மத்திய அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவிடம் வலியுறுத்தினர்.

இந்திய மத்திய வெளியுறவு துறை அமைச்சர் கிருஷ்ணா இலங்கைக்கு 3 நாள் அரசு முறைபயணமாக இலங்கை சென்றிருக்கிறார். நேற்று மாலை சென்றடைந்த அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப் பட்டது. அதிபர் ராஜபக்சே தலைமையில் நடந்த பொங்கல் விழாவில் கிருஷ்ணா மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர்.



இலங்கையில் வாழும் தமிழர் மறுவாழ்வு மற்றும் இந்திய அரசு தரப்பில் கட்டித்தரப்படும் வீடுகள் பணிகள் குறித்தும் பேச்சு நடத்தவுள்ளார். இலங்கையில் உள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பு பிரமுகர்கள் கிருஷ்ணாவை சந்தித்து பேசினர். இந்த சந்திப்பின் போது, இலங்கையில் இந்த கூட்டமைப்பினரும் அரசும் நடத்திய பேச்சுவார்த்தை விவரிக்கப்பட்டது. இதில் இலங்கை அரசு ஒத்துழைப்பு வழங்கவில்லை. அதிபர் ராஜபக்சே அதிகாரப்பகிர்வுக்கு இணங்கும் எண்ணம் இல்லாமல் இருப்பதையே காண முடிகிறது. எனவே இந்தியா, இலங்கையிடம் இந்த விஷயம் குறித்து அழுத்தம் கொடுக்கவேண்டும். இதன் மூலம் பேச்சு வார்த்தை சரியான பாதைக்கு வழி வகுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டன. இந்த கட்சியை பொறுத்தவரை இலங்கை வடகிழக்கு மாகாணங்களில் அரசு அதிகாரங்கள், போலீஸ் கட்டுப்பாடு குறித்த விஷயங்களை நீண்ட காலமாக கேட்டு வருகின்றன. இதனை கேட்டறிந்த கிருஷ்ணா அதிபரிடம் பேசுவதாக உறுதி அளித்தார்.

அதிபர் மற்றும் பிரதமர் , வெளியுறவு துறை அமைச்சர் ஆகியோரை சந்தித்து பேசினார். இன பிரச்னைக்கு தீர்வு, தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல் நிறுத்த வேண்டும் என்றும் கிருஷ்ணா வலியுறுத்தினார்.

ராஜபக்சேவை சந்தித்து பின்னர் பத்திரிகையாளர்களிடம் பேசிய அமைச்சர் கிருஷ்ணா, இலங்கை கிழக்கு மற்றும் நடக்கு பகுதியில் வாழும் தமிழர்களுக்கு கூடுதல் அரசியல் அதிகாரம் வழங்கப் படும் என்றும், அரசியல் அதிகாரம் வழங்கும் 13வது சட்டத்திருத்தத்தை அமல் படுத்துவதாக ராஜபக்சே உறுதியளித்த தாகவும் கிருஷ்ணா கூறினார். மேலும் அவர் தமிழர்களுடனான பேச்சுவார்த்தையை தொடர வேண்டும். காலம் கனிந்து வருவதை இலங்கை பயன் படுத்தி கொள்ள வேண்டும். தமிழ் தேசிய கூட்டணி உடனான பேச்சுவார்த்தையின் போது ஆக்கப்பூர்வமான அணுகு முறையை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்டேன். இதனை அவர் ஏற்றுக் கொண்டுள்ளார் என்று எஸ்.எம்.கிருஷ்ணா கூறினார்.

இலங்கை முக்கிய செய்திகள்

ஜே .வி .பி.கிளர்ச்சி குழுவினருக்கு யாழ்ப்பாணம் செல்ல தடை!



யாழ்ப்பாணத்தில் காணாமல் போன ஜே வி பி கிளர்ச்சிக் குழுவின் உறுப்பினர்களான லலித் மற்றும் குகன் ஆகியோரை கண்டுபிடித்து தருமாறு கோரிய துண்டு பிரசுரங்களை விநியோக்கும் போராட்டம் நேற்று யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் கலந்துக் கொள்வதற்காக கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் சென்ற கிளர்ச்சி குழு உறுப்பினர்கள் சிலரை, காவற்துறையினர் வவுனியாவில் தடுத்து வைத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் குமார இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐ.தே.க செயற்குழுக் கூட்டத்தில் ஒழுக்காற்று நடவடிக்கை குறித்துபேசப்படவில்லை

கட்சியின் முக்கிய பதவிகளுக்கான தேர்தல் களின்பின்னர் முதல் தடவையாக செயற்குழுக் கூட்டம் நேற்று கூட்டப் பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய மான செயற்குழுக் கூட்டத்தில் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர ஆகியோருக்கு எதிராக ஒழுக் காற்று நடவடிக்கை எடுப்பது குறித்து பேசப்படவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய பதவிகளுக்கான தேர்தல்களின்பின்னர் முதல் தடவையாக செயற்குழுக் கூட்டம் நேற்று கூட்டப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் கிளர்ச்சிக் குழு உறுப்பினர்களான சஜித்பிரேமதாச மற்றும் தயாசிறி ஜயசேகர ஆகியோருக்கு எதிராக இன்றைய செயற்குழுக் கூட்டத் தில் ஒழுக்காற்றுநடவடிக்கை எடுக்கப் படும் பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சி ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் தொடர்பில் பேசப் பட்டதாக கட்சியின் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தொகுதி வாரியாக கட்சியை பலப்படுத்துவது குறித்து ஆராயப்பட்டதாக கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரி வித்துள்ளார்.

பசில், கோதபாய ஆகியோர் ஜனாதிபதியின் அரசியல் கவசமாக செயற்படுகின்றனர் - விக்கிலீக்ஸ்

பசில் ராஜபக்ஷ மற்றும் கோதபாய ராஜபக்ஷ ஆகியோர் ஜனாதிபதிமஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் கவசங்களாக செயற்பட்டு வருவதாக விக்கிலீக்ஸ் தக வல்வெளியிட்டுள்ளது.

அதாவது, பிரபல்யமற்ற தீர்மானங் களின் பொறுப்பை பெசிலும், கோதபாய வும் ஏற்றுக் கொண்டு, ஜனாதிபதியின் நன்மதிப்பை பாதுகாத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் அந்நாட்டு ராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்த குறிப்பில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல சந்தர்ப்பங்களில் ஜனாதிபதி தீர்மானங்களை எடுக்கும் பொறுப்பிலிருந்து முற்று முழுதாக விலகிக் கொள்கின்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

2007ம் ஆண்டு மே மாதம் 15ம் திகதி இலங்கைக்கான அப்போதைய அமெரிக்கத் தூதுவர் ரொபர்ட் ஓ பிளக்கினால் இந்த குறிப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பல முக்கியமான விடயங்களில் ஜனாதிபதி தீர்மானங்களை எடுக்க தயக்கம் காட்டுவதாகவும், காலம் தாழ்த்துவதாகவும் பிளக் குறிப்பிட்டுள்ளார்.




குற்றச்சாட்டுக்களிலிருந்து தப்பித்துக் கொள்ளும் நோக்கில் ஜனாதிபதி இவ்வாறு பொறுப்புக்களை பசில் ராஜபக்ஷ மற்றும் கோதபாய ராஜபக்ஷ ஆகியோரிடம் ஒப்படைப்பதாகத் தெரிவித்துள்ளார். சர்வகட்சிப் பேரவை நடவடிக்கைகளை காலம் தாழ்த்தியமை மற்றும் அதிகாரப் பகிர்வு குறித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யோசனைத் திட்ட த்தை முன்வைக்காமை போன்றவற்றை இதற்கு உதாரண மாக காட்ட முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதிக்கும் அவரது சகோதரர்களுக்கும் இடையிலான உறவு குடும்பரீதியானது மட்டுமன்றி அரசியல் ரீதியானதும் கூட என அவர் தமது குறிப்பில்சுட்டிக்காட்டியுள்ளார். ராஜபக்ஷ சகோதரர்கள் அரசாங்கத்தின் அரசியல் மற்றும் பாதுகாப்புகொள்கைகளை வகுப்பதில் மிக முக்கிய பங்கு வகிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக ஜனாதிபதிக்கு அரசியல் கவசமாக அவரது இரண்டு சகோதரர்களும்திகழ்வதாகக் குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு மிக வலுவான அதிகாரம் காணப்பட்டபோதிலும், தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் அந்த அதிகாரத்தை பயன்படுத்தவில்லை என பிளக் தெரிவித்துள்ளார்.

ஏ.ஆர்.ரஹ்மானின் ஹோசான்னா... பாடலுக்கு கிறிஸ்தவர்கள் எதிர்ப்பு!



ஏ.ஆர்.ரஹ்மானின் இசையில் உருவாகியிருக்கும், ஹோசான்னா பாடலுக்கு கிறிஸ்தவ அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். கவுதம் மேனன் இயக்கத்தில் தமிழில் வெளியாகி சூப்பர் ஹிட்டான படம் 'விண்ணைத் தாண்டி வருவாயா'. சிம்பு, த்ரிஷா நடிப்பில் வெளிவந்த இப்படத்திற்கு ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்து இருந் தார். இப்படத்தில் உள்ள அனைத்து பாடல்களும் சூப்பர் ஹிட்டாகின.

இந்நிலையில் இதே விண்ணைத்தாண்டி வருவாயா படம் இந்தியில் 'ஏக் திவானா தா' என்ற பெயரில் ரீ-மேக் ஆகியுள்ளது. கவுதமே இயக்கியுள்ள இப்படத்திற்கு ஏ.ஆர்.ரஹ்மானே இசையமைத்துள்ளார்.

சமீபத்தில் வெளியான இப்படத்தின் பாடல்கள் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. தமிழில் உள்ள ஹோசான்னா பாடல், இந்தியிலும் இடம்பெற்றுள்ளது.

இதனிடையே ஹோசான்னா பாடலுக்கு கிறிஸ்தவ அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித் துள்ளனர்.

ஹோசான்னா என்பது கிறிஸ்துவர்களின் வழிபாட் டுக்குரிய வார்த்தை என்றும், அதை காதல் பாடலில் சேர்த் திருப்பது கண்டிக்கத்தக்கது என்றும், இதனை உடனடியாக படத்தில் இருந்து நீக்க வேண்டும், இல்லாவிட்டால் கோர்ட்டில் வழக்கு தொட ருவோம் மற்றும் போராட்டம் நடத்துவோம் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


கதிர் ஒளி

திரை ஒளி

அனுஷ்காவிற்கு சுராஜ் புகழாரம்!



தலைநகரம், மருமதலை, படிக்கா தவன், மற்றும் மாப்பிளை போன்ற படங்களை இயக்கிய இயக்குனர் சுராஜ், அடுத்து கார்த்தி-அனுஷ்கா நடிக்கும் படத்தை இயக்கி வருகிறார். படுவேகமாக ஷூட்டிங் நடத்தி வரும் சுராஜ், அனுஷ்காவை புகழ்ந்து தள்ளி யுள்ளார். இதற்கு அனுஷ்காவின் அதி கபடியான அழகு மட்டும் காரணம் அல்ல அவரது டெடிகேஷனும் தான். பெ?ரிய ஹீரோயின் என்ற பந்தா இல்லாமல் ஷூட்டிங் தொடங்கும் முன் பே மேக்கப்புடன் முதல் ஆளாக ஆஜராகிவிடுவார். கார்த்தி, அனுஷ்கா நடிக்கும் படத்தின் படப்பிடிப்பில் பெரும்பாலும் முதலில் மேக்கப்புடன் தயாராவது அனுஷ்காதான். படப் பிடிப்புக்கு இவ்வளவு டெடிகேட்டாக எந்த நடிகையும் வருவதில்லை என்று சுராஜ் அனுஷ்காவை புகழ்கிறார்.



மார்ச்சில் சிங்கம் 2 ஹரி திட்டவட்டம்

'சிங்கம்' வெற்றிக்குப்பிறகு பெரிய கேப் விட்டிருந்த இயக்குனர் ஹரியும், சூர்யாவும் மீண்டும் வரும் மார்ச்சிலிருந்து கைகோர்க்கிறார்கள். 'நான் சிங்கம் இயக் கும்போது இருந்த சூர்யா வேறு, இப் போது இன்னும் பல கோடி மார்க்கெட் உயர்ந்து நிற்கும் சூர்யா வேறு என்பதைப் புரிந்துகொண்டு அதற்காகவே மெனக் கெட்டு, இன்னும் கொஞ்சம் கால அவகா சம் எடுத்து ஸ்கிரிப்டில் வொர்க் பண்ணி கடந்த வாரம் தான் சூர்யாவிடம் கதையை யே சொன்னேன். கதை அவருக்கு மிகவும் பிடித்துவிட்டது. மாற்றான்' முடிந்ததும் மார்ச்சில் நம் படத்தை தொடங்கி விட லாம் என்று கூறி இருக்கிறார்.

படத்துக்கு இன்னும் தலைப்பு முடி வாகவில்லை. சூர்யா இதில் இரண்டு வித மான தோற்றங்களில் வருவதால், அவருக்கு இரண்டு ஜோடிகள் இருக்கிறார் கள். அதில் ஒரு கேரக்டருக்கு அனுஷ்கா வையும், இன்னொரு கேரக்டருக்கு இந்தி நடிகை சோனம் கபூரையும் பேசி வரு கிறோம் என்கிறார் ஹரி. இயக்குனர் ஹரி சொன்னா சரிதான்.

சமீராவா, அமலாவா? லிங்குசாமி சாய்ஸ்



தனது 'பையா' படத்தை இந்தி யில் ரீமேக்கச் சொல்லி ஏகப்பட்ட டிமாண்டுகள் இருந்தாலும் லேட் டஸ்ட் ரிலீஸான 'வேட்டை'யைத் தான் முதலில் இந்தியில் இயக்கப் போகிறாராம் இயக்குனர் லிங்குசாமி. வேட்டையை ரிலீஸுக்கு முந்தின நாளே பார்த்த படத்தின் இணைத்

தயாரிப்பாளர் ரோனி ஸ்கு ருவாலா, படம் அப்படியே ஒரு இந்திப்படம் பார்ப்பது போல பரபரவென்று போ கிறது.

அங்கே ரெண்டு பெரிய ஹீரோக்களை புக் பண்ணித் தருகிறேன். எனக்கு இதை உடனே சுடச்சுட இந்தியில் இயக்கிக்கொடுங்கள் என்றா ராம்.

நான் இயக்கிய படங்களி லேயே ஒருவித டென்சனும் இல்லாமல் ரிலாக்ஸ்டாக இயக்கிய படம் என்றால் அது வேட்டை' ஒன்றுதான்.

இதனால் 'பையா'வுக்கும் முந்தி 'வேட்டையை இயக்க விரும்புகிறேன்' என்கிற லிங்குசாமியிடம், 'வேட்டை' ஹீரோயிகளில் யாரை ரொம் பப்பிடிக்கும் என்று கேட் டால், மேக்கப் போடுவதற்கு முன்பு சமீரா ரெட்டியைப் பிடிக்கும். மேக்கப் போட்ட பிறகு அமலாபாலைப் பிடிக்கும் என் கிறார். அவங்களுக்கெல்லாம் பேக்கப் சொன்ன பிறகும் ஜாக்கிரதையாத் தான் பேசுகிறார் லிங்குசாமி.



ஓட்டல் தொழிலில் ஈடுபட முடிவு - காஜல் அகர்வால்!

நடிகை காஜல் அகர்வால் மேலாடையின்று அரை நிர் வாணத்தில் 'போஸ்' கொடுத் தது போன்ற படம் சமீபத்தில் இண்டர்நெட்டில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது. இதுகுறித்து காஜல் அகர்வால் அளித்த பேட்டியில்,

நான் குடும்பபாங்கான வேடங்களில் 'மாடர்ன் டிரஸ்' அணிந்து நடிக்கிறேன். நான் எப்படிப்பட்ட பெண் என்பது ரசிகர்களுக்கு தெரியும்.

எனது அரை நிர்வாணப் படம் இண்டர்நெட்டில் வெளி யானதை பார்தது அதிர்ச்சியா னேன். எனது குடும்பத்தினர் வருந்தினர். நான் ரொம்ப வேதனைப்பட் டேன்.

அதுபோல் 'போஸ்' கொடுக்கும் பெண் நான் அல்ல. சினிமாவுக்கு வந்து 5 ஆண்டுகள் ஆகிவிட்டது. முன்னணி ஹீரோக்களுடன் நடித்து விட்டேன். மகேஷ் பாபுவுடன் 'பிசினஸ்மேன்' படத் தில் நடித்ததற்காக பாராட்டுகள் குவி கிறது.

தமிழிலும் படம் நடிக்கிறேன். இந்தியில் தயாரான 'சிங்கம்' படத்தில் நடித்து அங்குள்ள ரசிகர்கள் மனதிலும் இடம் பிடித்துள்ளேன்.


இந்தியை விட தமிழ், தெலுங்கு படங்களில் நடிக்கவே ஆர்வம் உள்ளது. தென் இந்திய நடிகை என்று சொல் வதையே விரும்புகிறேன். எனது பாதி நேரம் பயணத்திலேயே கழிகிறது. படப்பிடிப்புக்காக சென்னை, ஐதராபாத், மும்பை என விமானத்தில் பறந்து கொண்டே இருக்கிறேன்.

கஷ்டப்பட்டால்தான் எல்லாம் கிடைக்கும். உழைப்பு இல்லாவிட்டால் பின்தங்கி விடுவோம். பணம், சம்பாதிப் பது மட்டுமே எனது நோக்கம் இல்லை.

ஆரம்பத்தில் அதுபோன்ற எண்ணத் தில் வந்த படங்களையெல்லாம் ஏற்றுக் கொண்டு நடித்ததால் . பல படங்கள் தோல்வி அடைந்து விட்டன. இப்போது தெளிவாகி விட்டேன். சினிமாவில் நடிகையாக நீடிக்க முடியாது. எனவே விரைவில் ரெஸ்டாரண்ட் துவங்கி ஓட்டல் தொழிலில் ஈடுபட முடிவு செய்துள்ளேன் என்றார்.



நெருங்க தயக்கம் ஏன்?



விக்றோரியா, ப்ராம்ப்டன்

கேள்வி: கதிரொளிக்கு வணக்கம். எனக்கு வயது இருபத்தாறு. பத்தொன்பது வயதிலேயே திருமணம் முடித்து விட்டேன். இப்பொழுது மூன்று குழந்தைளும் இருக்கிறார்கள். சுமார் ஒரு வருடத்துக்கு முன் இலங்கை சென்றிருந்தபோது குடும்பக் கட்டுப்பாட்டு சிகிச்சை செய்து கொண்டேன். இந்த ஒரு வருடத்துக்குள் சுமார் 30 கிலோ எடை அதிகரித்து விட்டது. குடும்பக் கட்டுப்பாட்டு சிகிச்சை செய்துகொண்டதுதான் இதற்குக் காரணம் என்று பலரும் சொல்கிறார்கள். இது உண்மைதானா?

பதில்: குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொண்ட பெண்களுக்கு உடல் எடை அதிகரிக்க அதிக வாய்ப்புகள் இருப்பதாகத்தான் பல்வேறு மருத்துவ அறிக்கைகள் கூறுகின்றன.

தற்போது உடல் எடை உயர்வு ஒரு மிகப்பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ள நிலையில், வீட்டு வேலைகளை செய்ய இயந்திரங்கள் வந்ததும், உணவுப் பழக்கமும் காரணங்களாக இருந்தாலும், குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சையும் முக்கியக் காரணம் என்கிறது மருத்துவம்.

குடும்பக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சைக்குப் பிறகு பெண்களின் உடலில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுகின்றன. சினைப்பையில் ஈஸ்ட்ரோஜன் ஹார்மோன் சுரப்பில் பிரச்சினை ஏற்படுகிறது. அடைப்பு காரணமாக இந்த ஹார்மோன் சரியாக சுரக்காது. இதுதான் உடலில் அதிக கொழுப்பு சேராமல் தடுக்கின்ற ஹார்மோன். மருத்துவர்கள் இதை ப்ரொடக்டிவ் ஹார்மோன்' என்று அழைக்கிறார்கள். குடும்பக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை காரணமாக இந்த ஹார்மோன் சுரப்பு தடைப்பட்டு, அதிகப்படியான கலோரிகள் தேங்கி, கொழுப்புச்சத்து சேர்ந்து உடல் குண்டாகி விடுகிறது.

குடும்பப் பெண்கள் பலரும், குழந்தைகளும், கணவரும் மீதம் வைத்த உணவை, வீணாகி விடுமே என்று உண்பதும், உடற்பயிற்சி செய்யாமல் இருப்பதும், வீட்டு வேலைகளை செய்ய இயந்திரங்கள் இருப்பதும், டிவி பார்த்துக்கொண்டு நொறுக்குத் தீனி சாப்பிடுவதும், மதிய நேரத்தில் குட்டித் தூக்கம் என்று சொல்லி 2 அல்லது 3 மணி நேரங்கள் தூங்குவதும் உடல் பருமன் ஏற்படுவதற்கான காரணிகளாகப் பட்டியலிடுகின்றனர் மருத்துவர்கள்.

இன்னும் சிலர் கர்ப்பத்தைத் தவிர்ப்பதற்காகக் கருத்தடை மாத்திரைகளை தொடர்ந்து சாப்பிடுவர். இந்த மாத்திரைகளால் கர்ப்பத்திற்கான ஹார்மோன் சுரப்பில் தடை ஏற்பட்டு, கரு உருவாவது தடுக்கப்படும். இந்த மாத்திரைகளை அனைவரும் எடுத்துக் கொள்ள முடியாது. குறிப்பாக கால் வீக்கம், பித்தப்பையில் கல், ரத்தத்தில் அதிக கொழுப்பு உள்ளவர்கள் கருத்தடை மாத்திரைகளைப் பயன்படுத்தக் கூடாது. அப்படிப் பயன்படுத்தினால் பின் விளைவுகள் ஏற்படும் என எச்சரிக்கின்றனர் மருத்துவர்கள்.

சில பெண்கள் பரிசோதனை செய்து கொள்ளாமலேயே கொப்பர்-டி பொருத்திக்கொள்கிறார்கள். பின்னர் ரத்தப்போக்கு அதிகமாகி அவதிப்படுகின்றனர். எனவே, முழு உடல் பரிசோதனை செய்து கொண்டு, எந்தப் பிரச்சினையும் இல்லை என்றால் மட்டுமே கொப்பர்-டி பொருத்திக்கொள்ள வேண்டும். குறிப்பாக ரத்தம் எளிதில் உறைதல், வெள்ளைப்படுதல், அதிக ரத்தப்போக்கு போன்ற பிரச்சினைகள் உள்ள பெண்கள் கண்டிப்பாக கொப்பர்-டி பொருத்திக்கொள்ளக் கூடாது. அதேபோல் அதிகபட்சமாக 5 வருடங்கள் மட்டுமே கொப்பர்-டியைப் பயன்படுத்தலாம். அதற்குமேல் பயன்படுத்தினால் நோய்த் தொற்று ஏற்பட வாய்ப்புண்டு.

எனவே, நீங்கள் உட்பட, குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொண்ட பெண்கள் உணவு விஷயத்தில் மிகவும் கண்டிப்புடன் இருக்க வேண்டும். கலோரிகள் அதிகமுள்ள உணவுகளை எடுத்துக் கொள்வதைத் தவிர்க்க வேண்டும். முடியாத பட்சத்தில் குறைவான அளவு எடுத்துக் கொள்ளலாம். நார்ச்சத்துகள் நிறைந்த உணவுப்பொருட்களை அதிகமாகச் சாப்பிட வேண்டும். காய்கறிகள், பழங்கள், கீரைகளை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். தினமும் உடற்பயிற்சி செய்ய வேண்டும். குறைந்தது ஒரு நாளைக்கு 5 கிலோமீட்டர் தூரமாவது நடக்கலாம். முடிந்தால் நீச்சல் பயிற்சிக்குச் செல்லலாம். தொடர்ந்து யோகா, தியானம் செய்வது நல்ல பலனைத் தரும்.

★★★★★★★★★★★★★★★★★★★


விதுஷன், கியூபெக்

கேள்வி: இலங்கையில் இருந்து கனடா வந்து ஆறு வருடங்களாகின்றன. இங்கே எனக்கு மூன்று நண்பர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எனக்குப் பிறகு கனடா வந்தவர்களே. வயதிலும் என்னைவிட இரண்டு, மூன்று வயது மூத்தவர்களே. எனக்கு இப்போது வயது இருபத்து மூன்று. நாங்கள் மூவரும் ஒன்றாகவே தொழில்செய்கிறோம். ஒன்றாகவே தங்கியிருக்கிறோம். ஆயினும் பொதுவிடங்களில் நாம் நம் நாட்டவரையோ அல்லது வெளிநாட்டவரையோ சந்திக்கும்போது என்னைவிட மற்றவர்களுடன் சிரித்துப் பேசுகிறார்கள், பகிடி விடுகிறார்கள். என்னை யாரும் கண்டுகொள்வதில்லை. இத்தனைக்கும் எனக்கு எந்தக் குறைபாடும் இல்லை. இது ஏன் என்று தெரியவும் இல்லை. இதனால், எனக்கு யாருடனும் இலகுவாகக் கதைத்துப் பழகப் பயமாக இருக்கிறது. நான் என்ன செய்ய வேண்டும்?

பதில்: நீங்கள், மற்றவர்கள் உங்களை எப்படிப் பார்க்கிறார்கள் என்பதை மட்டுமே சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், உங்களைப் பற்றி நீங்கள் ஒன்றுமே சொல்லவில்லை. ஆகையால், எதனால் உங்களை எல்லோரும் ஓரங்கட்டுகிறார்கள் என்று சரியாகச் சொல்வது முடியாத காரியம். ஆயினும் பொதுவாகவே ஒரு சிலரை மற்றவர்கள் இப்படி நினைப்பதற்குக் காரணங்கள் பல இருக்கின்றன.

ஒரு சிலரைப் பார்த்தாலே நமக்கு மிகவும் பிடித்து விடும். நிறைய நாள் அவரிடம் பழகியதாக ஒரு எண்ணம் தோன்றும். ஒரு சில நாட்களிலேயே ஒருவருடன் நெருங்கிய தோழமை ஏற்பட்டுவிடும். ஆனால் ஒரு சிலரிடம் ஆண்டாண்டாக பேசிப் பழகினாலும், அவர் என் நண்பர் என்று கூட நம் மனம் ஏற்றுக் கொள்ளாது. இதற்குக் காரணம்? ஒரு நபர் பழகுவதற்கு இனிமையானவரா? அவரது நடவடிக்கைகள் மற்றவருக்கு நல்ல மதிப்பை ஏற்படுத்துகிறதா? ஒருவருடன் நாம் நட்பு பாராட்ட வேண்டும் என்று மனதிற்குள் தோன்றுகிறதா என்பதைக் கொண்டே அவருடனான நட்பு அமைகிறது.

எப்போதும் சிடுசிடுவென மூஞ்சியை வைத்துக் கொண்டிருப்பவர்களை யாருக்கும் பிடிக்காது. கலகலப்பாக பேசிப் பழகுபவர்களையும், மனதில் உள்ளதை மறைக்காமல் பேசுபவர்களையும்தான் எல்லோருக்கும் பிடிக்கும். உள்ளொன்று வைத்துக் கொண்டு புறமொன்று பேசுபவர்களை பொதுவாக யாருக்குமே பிடிக்காது. ஒரு நண்பர்கள் குழு உருவாகிறது என்றால், அங்கு அனைவருமே ஒரே மாதிரியான கருத்துடையவர்களாக இருக்க மாட்டார்கள். ஆனால் அவர்களுக்குள் ஏதோ ஒன்று ஒத்துப் போயிருக்கும். அந்த ஒற்றுமைதான் அவர்களது நட்புக்கு அடிப் படையாக அமையும்.



ஆனால், கலகலவென்று பேசுபவர்களுக்குத்தான் நண்பர்கள் கிடைப் பார்கள் என்றில்லை. அமைதியாக இருப்பவர்களுக்கும் நிறைய நண்பர்கள் இருப்பார்கள். கலகலவெனப் பேசுபவர்களின் பேச்சையும் யாராவது கேட்டுத்தானே ஆக வேண்டும். அப்படி உருவாகிறது இது போன்ற நட்பு.

அதேபோல, நன்கு படிப்பவரும், அடி முட்டாளும் கூட நல்ல நண்பர்களாக இருக்க வாய்ப்பு உள்ளது. படிக்கும் போது தன்னுடன் தனது நண்பனை வைத்துக் கொண்டு அவனது முன்னேற்றத்திற்கு உதவும் நண்பர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். நட்புக்கு ஏழை, பணக்காரன் என்ற பேதமும், ஜாதியும் குறுக்கே வராது.

நான் பணக்காரன், நான் யாரிடமும் சென்று பேச மாட்டேன். அவர்களே வந்து பேச வேண்டும் என்று பந்தா செய்யும் யாரிடமும் நண்பர்கள் நெருங்க மாட்டார்கள். அப்படியே நெருங்குபவர்களும், அவனது பணத்தைப் பயன்படுத்திக் கொள்ளத்தான் நினைப்பார்களேத் தவிர, நல்ல நண்பர்களாக இருக்க எண்ண மாட்டார்கள்.

எப்போதும் நீ பெரியவனா, நான் பெரியவனா என்பது போன்ற சிந்தனை நட்பு வட்டாரத்திற்குள் வரவே கூடாது.

சிலர் யாரையாவது தன் வசம் இழுக்க வேண்டும் என்று கருதி, மிகவும் கலகலப்பாக பேசுவது போல நடிப்பார்கள். இது நண்பர்களிடையே எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்திவிடும். அதேபோல, ஒருவரைப் பற்றி மற்றொருவரிடம் குறை சொல்வது நட்பு வட்டாரத்திற்கு இழுக்கு. மற்றவரைப் பற்றி என்னிடம் குறை கூறும் நீ, என்னைப் பற்றி மற்றவரிடம் குறை கூற மாட்டாயா என்ற எண்ணத்தை உருவாக்கி விடும்.

நட்பு வட்டத்தில் ஆண், பெண் என பலரும் இருக்கலாம். சில வட்டத்தில் ஒரு ஆணும், பெண்ணும் காதலிக்கத் துவங்கியதும், நட்பு வட்டத்தில் இருந்து விலகிச் செல்வதும், காதலை நண்பர்களுக்கு தெரிவிக்காமல் இருப்பதும் நட்பிற்கு செய்யும் தவறாகும்.

நட்பு என்பது தினமும் சந்தித்து பேசி, சிரித்து மகிழ்வது மட்டுமல்ல.. எங்கிருந்தாலும், நமக்காக நமது நண்பன் இருக்கிறான் என்ற எண்ணத்தை உருவாக்குவதே. அந்த எண்ணம் உங்கள் மனதில் வந்துவிட்டால், பல ஆண்டுகள் பேசிக்கொள்ளாமல் இருந்தாலும் உங்கள் நண்பன் உங்கள் நண்பனாகவே இருப்பான்.

உங்களுக்கு நிறைய நண்பர்கள் இருக்கிறார்கள் என்றால், பல ஆண்டுகால நட்புகளையும் நீங்கள் தவறாமல் புதுப்பித்துக் கொள்கிறீர்கள் என்றால், உங்கள் நண்பர்களுக்கு இடையே ஒரு வட்டம் இருக்குமானால் நீங்கள் பழகுவதற்கு இனிமையானவர்தான்.

அதில் நீங்கள் எவ்வகையைச் சார்ந்தவர்கள் என்று உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள். மேற்படி பண்புகளில் ஏதாவது ஒன்று இருக்குமானால், அதைத் திருத்திக்கொள்ளப் பாருங்கள். நட்பு உங்களுடன் நட்புக் கொள்ளும்.

★★★★★★★★★★★★



அந்தரங்க அற்புதம்

கட்டுரை தொடர்பான தங்களுடைய கருத்துக்களை யும்.
உங்களுக்குத் தேவைப்படும் அந்தரங்க
ஆலோசனைகளையும் அனுப்ப வேண்டிய முகவரி:
அந்தரங்க மனவள ஆலோசகர்:
அந்தரங்க அற்புதம் பகுதி
மின்னஞ்சல்:
antharangaminfo@gmail.com

இந்த வார ராசி பலன்கள்

17.01.2012 முதல் **23.01.2012** வரை

மேஷ ராசி அன்பர்களே!

மேஷ ராசிநாதன் செவ்வாய் 5-ல் நிற்க, அவருக்கு சாரம் கொடுத்த சுக்கிரனும் செவ்வாயும் சமசப்தமமாக இருக்கிறார்கள். எனவே, உங்கள் பேச்சிலும் செயலிலும் தெளிவு காணப்படும். என்றாலும் ஏதாவது குழப்பங்கள் மனதில் தோன்றி மறையும். தடையாகி வந்த வேலைகள் சீக்கிரம் முடியும். பொருளாதாரம் திருப்திகரமாக இருக்கும். என்றாலும் வரவுக்கு மீறிய செலவுகள் இருந்து கொண்டே இருக்கும்.

ரிஷப ராசி அன்பர்களே!

ரிஷப ராசிநாதன் சுக்கிரன் 10-ல் திக்பலம் பெற, 9-க்குடைய சனி சுக்கிரன் வீட்டில் பரிவர்த்தனையாக இருந்து குருவின் பார்வையைப் பெறுகிறார். எனவே எதிலும் வேகமாகவும் சாதுர்யமாகவும் நடந்து வெற்றிகளைக் குவிப்பீர்கள். மகளுக்கு நல்ல வரனும் மகனுக்கு நல்ல வேலைவாய்ப்புச் செய்தியும் வந்து சேரும். மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும். பெற்றோர் உங்களை அனுசரித்துப் போவார்கள்.

மிதுன ராசி அன்பர்களே!

மிதுன ராசிநாதன் புதன் அஸ்தமனமாக இருந்தாலும், குரு வீட்டில் நின்று குருவின் பார்வையைப் பெறுவதாலும் குருவும் சனியும் 10, 9-க்குடையவராகி பார்த்துக்கொள்வதாலும் குடும்பத்தில் குதூகலம் பிறக்கும். மாணவர்கள் கல்வியில் உயர்ந்த நிலை அடைவார்கள். பரிசுகளும் பாராட்டுகளும் பெறலாம். ஆடை, ஆபரணங்கள், வீட்டுக்குத் தேவையான பொருட்கள் அனைத்தும் வாங்கி மகிழலாம். உங்களை விட்டுப் பிரிந்த தோழர்கள்- தோழிகள் மீண்டும் நட்புடன் பழகுவார்கள்.

கடக ராசி அன்பர்களே!

கடக ராசிக்கு 9-க்குடைய குரு 10-ல் நிற்பதால் தர்ம கர்மாதிபதி யோகம் ஏற்படுவதோடு, 10-க்குடைய செவ்வாயையும் குரு பார்க்கிறார். சுக்கிரனும் சனியும் பரிவர்த்தனை. எனவே, உங்களின் உடல்சோர்வும் மனச்சோர்வும் நீங்கி புதுத்தெம்பும் உற்சாகமும் ஏற்படும். பொருளாதாரத்தில் பிரச்சினை இருக்காது. குடும்பத்தில் குதூகலமும் மகிழ்ச்சியும் தாண்டவமாடும். குடும்ப காரியங்களில் அடுத்தவர்களின் பேச்சைக் கேட்காமல் சுயமாகச் சிந்தித்து முடிவுகளை எடுப்ப நன்மை.

சிம்ம ராசி அன்பர்களே!

சிம்ம ராசிநாதன் சூரியன் 6-ல் மறைவு. அவருக்கு வீடு கொடுத்த சனி ராசிக்கு 3-ல் மறைவு. 4, 11-க்குடைய சுக்கிரன் 7-ல் நின்று ரா்சியைப் பார்க்கிறார். ஒரு சிலருக்கு திருமண யோகம் ஏற்படும். திருமணமாகி முன் கோபத்தால் பிரிந்தவர்கள் ஒன்று சேர்வார்கள். பணியாளர்களுக்கு வேலைப் பளு அதிகரிக்கும். என்றாலும், மனநிம்மதி கிடைக்கும். ஒரு சிலருக்கு வெளிநாட்டுத் தொடர்பான வேலை வாய்ப்புகள் ஏற்படும். கூட்டுத் தொழில் லாபகரமானதாக இருக்கும்.

கன்னி ராசி அன்பர்களே!

கன்னி ராசிநாதன் புதன் அஸ்தமனமாக இருந்தாலும், ராசிக்கு 4-ல் நின்று 10-ஆம் இடத்தைப் பார்க்கிறார். புதனுக்கு வீடு கொடுத்த குரு புதனை பார்க்கிறார். 7-க்குடைய குரு 8-ல் மறைவாகிறார். சுக்கிரனும் 6-ல் மறைவு. எனவே கணவன்- மனைவியிடையே பிரச்சினைகள் தோன்றி மறையும். மாணவர்களின் எண்ணங்கள் பூர்த்தி அடையும். வியாபாரிகளுக்கு போட்டிகள் இருந்தாலும் லாபம் குறையாது. உத்தியோகஸ்தர்களுக்கு வருமானம் உயரும்.

துலா ராசி அன்பர்களே!

துலா ராசிநாதன் சுக்கிரனும் துலா ராசிக்கு ராஜயோகாதிபதியான சனியும் பரிவர்த்தனையாக இருக்கிறார்கள். அத்துடன் குரு பார்வை ராசிக்கும் கிடைக்கிறது. ராசியில் உச்சமாக உள்ள சனிக்கும் கிடைக்கிறது. குருவும் சனியும் சேர்ந்தால் சண்டாள யோகம் என்பார்கள். ஆனால் குருவும் சனியும் பார்த்துக்கொண்டால் விபரீத யோகம் எனப்படும். ராசிநாதன் சுக்கிரன் 10-ஆம் இடத்துக்கு 8-ல் மறைகிறார். 4-க்குடைய சனி 10-ஆம் இடத்தைப் பார்க்கிறார்.

விருச்சிக ராசி அன்பர்களே!

விருச்சிக ராசிநாதன் செவ்வாய் 10-ல் நின்று தன் ராசியைப் பார்க்கிறார். 2-க்குடைய குரு 6-ல் மறைந்தாலும் 2-ஆம் இடத்தையும் ராசிநாதன் செவ்வாயையும் பார்க்கிறார். எனவே அடிப்படை வாழ்க்கை வசதிகளுக்கும், அன்றாடத் தேவைகளுக்கும் என்றும் குறைவில்லை. ஆனால், ஜென்ம ராகுவும் 7-ஆம் இடத்துக் கேதுவும் திட்டமிட்டபடி எதையும் செயல்படுத்த முடியாமல் செய்வார்கள்.

தனுசு ராசி அன்பர்களே!

தனுசு ராசிநாதன் குரு 5-ல் திரிகோண பலம் பெற்று தன் ராசியைப் பார்ப்பதோடு, 5-ஆம் இடம், 11-ஆம் இடங்களையும் பார்க்கிறார். அத்துடன் 11-ல் உச்சம் பெற்ற சனியும் தனுசு ராசியையும் பார்க்கிறார். ராசிநாதன் குருவையும் பார்க்கிறார். எல்லாவகையிலும் நீங்கள் கழுவின மீனில் நழுவின மீனாகத் தப்பி விடுவீர்கள். அதேசமயம் ஜாதக தசாபுக்திகள் பாதகமாக இருந்தால் தொழில் கவலை, கடன் கவலை, வாக்கு நாணயத்தைக் காப்பாற்ற முடியாத நிலை ஏற்படும்.

மகர ராசி அன்பர்களே!

மகர ராசிநாதன் சனி 10-ல் உச்சம். குரு பார்வை! குரு 3, 12-க்கு உடையவர் என்பதால், தொழில் சம்பந்தமான விரயமும் செலவும் ஏற்பட்டாலும், அவை தொழில் விருத்திக்காகவும் அல்லது சீர்திருத்தத்துக்காகவும் தான் அமையும். சிலர் புதிய தொழில் திட்டங்களைத் தொடங்கலாம். 5-ல் உள்ள கேதுவும் அவரைப் பார்க்கும் ராகுவும்- எதிர்காலத் திட்டங்கள் முறையான திட்டங்களாக இருந்தாலும், அவற்றை நிறைவேற்றுவதில் குறுக்கீடுகளையும் தயக்கத்தையும் ஏற்படுத்துவார்கள்.

கும்ப ராசி அன்பர்களே!

கும்ப ராசிக்கு அட்டமத்துச் சனி முழுமையாக விலகிவிட்டது. ராசிநாதன் சனியும் உச்சம் பெற்று விளங்குகிறார். 2, 11-க்குடைய குருவின் பார்வையையும் பெறுகிறார். எனவே எல்லாம் இனி உங்களுக்கு நல்லபடியாகவே நடக்கும் என்று ஆசிர்வாதம் பண்ணலாம். என்றாலும் மழை விட்டும் தூறல் நிற்காதமாதிரி, உங்கள் பிரச்சினைகள் முழுமையாக விலகி ஓடிப்போய் விடவில்லை. சிலகாரியங்கள் தெய்வ ரகசியமாக அமையும்.

மீன ராசி அன்பர்களே!

மீன ராசிநாதன் குரு 2-ல் நல்ல இடத்தில் இருக்கிறார். 6, 8, 10-ஆம் இடங்களைப் பார்க்கிறார். 10-க்குடையவரே 10-ஆம் இடத்தைப் பார்ப்பதால் உங்கள் வாழ்க்கை, தொழில், சம்பாத்தியம் ஆகியவற்றுக்கு எந்த பாதிப்புக்கும் இடமில்லை. என்றாலும் அட்டமத்துச் சனி இருக்கிறாரே- அவருடைய விளையாட்டு உங்களுக்கு நல்லதா கெட்டதா என்று புரிந்து கொள்ள முடியாத விளையாட்டாக இருக்கும். ஏனென்றால் 11, 12-க்குடைய சனி 8-ல் உச்சம்.

கற்றும் கெட்டதைச் செய்பவன் குருடன்; நல்லது கேட்காதவன் செவிடன். - ஆதிசங்கரர்

பெண்ணுடலின் முக்கியமான மூன்று!



பெண்களுக்கு அதிகப்படியாக கொழுப்பு சேரும் இடம், தொடை, இடுப்பு மற்றும் பின் பகுதிதான்! குழி விழுந்த, மேடு பள்ளமான தோற்றத்தைத் தரும் இந்தக் கொழுப்புக்குப் பெயர் தான் செலுலைட்.

எதனால் செலுலைட் உருவாகிறது?

எண்ணெய்யில் பொரித்த உணவு, மது, கொஃபைன் (கோப்பியில் உள்ளது) சர்க்கரை ஆகியவை செலுலைட் உருவாக முக்கிய காரணம். அத்தோடு, ஹார்மோன் மாத்திரைகள் சாப்பிடுவது, பரம்பரையாக வருவது, உடற்பயிற்சி அதிகம் இல்லாதது, இவற்றாலும் செலுலைட் உருவாகிறது.

செலுலைட்டை ஒழிப்பது எப்படி?

இதற்கு இரு வழிகள் உண்டு.

இயற்கை வழி: உடற்பயிற்சி

வருவதற்கு முன் காப்பது நல்லது, என்பதை மறந்து விடாதீர்கள். கொழுப்புச் சத்து உள்ள உணவை சாப்பிட்டு விட்டு உடற்பயிற்சி செய்தால் பயனில்லை. உடற்பயிற்சியால் தற்போது இருக்கும் செலுலைட்டை தான் குறைக்க முடியும்.

உணவுக் கட்டுப்பாட்டால் தான் செலுலைட் உருவாகுவதை தடுக்கலாம். எடை குறைக்க பத்து நாள் பட்டினி கிடந்தால் பயனில்லை. இந்த வகையான டயட்டிங் உங்கள் தசைகளைக் குறைத்து உங்களை பலவீனமாக்கும்.

கொழுப்பு அப்படியே தங்கிவிடும். வறுத்த, பொரித்த உணவுப் பொருட்கள், நெய், அசைவ உணவு ஆகியவற்றை சாப்பிடுவது குறைத்துக்கொள்ள வேண்டும்.

ஒரு வாரத்தில் மூன்று நாட்களாவது 1/2 மணி நேரத்திற்கு உடற்பயிற்சி செய்தால் தான் பயனளிக்கும்

தண்ணீர் குடிப்பது குறைந்தாலும் செலுலைட் உருவாகும். அதனால் தினமும் நான்கு லீற்றர் தண்ணீரை சீரான இடைவெளியில் ஒவ்வொரு மிடறு மிடறாகக் குடிப்பது நல்லது.

நம் முன்னோர்கள் தேங்காய் நாறால் உடலை தேய்த்து குளிப்பது வழக்கம். இது எந்த அளவுக்கு நம் உடலுக்கு நல்லது என்பது இன்று நிரூபிக்கப்பட்டுள்ளது. தேங்காய் நாறை, உடலை தேய்க்கும் பிரஷ் போல் உபயோகிக்கவும். பிளாஸ்டிக் பிரஷை விட இது பன்மடங்கு சிறந்தது.

செயற்கை முறை:-

லைபோசக்ஷன் :- இந்த முறையில் ஒரு சின்ன டியூப்பை கொழுப்பு இருக்கும் இடத்தில் விட்டு, கொழுப்பு உறிஞ்சப்படுகிறது. இதனால் கொழுப்பு குறைந்தாலும் வளவளப்பான தோற்றத்தை அந்த இடம் இழந்து விடுகின்றது. அது மட்டுமல்லாமல் இதில் அதிகமாக வலி ஏற்படும். ஒரு மாதம் வரை தழும்புகள் நீடிக்கும்.

அடுத்த பகுதி முதுகு.

குளிக்கும் போது நாம் அதிகம் கவனம் செலுத்தாத பகுதி முதுகு. இதனால் பொதுவாக முதுகுப் பகுதி அழகிழந்து, மங்கலாக தோற்றம் அளிக்கிறது. அழகான முதுகு தெரியும் வகையில் பிறர் அணியும் உடைகளைப் பார்த்து நீங்கள் இனி பொறாமை பட வேண்டாம்! இதோ உங்கள் முதுகு அழகு பெற சில குறிப்புகள்.

குளிக்கும் போது முதுகு தேய்க்க உங்கள் கைகளை விட மேற்குறிப்பிட்டதுபோல் தேங்காய் நாறை உபயோகிப்பது நல்லது.

வாரத்தில் ஒரு முறை சந்தனம் மற்றும் பன்னீர் கலந்த கலவையை முதுகில் தடவவும். உலர்ந்த பிறகு கழுவிவிடவும். இது முதுகிற்கு நல்ல பொலிவை தரும்.


முதுகை ஸ்க்ரப் செய்வதால் உயிரிழந்த சருமம் அகன்று முதுகு புத்துயிர் பெறும்.

கடையில் கிடைக்கும் ஸ்க்ரப் உபயோகிக்க விருப்பமில்லை என்றால், வீட்டிலேயே தயாரித்துக் கொள்ளலாம்.

உலர்ந்த சருமத்திற்கு: இரண்டு தேக்கரண்டி சர்க்கரையுடன் நான்கு தேக்கரண்டி ஒலிவ் எண்ணெய்யை சேர்க்கவும். இந்தக் கலவையால் முதுகை நன்றாக தேய்க்கவும். பிறகு கழுவவும்.

எண்ணெய் பசை சருமத்திற்கு: இரண்டு தேக்கரண்டி சர்க்கரையுடன் ஆறு தேக்கரண்டி எலுமிச்சை சாற்றை சேர்க்கவும். இதைக் கொண்டு முதுகை நன்றாக தேய்த்து, பின் கழுவவும்.

இது மட்டுமில்லாமல் நேராக நிமிர்ந்து நடப்பதும் உங்கள் முதுகிற்கு அழகை சேர்க்கும்.



உண்மையைக் கடைபிடிப்பவர்கள், ஆயிரம் வீரர்களை விட வலிமை மிக்கவர்கள். - சிம்மன்ஸ்

புதிய சுவை



சிக்கன் சால்னா

தேவையான பொருட்கள்:

சிக்கன் - கால் கிலோ, இஞ்சி - 1 துண்டு, பூண்டு - 1, பெரிய-வெங்காயம் - 2, பெங்களூர் தக்காளி - 2, பச்சை மிளகாய் - 3, புதினா - 1 கோப்பை, கொத்தமல்லி, மிளகாய் தூள் - காரத்திற்கு ஏற்ப, தனியா தூள் - 1 தேக்கரண்டி, சீரக்கத்தூள் - 1 தேக்கரண்டி, மஞ்சள் தூள் - 1 தேக்கரண்டி, உப்பு, தேங்காய், முந்திப்பருப்பு

தாளிக்க:

பட்டை, கிராம்பு, ஏலக்காய், எண்ணெய், சோம்பு, கருவேப்பிலை

செய்முறை:

வெங்காயத்தையும், தக்காளியையும் சிறிது சிறிதாக வெட்டிக்கொள்ளவும். இஞ்சி மற்றும் பூண்டை விழுதாக அரைத்துக்கொள்ளவும். அதன் பின் தேங்காயையும் தனியாக அரைத்து எடுத்துக் கொள்ளவும். முதலில் கடாயில் எண்ணெய் ஊற்றி பட்டை, கிராம்பு, ஏலக்காய், எண்ணெய், சோம்பு, கருவேப்பிலை போட்டுத் தாளிக்கவும். பிறகு வெங்காயம், இஞ்சி பூண்டு விழுது, தக்காளி, பச்சை மிளகாய், புதினா, கொத்தமல்லி என்று ஒன்றன் பின் ஒன்றாக போட்டு வதக்கிக்கொள்ளவும். நன்கு வதங்கியவுடன் சிக்கனைப் போட்டு வதக்கவும். 5 நிமிடம் கழித்து மிளகாய்த் தூள், தனியாத் தூள், சீரகத் தூள், மஞ்சள் தூள் போட்டு தேவையான அளவு தண்ணீர் ஊற்றி நன்கு கொதிக்க விடவும். நன்றாகக் கொதி வந்தவுடன் தேங்காய் விழுதினைச் சேர்த்து மேலும் நன்றாக வேகவிடவும். நன்கு கொதித்து எண்ணெய் மேலே வந்தவுடன் கொத்த மல்லி தூவி இறக்கவும். சுவையான எளிதில் செய்ய கூடிய சிக்கன் சால்னா இப்பொழுது உங்கள் கைகளில்.

★★★★★★★★★★★★★★★★★


கீரைத்தண்டு பொரியல்

தேவையான பொருட்கள்:

கீரைத்தண்டு - 1 கட்டு, வெங்காயம் - 1/4 கோப்பை (பொடி யாக நறுக்கியது), கடலைப் பருப்பு - 2 மேசைக்கரண்டி, தேங்காய்ப்பூ துருவல் - 2 மேசைக் கரண்டி, மஞ்சள்தூள் - 1/4 தேக்கரண்டி, எண்ணெய் -1/2 தேக்கரண்டி, கடுகு - 1/2 தேக்கரண்டி, காய்ந்த மிளகாய் -3, பெருங்காயத்தூள் - 1 சிட்டிகை, கறிவேப் பிலை -சிறிது, உப்பு - தேவையான அளவு

செய்முறை:

முதலில் கீரையைத் தண்ணீரில் நன்கு அலசி ஆய்ந்து எடுத்துவிட்டு, தண்டை மட்டும் பொடியாக நறுக்கி வைத்துக்கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் சிறிது நீர் விட்டு கடலைப்பருப்பை கழுவிப் போட்டு, மஞ்சள்தூள் சேர்த்து கொதிக்க விடவும். கடலைப்பருப்பு சிறிது வேகத் தொடங்கியதும், அரிந்து வைத்திருக்கும் கீரைத்தண்டை போட்டு தேவையான அளவு உப்பு சேர்த்து வேகவிடவும். இரண்டும் சேர்ந்து வெந்த பதம் வந்ததும், அடுப்பை அணைத்துவிடவும். வேறு ஒரு பாத்திரத்தை அடுப்பில் வைத்து, எண்ணெய் ஊற்றி, கடுகு போட்டுப் பொரிந்ததும், மிளகாயை இரண்டாகக் கிள்ளிப்போட்டு, பெருங்காயத்தூள், கறிவேப்பிலையை சேர்த்து, வெங்காயம் சேர்த்து வதக்கவும். வெங்காயம் வதங்கியதும், வேகவைத்த கீரைத்தண்டு கடலைப்பருப்பு கலவையைப் போட்டு, தேவைப்பட்டால் சிறிது உப்பு சேர்த்து, கொஞ்ச நேரம் கலந்து வேக விடவும். கடைசியாக தேங்காய்ப்பூ போட்டு கிளறி இறக்கவும். மிகச் சுலபமான, சத்தான கீரைத்தண்டு பொரியல் தயார்!



★★★★★★★★★★★★★★★★★

மேக்ரோனி இன் ஸ்பினாச் சோஸ்

தேவையான பொருட்கள்:

மேக்ரோனி - 1 கோப்பை, பூண்டு - 3 பல், ஸ்பினாச் கீரை - 1 கோப்பை, துருவிய சீஸ் -3 மேசைக்கரண்டி, வெண்ணெய் - 1 1/2 மேசைக்கரண்டி, ஒலிவ் எண்ணெய் - 1 தேக்கரண்டி, மைதா மா - 2 தேக்கரண்டி, பால் - 3/4 கப், மிளகுத்தூள் - சுவைக்கேற்ப, உப்பு - தேவையான அளவு

செய்முறை:

முதலில் மேக்ரோனியை உப்பு கலந்த கொதிக்கும் நீரில் போட்டு நன்கு வேக வைத்து, தண்ணீரை வடித்துவிட்டு, மேக்ரோனியின்மீது ஆலிவ் எண்ணெயை விட்டு லேசாக கலந்து எடுத்து வைக்கவும். ஸ்பினாச் கீரையை, நன்கு தண்ணீரைப் பிழிந்துவிட்டு, பொடியாக நறுக்கி வைத்துக்கொள்ளவும். பூண்டு பல்லையும் பொடியாக நறுக்கி வைக்கவும். ஒரு பாத்திரத்தில், வெண்ணெய்யைப்



போட்டு சூடாக்கி, அதில் நறுக்கிய பூண்டுத் துண்டுகளைப்போட்டு ஒரு நிமிடம் வதக்கவும். இதனுடன் மைதாவைப் போட்டு, அடுப்பு அனலைக் குறைவாக வைத்துக்கொண்டு, 2 - 3 நிமிடங்கள் வறுக்கவும். அடுத்து பாலைச் சிறிது சிறிதாக விட்டு, கட்டியில்லாமல் கலக்கவும். பால், மைதா எல்லாம் கலந்து கெட்டியான சோஸ் போல வரும். இப்போது, நறுக்கி வைத்திருக்கும் கீரையைப் போட்டு ஒருமுறை கலந்துவிட்டு, ஒரு கொதி வந்ததும், 2 மேசைக்கரண்டி துருவிய சீஸ், மற்றும் வேகவைத்திருக்கும் மேக்ரோனியையும் போட்டு நன்கு கலந்து விடவும். கூடவே அவரவர் சுவைக்கேற்ப மிளகுத்தூள், உப்பு சேர்த்துக்கொள்ளவும். இதனை பரிமாறும் பாத்திரத்தில் மாற்றி, மீதம் உள்ள சீஸை மேலே தூவி அலங்கரித்துப் பரிமாறவும். குழந்தைகளுக்கு பிடித்தமான மேக்ரோனி சீஸ், இப்போது சத்தான ஸ்பினாச் சோஸுடன் தயார்!

ஆஸ்திரியாவின் குளிர்கால இளைஞர் ஒலிம்பிக்ஸ்: கனடா பிரதமர் வாழ்த்து



ஆஸ்திரியாவின் இன்ஸ்பெர்க்கில் குளிர்கால இளைஞர் ஒலிம்பிக்ஸ் சனவரி 13ம் திகதி முதல் 22ம் திகதி வரை நடைபெறுகின்றது. இந்தப் போட்டிகளின் ஆரம்ப நாளை முன்னிட்டு கனடாவின் பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர் ஒரு அறிக்கையின் மூலம் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

''கனடா மக்கள் அனைவரின் சார்பாகவும், முதன் முதலாக நடைபெறுகின்ற குளிர்கால இளைஞர் ஒலிம்பிக்ஸ் போட்டி நிகழ்ச்சிகளில் நமது விளையாட்டு வீரர்கள் யாவரும் அவர்களின் முயற்சிகளில் நல்லதிர்ஷ்டமும், வெள்ளிகளும் பெற்றிட வேண்டுமென வாழ்த்துகிறேன்.

இப்போட்டிகளில் கலந்து கொள்ளும் கனடாவின் ஐம்பத்தோறு விளையாட்டு வீரர்களும் அவர்களின் திறமையையும், திறனையும் உலகுக்குக் காட்டுவார்கள் என நம்புகிறேன். அவர்களின் கடின உழைப்பும், உறுதிப்பாடும் இந்த முதல் குளிர்கால இளைஞர் ஒலிம்பிக்ஸில் ஒரு மைல் கல்லாக அமைந்திடும் மேலும் இது அவர்களின் எதிர்கால வாழ்விற்கு ஒரு நம்பிக்கையையும் அளிக்கும் என்பதில் சந்தேகமில்லை. விளையாட்டுத் துறையில் உடல் உழைப்பின் பெருமையை உணர்ந்த, எமது அரசு போட்டிப் பங்கேற்பிற்கு எல்லா மட்டங்களிலும் ஆக்கப்பூர்வமான ஊக்கத்தை அளித்து, விளையாட்டு வீரர்களின் நல்வாழ்விற்கும் சுறுசுறுப்பான வாழ்க்கை முறைக்கும் உதவும்.

சர்வதேச அரங்கில் பங்கில் பங்கு மற்றும் கனடாவின் விளையாட்டு வீரர்களுக்கு மீண்டும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்''. இவ்வாறு கனடா பிரதமர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



VANCOUVER – Prime Minister Stephen Harper announces an agreement in principle with Vancouver Shipyards Co. Ltd. that paves the way for the construction of Canada's non-combat fleet under the National Shipbuilding Procurement Strategy (NSPS).

கனடா அரசு கப்பல் கட்டும் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்தது

கனடா பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர் சமீபத்தில், இர்விங் கப்பல் கட்டும் நிறுவனத்துடன் அரசு கொள்கை ரீதியாக ஏற்படுத்திக் கொண்டுள்ள ஒப்பந்தம் பற்றி அறிவித்துள்ளார். ''கனடா அரசு இர்விங் கப்பல் கட்டும் நிறுவனத்துடன் வெற்றிகரமாக கொள்கை அளவிலான ஓர ஒப்பந்தத்தைத் கனடாவிற்குத் தேவையான போர்க் கப்பல்களை தேசிய கப்பல் கட்டும் மற்றும் கொள்முதல் திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்படும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கனடாவின் நீர் எல்லைகளைப் பாதுகாப்பதற்காக நாம் வேகமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். உரிய உறுதியான ஒப்பந்தங்களின் மூலமாக கனடா நாட்டிற்குத் தேவையான போர்க்கப்பல்களைக் கட்டுவதற்கு ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த ஒப்பந்தம் கனடாவின் போர்க்கப்பல் கொள்முதல் திட்டத்தில் ஒரு மைல் கல்லாகக் கருதப்பட வேண்டும். இதன் மூலம் வேலை வாய்ப்பு, பொருளாதார வளர்ச்சி, தொழில் ஸ்திரத்தன்மை, சீருடை அணிந்த ஆண்களுக்கும் பெண்களுக்குமான தளவாட உத்திரவாதம் முதலியன உறுதி செய்யப்பட்டுள்ளன'' என்று கனடா பிரதமர் ஹார்ப்பர் தெரிவித்துள்ளார்.

எந்த மனிதனுக்கும், நியாயமானதை செய்வதற்குத்தான் உரிமையுண்டு. தன் விருப்பம்போல் செய்வதற்கு உரிமையில்லை. - சிம்மன்ஸ்


"Happy Thai Pongal Vaalthu"
புதிய மற்றும் பாவித்த
HONDA வாகனங்களுக்கு நாடுங்கள்...
2011 HONDA புதிய வாகனங்களுக்கு
குறைந்த வட்டி வீதம், 5 வருடங்கள் 0.9%
ராஜா தர்மலிங்கம்
- Dir: 647 833 4998
2240 Markham Road, (at Finch) Scarborough.
www.formulahonda.com
FORMULA HONDA
Where you're treated like family


JAFFNA SUPER STORE
INTERNATIONAL FOOD SUPER STORE
Specialists in Asian & West Indian
Food Products & Spices
Tel: (416) 289-8812


New M&S Convenience
We Sell Sri Lankan Groceries
We sell & Rent Singhala & Tamil teledramas & movies
We also rent English movies
2169 Victoria Park Ave
Scarborough Ont
M1R 1V5
Phone :- (416) 444 - 8202
Fax:- (416) 444 - 8202


Traffic Tickets
Criminal Matters
Summary
Motor Vehicle Accidents
SKT PARALEGAL SERVICE
Kalakalappu Theesan
Member of Law Society of Upper Canada
S.K. Theesan
எஸ்.கே.தீசன்
416-803-5296


Perrii Muthuraman MBA; M.Com
Ph: 416.473.6100 / 647.352.4945
A TRUSTED ADVISOR, PROVIDING ADVICE & SOLUTIONS ON
"Happy Thai Pongal Vaalthu"
Real Estate: Commercial, Investment & Residential
Finance & Money for Business & Real Estate Needs
Protecting your Greatest Assets : yourself & loved ones
Reducing Debts & Accumulating wealth Tax Free
Sales Rep at
HomeLife/GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Rd., #206 Toronto ON M1S 2Y3
Bus : 416.321.6969 | Fax : 416.321.6963
www.homelifegtarealty.com
* Independently owned and operated
Mortgage Agent at
Avanti Financial Services Inc
IMBA
933 Dillingham Rd
Pickering, ON, L1W 1Z7
Email : perrii@avanti-financial.com
www.avanti-financial.com
Independent Financial Advisor & Personal Coach at
DREAMS MONEY
105-2100 Ellesmere Road, Scarborough, ON, M1H 3B7
Ph: 647 352 4945 | Fax: 647 352 6110
Email : perrii@dreamsandmoney.com | www.dreamsandmoney.com
FSCO
Agent Lic # 02069785



"Happy Thai Pongal Vaalthu"

The Chennai Spice

Ultimate South Indian Feast

Dine in, Take out, Catering & Bar

Pongal Special Offer

50% OFF

Lunch: Buy one Lunch Buffet get 2nd one 50% off

Dinner: Buy one Thali get the 2nd Thali 50% off (Dine in Only)

Taxes Extra | Cannot combined with other offer | Offer valid till Jan 14th 2012



Special Lunch Combo Menu (Lunch Only)

Idly 2 Vada 2 (limit 8ozsambar)	2.99
Idly 4	2.99
Vada 3	2.99
Sambar Idly 2 or Vada 2	2.99
VenPongal Vada 1	3.99
Uppuma-Vada 1	3.99
Poori 2 Masala 4oz	3.99
Parota 1 Vegkorma 4oz	3.99
Batura 1 Potato Masala 4oz	3.99
All dosas served with 8oz of sambar 2oz of chutney	2.99
Mini-Plain Dosa	3.99
Mini-Masala Dosa	3.99
Mini-Mysore Masala Dosa	4.50
Mini-Spinach Dosa	4.99
Mini-Paneer Dosa	2.99
Veg-Biryani ½ plate (2 oz raitha)	2.99
Veg-Curry 8oz - rice or naan	3.99
Chicken curry 8oz - rice or naan	3.99
Butter Chicken 8oz-rice or naan	4.99
Goat Curry 8oz 4 pieces with bone rice or naan	5.99
Chicken Biryani ½ plate (2 oz raitha)	4.99
Mutton Biryani ½ plate	5.99

Extras

Add coffee for 1.50, Sambar 4oz 0.99, Coconut Chutney 4oz 0.99, Potato Masala 4oz 0.99, Raitha 4oz 0.99, Curd 4oz 0.99





LICENSED BAR



www.thechennaispice.ca

Open 6 Days a week (Wednesday Holiday)

Mon-Thursday 11:30 am to 3.00 pm, 5:00 pm to 9.30 pm
Fri-Sat 11:30 am to 3:30 pm, 5:00 pm to 10:00 pm
Sunday 11:30 am to 3:30 pm, 5 pm to 9 pm)



155 Clark Blvd, Brampton, ON L6T 4G6
(410 Clark, West Drive)
Near Bramelea City Center



Tel: 905 452 7777 416 833 4970



வரும்முன் காப்போம் - மருத்துவத் தொடர்

இடுப்பு நோவு



இடுப்பு நோவு

குனிந்தால் நிமிர முடியல, நிமிர்ந்தால் குனியமுடியல என்று முணுமுணுத்தார் ஒருவர். மற்றவர் பதிலாக வயது போனா இப்படித்தான் என்று பதிலளித்தார். அதற்கு அந்த முதியவர் இல்லையடா தம்பி எனக்கெண்டா பரவாயில்லை நீர் சொன்னமாதிரி வயது போட்டுது. ஆனால் வீட்டில இருக்கிற இளசுகளும் கனபேர் இடுப்பை பிடிச்சுக் கொண்டல்லே திரியினம்.

இப்படிப் பலபேர் உரையாடுவதை நீங்களும் கேட்டிருப்பீர்கள். இன்று பெரும்பானோர் மிகவும் அவதிப்படும் இடுப்புவலியினைப் பற்றித்தான் இந்த வார வாழ்க நலமுடன் தொடரில் சில சுவாரசியமான தகவல்களை தருகின்றேன். படித்து பயன்பெறுவீர்கள் என நம்புகிறேன்.

இடுப்பு வலிக்கு லம்பாகோ (*Lumbago*) என்று இன்னொரு புனைப் பெயருமுண்டு. முள்ளந்தண்டு எலும்புகள், இடுப்புவளைய எலும்புகள், இவற்றைச் சுற்றியுள்ள தசைகள், தரசநார்கள், கசியிழைய தட்டுகள், நரம்புத்தொகுதி போன்றவற்றிலுண்டாகும் பாதிப்புக்களினால் தான் பெரும்பாலான இடுப்பு வலிகள் ஏற்படுகின்றன.

ஏன் இந்த வலி?

எப்படி வருகிறது?

திடீரென தோன்றும் இடுப்புவலி மற்றும் நாள்பட்ட இடுப்புவலி என்று இருவகையுண்டு. இதில் முதல் வகையானது இடுப்புப் பகுதியில் அடிபட்டு காயங்கள் ஏற்படுவதாலும் விபத்தின் போது எலும்பு முறிவு அல்லது அதிர்வுகள், தசை, தசைநார் கிழிதல், உள்கண்டல் காயங்கள், எலும்புகளின் இடையேயுள்ள கசியிழைய தட்டுகள் விலகுதல் அல்லது வெடிப்பு, வீக்கம உண்டாதல் மற்றுடம வயிற்றுக்குள்ளே சில தீவிர நோய்களின் அறிகுறி போன்ற இன்னும் பல விளைவுகளினால் தான் இடுப்பில் நோவு ஏற்படுகிறது.

இரண்டாது வகை நாட்பட்ட (*Chronic Back Pain*) இடுப்பு நோவுக்கு பொதுவான காரணங்கள் எவை என்பதை பின்வருமாறு பட்டியல் போட்டு விளக்கினால், காரணத்தை அறிந்து அவற்றை முன்கூட்டியே தவிர்த்து இடுப்பு வலியிலிருந்து தப்பித்து நீங்களும் நலமுடன் வாழலாமே!

1. புள்ளிவிபரப்படி பெண்களுக்குத் தான் அதிகம் இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

2. விபத்துக்கள், கீழே விழுதல், ஊமைக்காயங்கள் அல்லது இடுப்பிலுண்டாகும் உள்காயங்கள் போன்றவை முன்னெப்போவாது ஏற்பட்டிருந்தாலும் அதன் விளைவுகள் பல நாட்களுக்குப் பின்பு இடுப்பு வலிக்கு காரணமாக அமையலாம்.

3. அதிகமான உடற்பருமன் (குண்டான உடல்) சிலருக்கு பெரிய வயிறு இருப்பதும் இடுப்பு வலியினை உண்டாக்கலாம்.

4. அறுவைச் சிகிச்சைகள் மற்றும் அறுவைச் சிகிச்சைக்கு முன்பு விறைப்பை உண்டாக்குவதற்காக இடுப்பு முள்ளந்தண்டு வழியாக போடப்படும் ஊசிகளின் தாக்கத்தினாலும் பிற்காலத்தில் இடுப்பு நோவுகள் வரலாம்.

5. சிலவகை இடுப்பு வலிகள் பரம்பரை பரம்பரையாகக் கூட வர வாய்ப்புண்டு.

6. உடற்பயிற்சிகள் அல்லது வேலைகள் ஏதும் செய்யாமல் இடுப்பு எலும்பிலும் அதைச் சுற்றியுள்ள தசைகளிலும் இயக்கம் இல்லாத காரணத்தினால் தசைகள் சுருங்கி இறுகிப்போய் வலியினை உண்டாக்கலாம்.

7. பெரிய பாரங்களை தூக்குவதாலும், இடுப்புப்பகுதியில் இடுப்புப் பகுதிக்கு திடீரென, தொடர்ச்சியான அதிக வேலைப்பழுவை சுமத்துவதாலும் வலிகள் வரவாய்ப்புகள் உள்ளது.

8. முள்ளந்தண்டெலும்பு உள்பகுதி குழாயில் உண்டாகும் சுருக்கம்.

9. முள்ளெலும்பகளுக்கிடையேயான கசியிழைய தட்டுக்களின் விரிசல், விலகல் மற்றும் வீக்கம்.

10. தண்டுவட மற்றும் இடுப்பு வளைய எலும்புகளிலுண்டாகும் வெடிப்பு அல்லது நாட்பட்ட எலும்பு முறிவுகளும் அதன் விளைவுகளும்.

11. இடுப்பு எலும்புகளிலுண்டாகும் ''ஒஸ்ரியோ ஆர்த்தரைட்டிஸ்'' என்ற மூட்டு தேய்மான வருத்தம்.



12. ''ஒஸ்ரியோபோறோசிஸ்'' என்கிற எலும்பு இளுகுதல் நோய். இது பெரும்பாலும் முதியவர்களுக்கும் மாதவிலக்கு நின்ற பெண்களுக்கும், கருப்பை மற்றும் சினைப்பை போன்றவற்றை அறுவகைச் சிகிச்சை மூலம் அகற்றியவர்களுக்கும், ஹோமோன்களில் குறைபாடு உள்ளவர்களுக்கும், தைரொயிட் சுரப்பிகள் தொடர்பான பிரச்சினை உள்ளவர்களுக்கும், பல்வேறு காரணங்களுக்காக ஸ்ரீறோயிட் வகை மருந்துகளை தொடர்ச்சியாக எடுப்பவர்களுக்கும் இடுப்பு நோவு வரலாம்.

13. எலும்புகளுக்கு தேவையான நுண் ஊட்டச்சத்துக்களின் குறைபாட்டினாலும் இந்த வருத்தம் உருவாகலாம்.

14. கனடா போன்ற குளிர் பிரதேசங்களில் வாழ்பவர்கள், குளிர்காலத்தில் அதற்குரிய முறையில் விசேட ஆடைகளை அணியாமல் விடுவதால் குளிரின் தாக்கம் தசை மற்றும் தசைநார்களை இறுகச் செய்வதால் இந்த இறுக்கம் காரணமாக தசைகளுக்கிடையான நரம்புகள், அழுத்தப்படுவதாலும், எலும்புகள் நசுக்கப்படுவதால் அவற்றிடையேயுள்ள இடைவெளிகள் குறைவதாலும் இடுப்பு நோவு உண்டாகலாம்.

15. பெண்களுக்கு மாதவிடாயின் போது கருப்பை சுருங்கி விரிவதால் தற்காலிக இடுப்பு வலி தோன்றலாம்.

16. பெண்கள் குதி உயரமான செருப்புகள் (*Heels Shoes*) அணிவதால், முகுது மற்றும் இடுப்பு எலும்புகளிலுள்ள இயற்கையான விளைவுகளில் மாற்றங்கள் (*Postural Changes*) உண்டாகி இடுப்பு வலி வர வாய்ப்புள்ளது.

17. கருப்பைக்குள்ளாக பயன்படுத்தப்படும் கருத்தடை சாதனங்களை *Intra Uterine Contraceptive Devices (loops)* தொடர்ந்து பயன்படுத்துவதாலும் வலிகள் உண்டாகலாம்.

18. கம்பியூட்டர்களில் ஓய்வின்றி ஒரே நிலையில் இருந்தபடி பணிசெய்பவர்கள், அலுவலகங்களில் குனிந்தபடி எழுத்துப் பணிகளில் ஈடுபடுவோர், அழகுக்காக குஷன் கதிரைகள் மற்றும் சுழல் கதிரைகளை பயன்படுத்தி அதில் நீண்டநேரம் இருப்பதாலும் வலிகள் வரலாம்.

19. படுக்கைக்கு அல்லது மிக அருகில் குளிரூட்டி சாதனங்களைப் பொருத்தி வைத்து அதிலிருந்து வரும் தொடர்ச்சியான குளிர்காற்று முதுகிலும், இடுப்பிலும் படுவதாலும் வலிகள் வரலாம்.

20. மன அழுத்தம், மன இறுக்கம், அதிக உணர்ச்சிவசப் படுதல், அடிக்கடி கோபப்படுதல், பயப்படுதல், எரிச்சலுடன் இருத்தல், பகிர்தலின்றி மனதுக்குள்ளேயே எல்லாவற்றையும் அடக்கி அமுக்கி வைத்தல் போன்ற உளவியல் காரணங்களும் வலிகளுக்கு காரணமாக உள்ளதாக ஆய்வுகளில் நிரூபிக்கப் பட்டுள்ளது. எலும்புகளிலுண்டாகும் மூட்டுவாத நோய்கள் அழற்சிகள் (*Inflammation*) தொற்றுகள் (*Infections*) கட்டிகள் போன்றவற்றாலும் இடுப்புவலிகள் உண்டாகும்.

22. வயிற்றுப் பகுதிக்குள் எந்த உறுப்பிலும் உருவாகியுள்ள கட்டிகள், வீக்கங்கள் மற்றும் பாதிப்புகளும் இடுப்புவலிக்கு காரணமாக அமையலாம்.

23. சிறுநீரக கல், சிறுநீர்ப்பை மற்றும் சிறுநீர் குழாய் ஆகியவற்றிலுள்ள கற்களுக்கும் இடுப்பு வலிக்கு காரணமாகலாம்.

24. கருப்பை, சினை ப்பை, பலோப்பியன் குழாய், சிறுநீர்த் தொகுதி, புரோட்ரேட் சுரப்பி, பெருங்குடல் போன்ற உறுப்புகளி லுள்ள பிரச்சினைகளும் இடுப்பு வலியாக வெளிப்படலாம்.

25. எந்தக் காரணமும் இல்லாமல், இன்னமும் காரணங்கள் கண்டுபிடிக்க முடியாத இடுப்புவலிகளும் உண்டு என்றால் ஆச்சரியப்படாதீங்கள்! ஆனால உண்மை. ஆம் அருமையான வாசகர்களே! இன்னும் ஏராளமான காரணங்களை இப்படி வரிசைப்படுத்திக் கொண்டே போகலாம். இவ்வளவு காரணிகள் இருக்கும்போது வெறும் வலிநிவாரண மருந்துகள் மட்டுமே பலன் தராது ஆகவே ஒவ்வொரு நோயாளியையும் மிக அவதானமாக ஆய்வு செய்து நோயின் தன்மை, வரலாறு, காரணங்கள், வலியின் தன்மை, அதன் பரிமாணங்கள், கால அளவு, வலியினைக் கூட்டிக் குறைக்கும் மற்றய காரணிகள், உடல்வாகு, மனோநிலை, வலி தொடங்கி பரவும் விதம், நோயாளியின் உடல்மொழி போன்றவற்றை மிகவும் ஆழமாக ஆய்வு செய்யும் இந்த நூற்றாண்டின் புதிய மருத்துவமான ஹோமியோபதி மருத்துவத்தின் மூலமும் அக்குப்பங்சர் வைத்தியத்தினாலும், மற்றும் தெரவி சிகிச்சையாலும், சிறப்பான யோகா மற்றும் தியானம் மூலமும், சில உணவு மற்றும் உடற்பயிற்சிகளைக் கற்றுக் கொண்டு கடைப்பிடித்து வருவதாலும் பெரும்பாலான இடுப்பு நோவிலிருந்து நிவாரணம் பெற்று நலமுடன் வாழ்க வென்று வாழ்த்துகிறேன். இது தொடர்பான எல்லாவிதமான மேலும் விபரங்களுக்கு எப்போதும் தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம்.




டாக்டர். போல் யோசேப்
B.H.M.S. (India),
H.D.(Canada). R.A.P.
(Bachelor of Homeopathic Medicine and Surgery) 1193A Brimley Road, Unit 10, Scarborough, Ontario M1P 3G5
Tel: 4164383939
Cell: 4169864903

****

DAILY NEWS

2012



YEAH, IT DOES THAT

ALL-NEW 2012 CR-V



"Happy Thai Pongal Vaalthu"



Raja Tharmalingam
- Dir: 647 833 4998

New standard features on all models include: One of the most fuel-efficient vehicles in its class† • Heated power side mirrors • Heated front seats • Multi-angle rearview camera‡ • Intelligent Multi-Information Display (i-MID) with SMS featureΔ • Bluetooth® wireless phone and audio interface • Easy-fold-down 60/40 split rear seatback

TOP SAFETY PICK 2012

LOWER STARTING PRICE FOR 2012

2012 CR-V LX



LEASE A 2012 CR-V LX FOR

$298 @ 3.99% APR

PER MONTH FOR 48 MONTHS*

$0 SECURITY DEPOSIT | $3,400 DOWN PAYMENT/OAC



TOTALLY REDESIGNED FOR 2012

HondaOntario.com
Ontario Honda Dealers



2012 CR-V Touring shown with optional equipment


MADE IN CANADA

HONDA

*Limited time lease offers on a new 2012 Honda CR-V LX 2WD (Model RM3H3CE[S]) available through Honda Financial Services Inc., on approved credit. Representative lease example: based on a 2012 Honda CR-V LX 2WD (Model RM3H3CE[S]) on a 48 month term at 3.99% lease APR, the monthly payment is $297.76 [includes $1,590 freight and PDI, EHF tires ($29), EHF filters ($1), A/C tax ($100), and OMVIC fee ($5)] with $3,400 down payment or equivalent trade-in, $0 security deposit and first monthly payment due at lease inception. Total lease obligation is $14,292.48. 96,000-kilometre allowance: charge of $0.12/km for excess kilometres. For all offers: license, insurance, PPSA, and other taxes (including HST and tax for fuel conservation, if applicable) are extra. Taxes payable on full amount of purchase price. Offers only valid for Ontario residents at Ontario Honda Dealers. Dealer may sell/lease for less. Dealer order/trade may be necessary. Vehicles and accessories are for illustration purposes only. Offers subject to change without notice. See your Ontario Honda Dealer or visit HondaOntario.com for full details. †9.2 city/6.6 hwy/8.1 combined L/100 KM. Fuel consumption for comparison purposes only and may vary with usage and accessories. See Dealer for latest EnerGuide results published by Natural Resources Canada (when available). ‡Multi-Angle Rearview Camera with Guidelines intended to provide assistance to the driver. Always exercise appropriate care while reversing. ΔCompatible with select smartphones. Your wireless carrier's rate plans apply. Only use texting feature when conditions allow you to do so safely.

SCAN HERE FOR MORE INFORMATION


‘பர்வேஸ் முஷாரப்பைக் கொன்றால் 10 கோடியே 10 லட்ச ரூபாய் பரிசு’



இம்மாத இறுதியில், பாகிஸ்தானுக்கு அதன் முன்னாள் அதிபர், பர்வேஸ் முஷாரப் வரப்போவதாக அறிவித்துள்ள நிலையில், அவரது தலைக்கு, 10 கோடியே 10 லட்ச ரூபாய் பரிசு அறிவித்துள்ளார், பலுசிஸ்தான் தலைவர் அக்பர் புக்தி. பாகிஸ்தானில் சுயாட்சி அல்லது பிரிவினை கோரி நீண்ட காலமாக, பலுசிஸ்தான் போராட்டம் நடத்தி வருகிறது. அம்மாகாண முதல்வரும், பாகிஸ்தானின் முன்னாள் உள்துறை இணை அமைச்சருமான, நவாப் அக்பர் கான் புக்தி, இந்தப் போராட்டத்திற்கு தலைமை வகித்தார்.

கடந்த 2006ல், அப்போதைய அதிபர் முஷாரப்பின் உத்தரவின்படி, மேற்கொள்ளப்பட்ட ராணுவ நடவடிக்கையில், பலுசிஸ்தானின் கொலு மாவட்டத்தில், இவரும் வேறு சிலரும் கொல்லப்பட்டனர். இதற்கிடையில், இம்மாதம், 27 முதல் 30ம் தேதிக்குள், பாகிஸ்தான் திரும்பப் போவதாக முன்னாள் அதிபர், முஷாரப் அறிவித்துள்ளார். இதுகுறித்து, புக்தியின் பேரன் ஷாஜெய்ன் புக்தி நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில், ‘முஷாரப்பை கொலை செய்யும் நபருக்கு, 10 லட்ச ரூபாய் ரொக்கப் பணமும், 10 கோடி ரூபாய் மதிப்புடைய பங்களாவும் பரிசாக அளிக்கப்படும். மேலும், அந்த நபருக்கு முழு பாதுகாப்பும் வழங்கப்படும்’ என அறிவித்தார்.


மேலும் அவர், ‘எனது தாத்தா மட்டுமல்லாமல், லால் மசூதியில் இருந்த நூற்றுக்கணக்கான அப்பாவிகளையும், முஷாரப் கொன்று குவித்துள்ளார். நாடு திரும்பும் போது, அவர் அரசால் கைது செய்யப்படாவிடில், மோசமான விளைவுகள் ஏற்படும்’ எனவும் எச்சரித்தார். முஷாரப் நாடு திரும்பும் பட்சத்தில், பாக்., முன்னாள் பிரதமர் பெனசிர் புட்டோ கொலை வழக்கு தொடர்பாக, கைது செய்யப்படுவார் என, உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.



அபுதாபியில் நடந்த உலக எதிர்கால உச்சி மாநாட்டில், ஐ.நா., வெளியுறவுச் செயலர் பான்கீ மூன் கலந்து கொண்டு துவக்க உரையாற்றினார்.

செவ்வாய் கிரகத்துக்கு அனுப்பப்பட்ட ரஷிய விண்கலம் கடலில் விழுந்தது

செவ்வாய் கிரகத்தில் ஆய்வு நடத்த ரஷியா புரோபொஸ் - கிரண்டு என்ற விண்கலத்தை கடந்த நவம்பர் மாதம் விண்ணில் செலுத்தியது. இந்த விண்கலம் தற்போது செயல் இழந்து விட்டது. எனவே தொடர்ந்து விண்ணில் இருந்து அது கீழே விழ தொடங்கியது.



மணிக்கு நூற்றுக்கணக்கான மீட்டர் வேகத்தில் பூமியை நெருங்கிய இந்த விண்கலம் எப்போது வேண்டுமானாலும் காற்று மண்டத்தில் நுழைந்து தீப்பற்றி எரிந்து வெடித்து சிதறலாம் என நிபுணர்கள் தெரிவித்து இருந்தனர். அதன்படி 200 கிலோ எடையுள்ள இந்த விண்கலம் 2030 துண்டுகளாக வெடித்து சிதறி பூமியின் மேற்பரப்பை வந்தடைந்தது.

அது பூமியில் எப்பகுதியில் விழும் என தெரியாத நிலை இருந்தது. இந்த நிலையில், புரோ பொஸ்-கிரண்டு விண்கலத்தின் உடைந்த சிதறல்கள் சிலியில் உள்ள பசிபிக் கடலில் நேற்று முன்தினம் விழுந்தது. இந்த தகவலை ரஷிய ராணுவம் அறிவித்துள்ளது.

700 ஆண்டாக பின்பற்றப்படும் ‘ஹால்மார்க்’ முத்திரை

தங்க விலை ஏறு முகமாக இருந்தாலும், தங்கம் வாங்குவோர் எண்ணிக்கை குறையவில்லை. விற்பனையாகும் தங்க ஆபரணங்களின் தரத்தை உறுதி செய்ய, பதிப்பிக்கப்படும் ‘ஹால்மார்க்’ முத்திரை, 700 ஆண்டுகளுக்கு முன்பே பின்பற்றப்பட்டது ஆச்சர்யமான தகவலாக உள்ளது.

‘ஹால்மார்க்’ தர கூட்டமைப்பு நாடுகளில் ஆஸ்திரேலியா, டென்மார்க், அயர்லாந்து, நார்வே, ஸ்வீடன், செக் குடியரசு, பின்லாந்து, நெதர்லாந்து, போர்ச்சுகல், ஸ்விட்சர்லாந்து ஆகிய நாடுகள் இடம் பெற்றுள்ளன. இந்தியாவில், ‘ஹால்மார்க்’ முத்திரை, 2000ல் அறிமுகமானது. ஐரோப்பாவில் முற்காலத்தில் தங்கம், வெள்ளி நகைகளின் தரம் மற்றும் விலையை நிர்ணயிக்க தனிக்குழு இயங்கியது. உறுப்பினர்களிடம் தங்கத்தை அளித்து, ஒரே தரத்தில் நகைகள் மற்றும் பொருட்கள் செய்தனர். நகைகளின் தரம் ஒரே மாதிரியாக இருந்தது.

சில பொற்கொல்லர்கள் குழுவில் உறுப்பினராக இருந்து போலி நகைகள் செய்து விற்பனை செய்தனர். 1238ல் இவ்விஷயம் வெளியே தெரியவர குழுவில் இருந்து அனைவரும் நீக்கப்பட்டனர். 1300ல், எட்வர்ட் மன்னரால் முதன் முறையாக முத்திரையிடப்பட்ட பொருட்கள் அறிமுகப்படுத்தப்பட்டு, தனி சட்டமும் இயற்றப்பட்டது.

நகைகள், பாத்திரங்கள் மீது சிறுத்தையின் உருவம் பொறிக்கப்பட்டது. இது அப்பொருளின் தரத்தை உறுதிப்படுத்துவதாக அமைந்திருந்தது. எட்வர்ட் மன்னரின் இந்த சட்டம் தரத்தை அறியும் நிபுணர்குழுவுக்கு முழு சுதந்திரம்



அளித்து, 19 காரட் நகைகளையும், கலப்பட மில்லாத வெள்ளி பொருட்களையும் மதிப்பிட உதவியாக இருந்தது.

கி.பி., 1327ல் எட்வர்ட் மன்னரால், லண்டனில் உள்ள நகைகளுக்கு சட்டபூர்வமான அங்கீகாரம் அளித்து, பரவலாக நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது.

அதன் பின்னரே ஒவ்வொரு நகை தயாரிப்பாளரும் தங்களின் ஒவ்வொரு தயாரிப்பிலும் முத்திரையிடும் அதிகாரம் பெற்றனர். நாகரிகம் வளர வளர தரமுத்திரைகளிலும் மாற்றங்கள் வந்தன.

1696ல், இங்கிலாந்தில் மூன்றாம் வில்லியம் மன்னர் காலத்தில் கிடைத்த பொருட்களில் இன்ஷியல்களும், மகுடம், ஒவ்வொரு நகை தயாரிப்பாளுக்குமான தனி குறியீடுகளை கொண்டிருந்தன.

கி.பி., 1773ல் புதிய சட்டமியற்றப்பட்டு இங்கிலாந்தில் உள்ள பர்மிங்ஹாம், ஷபீல்டு, எடின்பர்க், செஸ்டர், க்ளாஸ்கோ நகரங்களில் தங்கத்துக்காக ஹால்மார்க் தரக்கூடங்கள் நிறுவப்பட்டன.

‘ஹால்மார்க்’ சட்டதிட்டங்களில் 1854-ல் முக்கிய மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. 18, 22 காரட் தரத்துடன், புதிதாக 15, 12 காரட் தங்க மதிப்பில் சேர்க்கப்பட்டன. காலப்போக்கில் 15, 12 காரட் நகைகள் மதிப்பிழந்தன. 1999ல், 24 காரட் நகைகள் அறிமுகமாயின. பல நூற்றாண்டுகளாக பின்பற் றப்படும், ‘ஹால்மார்க்’ தர முத் திரைக்கான கூடம், இப்போதும் லண்டனில் உள்ள பர்மிங்ஹாம் அரண்மனையில் இயங்குகிறது.

சுரங்க விபத்தில் சீனாவில் 7 பேர் பலி



சீனாவின் வடக்கு பகுதியில் நடந்த சுரங்க விபத்தில் 7 பேர் பலியானார்கள். இந்த விபத்து டங் பகுதியில் நடந்தது.

இந்த வெடி விபத்து எதிர்பாராதவிதமாக நடந்தது. ஒருவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

சர்கோசியின் அவசர பொருளாதாரச் சீர்திருத்தங்கள் அறிமுகம்



பிரான்சின் பொருளாதாரத் தகுதி AAA என்பதிலிருந்து AA+ ஆகக் குறைந்ததால் ஜனாதிபதி சர்கோசி பொருளாதாரத்தைச் சீரமைக்க அவசர நடவடிக்கைகளில் ஈடு பட்டு வருகிறார்.

இந்த மாதம் முடிவதற்குள் பிரான்சின் பொருளாதாரத்தை AAAக்குக் கொண்டு வந்தால் மட்டுமே அடுத்த ஜனாதிபதி தேர்தலில் அவருக்கு வெற்றி வாய்ப்பு உறுதியாகும். இந்நிலையில் அவர் சில கடுமையான நடவடிக்கைகளை எடுக்க முனைந்துள்ளார். முன்னாள் பிரதமர் மைக்கெல் டெப்ரேயின் நினைவு நாள் நிகழ்ச்சி அம்போய்ஸில் நடைபெற்ற போது சர்கோசி அங்கு உரை நிகழ்த்தி னார். அப்போது நாட்டின் பொருளாதார நிலையை எடுத்துரைத்தார். இது ஒரு பரி சோதனை, இதனை நாம் எதிர்க்க வேண் டும் என்றார். இந்நிலையில் நாம் துணிச் சலையும் அமைதியையும் காட்ட வேண் டும் என்றார்.

ஜனாதிபதி தேர்தலுக்கான கருத்துப் பணியில் இவருக்கு எதிரான சோசலிசக் கட்சி வேட்பாளரான ஃபிராங்கோய்ஸ் ஹோலாண்டேக்கு இப்போது ஆதரவு பெருகியுள்ளது. சர்கோசிக்கு சர்வதேச அரங்கிலும் ஆதரவு குறைந்துள்ளது.

பொதுக்கடன் பெருக்கம், வளர்ச்சிக் குறைவு, பொருளாதார வீழ்ச்சியின் அச்சுறுத்தல் ஆகியவற்றால் இறங்குமுகத்தில் இருக்கும் பொருளாதாரத் தகுதியைச் சரி செய்ய, வரும் நான்கு மாதங்களில் இரண்டு கடுமையான திட்டங்களை அரசு அறிமுகம் செய்கிறது. ஆனால் பிரிட்டனின் ஆட்குறைப்பு மற்றும் வரிவிதிப்பை விட இந்த இரண்டு திட்டங்களும் கடுமை குறைந்ததாகவே இருக்கும்.

பிரான்சின் பிரதமரான ஃபிராங்கோய்ஸ் ஃபில்லோன், இதில் புதிய கடுமையான திட்டங்கள் எதுவும் இல்லை. சிறிய அளவிலான சரிக்கட்டுதல்கள் தான் என்றார். சர்கோசியின் பதவிக்காலத்தின் இந்தக் கடைசிச் சில மாதங்களில் பொருளாதாரத் தகுதியை மீண்டும் பழைய நிலைக்கு உயர்த்தி, மக்களின் ஆதரவையும், நம்பிக்கையையும் பெறும் முயற்சிகளில் ஈடுபடுவார்.

தன் பிரச்சாரத்தின்போது ஹோலாண்டே இந்தப் பொருளாதாரத் தகுதிக்கணிப்பால் பிரான்சின் தாம் குறைந்து போய் விடவில்லை, மாறாக சர்கோசி சார்ந்துள்ள வலதுசாரிக் கொள்கையின் நம்பகத்தன்மை, அவரது அரசியல், கொள்கை, குழு, அரசு மற்றும் அவரது ஜனாதிபதி பதவி என அனைத்தும் தரம் குறைந்து போய்விட்டன என்றார்.

அமெரிக்காவின் ஜே.பி. மோர்கன் நிறுவனத்தில் தலைமைச் செயலரான ஜேமீ டிமோன், ஒரு ஜேர்மனியச் செய்தித் தாளுக்கு அளித்த பேட்டியில் ஐரோப்பா தான் உலகப்பொருளாதாரத்துக்கான மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருக்கிறது என்றார். மேலும் இந்நிலை தொடரும் என்றும் குறிப்பிட்டார்.

ஐரோப்பா தனது நெருக்காடியிலிருந்து மீள்வதற்கான வாய்ப்புகள் 90 சதவீதம் இருப்பதாக முன்பு கூறிய மோர்கன் இப்போது 60 சதவீதம் தான் இருப்பதாகக் கூறியிருக்கிறார். உடனடியாக இந்தப் பிரச்னைக்கு ஒரு தீர்வு காண வேண்டும், இல்லையென்றால் இந்தப் பிரச்னை நீடிப்பதால், சந்தையின் பாதிப்பு அதிகரித்துக் கொண்டே போகும் என்று எச்சரிக்கை விடுத்தார்.

இந்தப் பிரச்னைக்கான தீர்வாக இவர் கூறும் ஆலோசனை, யுரோ மண்டலத்திலிருந்து கிரீஸை உடனடியாக வெளியேற்றுவது தான். இந்த முடிவு நல்லதாகத் தோன்றவில்லை எனினும் இதுவே பிரச்னையை சமாளிக்க நமக்கு உதவும், என்கிறார்.

உலகச் செய்திகள்

இன்பமும், துன்பமும் விதியல்ல; நீயே தானாகத் தேடிக் கொண்டவை. - மான்டெயின்

கதிர் ஒளி எழுத்தாளர்கள் களம்

இளைஞர் வன்முறை

இன்றைய இளைஞர் உலகில் உளவியலாளர்களைப் பெரிதும் ஈர்த்துள்ள விடயம் அன்றாடம் நிகழும் வன்முறைகள் அல்லது வன்செயல்களாகும். முன்னர் எப்போதும் இல்லாதவாறு இளைஞர்களின் மனோநிலையைப் பாதித்துள்ள இத்தாக்கமானது பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளிப்பட்டுள்ளது. பெற்றோரைக் கொலை செய்வது முதல் வகுப்பறை நண்பர்கள், ஆசிரியர்கள், உணவுச் சாலை உரிமையாளர்கள், கொலை செய்யப்படுதல் வரை சர்வசாதாரண நிகழ்வாகிவிட்டுள்ளது. அண்மையில் ஐக்கிய அமெரிக்காவில் 11 வயது மாணவன் தன் பெற்றோரைக் கொலைசெய்துவிட்டு பாடசாலை நண்பர்களைத் தாக்கியுள்ளான். ஆசிரியரையும் கொலை செய்துள்ளான். வேறும் பல நாடுகளிலும் இவ்வாறான சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. சமூகவியல் ரீதியாக இன்று உலகம் முழுவதும் இச்சம்பவங்கள் ஏற்படும் பின்னணி பற்றி ஆராயப்படுகின்றது. ஐக்கிய அமெரிக்காவில் மட்டும் வருடமொன்றிற்கு 25,000 கொலைச் சம்பவங்கள் இடம் பெறுகின்றதென்றால் மிகுதியான எல்லா நாடுகளையும் கணக்கிலெடுப்பின் வருடமொன்றிற்கு மரணமாவோர் தொகை எவ்வளவு என்று புரிந்து கொள்ளலாம்.

1950 முதல் இன்று வரை இளைஞர்களிடையே நடைபெறும் வன்முறைகள் இருமடங்காகியுள்ளது எனக் கணிக்கப்பட்டுள்ளது. 1986 இல் *Kalmuss and Seltzer*, 1988ல் *Decker*, 1994இல் *Sacco and Kennedy*, 1996இல் *Ellis and Decker Seredy* போன்ற பல உளவியல் அறிஞர்கள் இளைஞர்களிடையே வன்செயல்கள் தோன்றுவதற்குரிய ஆய்வுகளில் ஈடுபட்ட சிலராவர். பல்வேறு சுகாதார குற்றவியல் அறிக்கைகளும் வன்செயல்கள் பற்றி மதிப்பீடு செய்துள்ளன. பொதுவாகக் குடும்பமே வன்செயல்களின் தொட்டில் *(Home as The Cradle of Violence)* என்ற கருத்து அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இன்று கனடிய சமூகத்தில் பல இனக் குழுக்களிடையே இவ்வாறான வன்முறைச் சம்பவங்கள், கோஷ்டி மோதல்கள் ஏற்பட்டு வருகின்றன. வீதிக் குழுக்கள் உருவாகி *(Street Gangs)* வருவதனையும் அவதானிக்க முடிகிறது. இவர்கள் ஆயுதபாணிகளாக உலாவி வருவதும் வாகனத் திருட்டு, கொள்ளைச்சம்பவங்களில் ஈடுபடுவதும் அன்றாட நிகழ்வுகள், பண்பாட்டு விழுமியங்களில் உயர்ந்தவர் கள் என்று பெருமை கூறும் எம்மவர் மத்தியில் அண்மையில் இவ்வாறான கோஷ்டி மோதல்கள் நிகழ்கின்றன. இதற் குப் புலம் பெயர்ந்தவர்கள் மத்தியில் உள்ள பல்வேறு சமூக உளவியல் சம்ப வங்களே காரணங்களாகும். இதுபற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.

இன்றுள்ள எமது பாடசாலைகளில் தினசரி காவல் துறையினர் வந்து செல்லக் கூடிய அளவுக்கு வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. வீடுகளில் நிகழ்த்தப் படும் வன்முறைகளின் தொடர்ச்சி பாடசாலைகளிலும் தொடர்கின்றன. பொது வாக இளைஞர்கள் பாடசாலைகளில் ஒன்றுசேர்ந்து வன்செயல்களில் ஈடுபடு கின்றனர். சில மாணவர்கள் ஆயுதங்களை வகுப்பறைக்குக் கொண்டு செல்கின்றனர். துப்பாக்கிகள் கூட வைத்திருக்கின்றனர் என்று அறிக்கைகள் கூறுகின்றன.

பாடசாலைகளில் நிகழும் வன்முறைகளுக்கு குடும்ப வளர்ப்பு முறைகளே காரணம் என்று கருதப்படுகின்றது. பரம்பரையாகக் குடும்ப வன்முறைகள் நிலவியுள்ளன. ஒழுக்கமற்ற குடும்பங்கள், ஒழுங்கீனமுள்ள குடும்பங்கள், பிரிந்துள்ள குடும்பங்கள் மூலமாகப் பல வன்முறைகள் நிகழ்கின்றன. மனைவி அல்லது கணவன் தாக்கப்படல், பிள்ளைகள் தாக்கப்படுதல் காரணமாகத் தொடர்ந்தும் சமூக வன்முறைகள் நிகழ்த்தப்படுகின்றன. வன்முறையாகக் கடிந்து வளர்க்கப்படும் பிள்ளைகள் பெரியவர்களாக வளர்ந்தபின் வன்முறையாளர்களாக உருவாகின்றனர். எனவேதான் இன்று பல மாணவர்கள் உடைந்த குடும்பங்களின் உற்பத்தியாக மாறியுள்ளனர்.

பாடசாலைகளுக்கு வெளியே தற்போது வீதிகளில் குழுக்கள் *(Street Gangs)* உருவாகி வருவதும் அவதானிக்கப்பட்டுள்ளது. இன்று சர்வதேச ரீதியில் எழுந்துள்ள இப்பிரச்சினை மனித இனத்தினை அச்சத்திற்குள்ளாக்கியது. ஐக்கிய அமெரிக்காவில் உள்ள லொஸ்ஏஞ்சல்ஸ் நகரத்தில் பல வீதிக் குழுக்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

Bloods and Grips என்ற பெயர் கொண்ட இக்குழுக்கள் பெயரில், உலகின் பல பகுதிகளிலும் குழுக்கள் உருவாகி வருகின்றன. இங்கிலாந்தில் *Teddy Boys* என்ற பெயரில் 1950 முதல் குழுக்கள் இயங்குகின்றன. வாள், கத்தி, சைக்கிள்செயின் போன்ற பல ஆயுதங்களை இவர்கள் பாவித்துள்ளனர். உணவு விடுதிகளில் தாக்குதல் செய்யப்படுகின்றனர்; பலர் அடித்து கொள்ளையிடப்படுகின்றார்கள். கொலையும் செய்யப்படுகின்றார்கள்.

ஜேர்மனியில் *Skin Heads* என்ற பெயரில் இக்குழுக்கள் இயங்குகின்றன. இப்பெயரில் ஸ்பெயின் நாட்டிலும் வேறு பல நாடுகளிலும் இயங்குகின்றன. தென்னாப்பிரிக்காவில் குழு கலாச்சாரம் *(Gand Culture)* என்ற புதிய சூழ்நிலையை இக்குழுக்கள் தோற்றுவித்துள்ளன.

சில குழுக்கள் தமக்கென்று விசேட உடைகளை, குறியீட்டு எழுத்துக்களைக் கூட வைத்திருக்கின்றனர். பல்வேறு நாட்டுக் கலாச்சார உணர்வுகள், விரக்தியுணர்வு, அன்பு பரிமாற்றம், பொழுது போக்கு, தற்காப்பு போன்ற பல புரியாத உளவியல் காரணிகள் இவர்களை உருவாக்குகின்றன.

உளவியல் அறிஞர்கள் தொடர்ந்து ஆய்வு நிகழ்த்தியும் உரிய காரணிகளைக் கண்டறிய முடியாதுள்ளனர். அநேகமான குழுக்கள் பெற்றோரிடம் இல்லாத அன்பினை நண்பர்கள் வழங்குவதாக நம்புகின்றனர். போதைவஸ்து விற்பனை, வாகனத் திருட்டு, கொள்ளையடித்தல் சில வேளைகளில் கொலை செய்தல் இவர்களது அன்றாட நடவடிக்கைகளாகும். பொதுவாக விளைவுகள் பற்றி எதுவித கவலையும் இல்லாதவர்களால் இக்குழுக்கள் உருவாகின்றன.

இளைஞர்களிடையே உருவாகும் வன்முறைச் சம்பவங்கள் தனிப்பட்ட முறையிலன்றி குழுவாக நிகழ்த்தப்படுகின்றன. பாதுகாப்பாக பயமின்றி செய்ய முடியும் என்பதே காரணமாகும். சமமாக உள உணர்வுகள் உள்ள இளைஞர்கள் எவ்வாறோ ஒன்று சேர்ந்து விடுகின்றனர். அயல் கிராமங்களில் உள்ள இளைஞர்களின் உதவியுடன் சில குழுக்கள் இயங்குகின்றன. இணைக் குழுக்கள், பிரதேசக் குழுக்கள் கூட உருவாகி வருகின்றன. எம்மவர்கள் ஊர்ப்பற்றுடன் தொழிற்பட ஆரம்பிக்கின்றனர்.

பொதுவாக எமது கோஷ்டியினர் உருவாகுவதற்குப் பெற்றோர்களிடம் வாழ முடியாத தன்மை, கட்டுப்பாடின்மை, விரக்தி, பழிவாங்கும் உணர்வு போன்ற பல காரணிகள் உள்ளன. சில குழுவினர் தொலைக்காட்சி மூலம் வன்செயல் உணர்வுகளைப் பெற்றுக் கொள்கின்றனர். தனிப்பட்ட ஒன்றைப் பெற்றோர்களுடன் வாழும் இளைஞர்களே கூடுதலாக பண நெருக்கடியால் இதில் ஈடுபடுகின்றனர்.

புதிய வடிவமெடுத்துள்ள வீதிக் குழுக்கள் இரசாயனக் கலவை ஒன்றுடன் ஒன்று இணைவதுபோல இணைந்து கொள்கின்றனர். அவர்களுக்கிடையில் மட்டும் புரிந்துணர்வு ஏற்படும். வீதிகளில் உள்ள மூலை முடுக்குகளில் சந்தித்துத் திட்டம் போட்டுக் கொள்வர். மனத்திடம் உள்ள இவர்கள் ஆயுதம் வைத்திருப்பதால் தமக்குப் பாதுகாப்பு உள்ளதென்று நம்புவர். 11 வயது முதல் இவ்வாறான குழுக்களில் இணைந்து கொள்வது வியப்பினை ஊட்டுவதாகும். பஸ்தரிப்பு நிலையம், சப்வே ரயில் நிலையம், உணவு விடுதிகள், வர்த்தக நிலையங்களில் இவர்களின் வன்செயல்கள் நிகழ்கின்றன.

1993இல் கனடாவில் 3,34,290 வன்செயல் சம்பவங்கள் பதியப் பட்டுள்ளன. இதில் 2 சதவீதம் கொலை செய்யப்பட்டவர்களாவர். பொதுவாக 18-29 வயதினர்கள் வன்செயல்களில் ஈடுபட்டுள்ளனர். 48 சதவீதத்தினர் கொலையில் ஈடுபட்டுள்ளார்கள். 55 சதவீதத்தினர் திருமணமாகாதவர்கள். பொதுவாக 75 சதவீதம் கொலைகள் தெரிந்தவர்களையே செய்துள்ளனர். இதற்கு சமூகப் பொருளாதாரக் காரணிகள், வேலையின்மை, சூழ்நிலைகளே காரணங்களாகியுள்ளன. உயிராபத்து விளைவிக்கக் கூடிய ஆயுதங்களை வன்செயலாளர்கள் பாவித்து வருகின்றனர்.



1994 இல் 58 வீதம் குற்றங்கள் கைத்துப்பாக்கி மூலம் நிகழ்த்தப்பட்டுள்ளன. கத்தியால், 13 வீதம், மற்றும் ஆயுதங்களின் மூலம் 4 வீதம், கைகளினால் 5 வீதம். ஏனைய முறைகள் 8 வீதம் நிகழ்த்தப்பட்டுள்ளன. இந்த விபரங்களை கனடாவின் *Federal Bureau of investigation* வெளியிட்டுள்ளது.

பொதுவாக கனடிய சமூகத்தில் குற்றச் செயல்கள் இடம்பெறப் பல காரணிகளை இவ்வறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. எமது சமூகத்தினருக்கும் இது பொருந்தும். சட்டம் பற்றிய தெளிவு இன்மை, பெற்றோர்களின் அன்பினைப் பெறாமை, மனவிரக்தி, பழிவாங்கும் உணர்வு, சமூகமதிப்பு *(Glorified violence)* பெறும் எண்ணம் போன்ற பல காரணிகள் உள்ளன.

தொடர்ந்தும் வலுப்பெறும் காரணிகள் பற்றித் தீவிர ஆய்வுகள் மேற் கொள்ளப்படுகின்றன.

பொதுவாக வன்முறைச் சம்பவங்களைத் தடுப்பதற்குப் பல தீர்மானங்கள் சமூக ரீதியில் ஏற்படுத்தப்பட வேண்டும். பெற்றோர்களின் பங்களிப்பு முதலாவது சிபார்சாகக் கொள்ள முடியும். பிள்ளைகளுடன் அதிக நேரத்தினை பெற்றோர்கள் செலவிட வேண்டும். எந்த ஒரு விடயத்தினையும் பிள்ளைகளுடன் பகிர்ந்து செய்தல் வேண்டும். குறிப்பாக பிள்ளைகளின் நண்பர்களைப் பெற்றோர் தெரிந்துவைக்க வேண்டும்.

பிள்ளைகள் பயமின்றி பெற்றோருடன் பிரச்சனைகளை ஆராயக்கூடிய முறையில் பெற்றோர்கள் நடந்து கொள்ள வேண்டும். மற்றவர்களை மதிக்கப் பழக்குதல், ஆசிரியர் மீது நல்லெண்ணம் ஏற்படுதல் இன்றியமையாததாகும். வன்செயல்களைப் பெற்றோர்கள் தவிர்த்து, பிள்ளைகளை வளர்க்க முற்படுதல் வேண் டும்.

பாடசாலையின் பங்களிப்பு அடுத்துள்ள சிபார்சாகும். பாடசாலைகளில் ஒழுக்கக் கட்டுப்பாடு முக்கியமானதொன்றாகும். வெறும் அறிக்கைகளை மட்டும் வெளியிடாது நடைமுறையில் கல்வி அமைய வேண்டும். புகைப் பிடித்தல் முதல் ஆயுதங்களைப் பாவித்தல் வரை தடை செய்யப்படல் வேண்டும்.

துப்பாக்கிக் கட்டுப்பாடு *(Gun Control)* ஒரு முக்கிய தடைச்சட்டமாகியுள்ளது. வளர்ச்சியடைந்த அமெரிக்க கனடா நாடுகளில் பல வன்செயல்களுக்கும் துப்பாக்கிப் பாவனையே காரணமாகும். கொலை பற்றிப் பிள்ளைகள் கற்றுக் கொள்ளுகிறார்கள் என்று பல அறிக்கைகள் கூறுகின்றன.

Ruger எனப்படும் துப்பாக்கி *P85, P89* பிரிவுகளில் விற்பனையாகின்றன. இலகுவில் பல கொலைகளை நடத்துவதற்கு இது உதவுகின்றது. இந்த விற்பனை முற்றாக தடை செய்யப்படல் வேண்டும்.

சமூக நிறுவனங்கள் வன்செயல்களைத் தடுப்பதற்குப் பல ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும். ஆலோசனை வழங்குதல், வகுப்புக்களை நடத்துதல், ஆக்கபூர்வமான போட்டியினை நடத்துதல், அழகியல், விளையாட்டுத் துறைகளை மேம்படுத் துதல் நூல்நிலையப் பாவனையைத் தூண்டுதல், தொண்டர் சேவைகளை உருவாக்குதல் போன்றவற்றினை ஏற்படுத்த லாம். காவல்துறையினரும், சமூக நிறுவனங்களும் இணைந்து சில வேலைத் திட்டங்களைச் செய்யலாம்.

அரசாங்க மட்டத்தில் பாலிய நெறிப் பிறழ்வு *(Juvenile Delinquency)* பற்றி ஆய்வு நிகழ்த்தப் படுவது மட்டு மன்றி இளம் குற்ற வாளிகள் *(Yound Offenders)* பற்றிய ஆய்வும் மேற் கொள்ளப்பட வேண்டும். படிப்படியாகத் தண்டனைகளை அதிகரிக்க வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது.

இறுதியாக, இன்று உலகத்தினைப் பெரிதும் குழப்பத்தில் ஆழ்த்தியும், பெற்றோர்களைப் பெரிதும் பயத்தில் ஆழ்த்தியும், சமூகத்தினை வெறுப்பில் ஆழ்த்தியும் வருகின்ற வன்செயல்கள், கோஷ்டி மோதல்கள், வீதிக் குழுக்கள் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டியவையாக உள்ளன.

தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் இதற்கு வழிவகுக்க முடியும்.

என் உயிர் நீதானே...

தொடர்கதை

கனகரத்தினம் குழந்தைவேல்

சென்ற இதழ் தொடர்ச்சி

சந்துருவின் வாக்குவாதத்தில் ரன்ஜிதாவின் உள்ளம் சொல்லொனா வேதனையடைந்தது. மனப்போராட்டத்துடன் மாடிக்குப் போய் கட்டிலில் அமர்ந்திருந்து இதனையே ஆழ்ந்து யோசித்துக்



கொண்டிருக்கையில், இவளது மனசாட்சி பேசுகிறது. மனசாட்சி பேசியதையடுத்து சந்திரனை காணாது வாடியிருந்த அல்லி மலரைப் போன்று வாடியிருந்த இவளது இதயம் மனசாட்சி எதிரொலியின் மூலமாக மனத்தைரியத்தையும், சந்திரனைக் கண்ட அல்லி மலரினை போன்ற முக மலர்ச்சியையும் அடைந்தது.

திக்கற்றவளுக்கு தெய்வம் துணை என்பதைப் போன்று இறைவனின் சந்நிதானத்தில் கண்களிலிருந்து கண்ணீர் பொல பொல வென வடிந்தோட பக்திப் பரவசத்தால், நானும்...என்னை ஆருயிராக காதலிக்கும் ரதீசும் பெற்று வளர்த்து ஆளாக்கிய பெற்றோர்களையையும் கண்கலங்க வைக்காது, ஊரறிய உலகறிய பெற்றோரும் உற்றோரும் வேதியர்கள் ஒருமித்து வேதங்கள் பாடி திருமணக் கோலத்தில் மணவறையில் வலம் வருவோம் எனப் மனப்பால் குடித்துக் கொண்டிருந்தேன். ஆனால், அதற்கு கொடுத்து வைக்காத பாவியாகி விட்டேன்.

இருப்பினும் அன்பு மனம் கனிந்த பின்னே அச்சம் தேவையா என்கின்ற பாடல் வரிகளைப் போன்றும், உன்மீது மாசுபடாத நம்பிக்கையினால் நானும், ரதிசும் இணையும் காலம் வரப்போகிறது. எங்களின் வாழ்வு சீரும், சிறப்புமாக நடைபெற நீதான் ஆசீர்வதிக்க வேண்டும் என மனமுருகி மன்றாடுகின்றாள். தனது கைத்தொலைபேசி மூலம் ரதீசின் இலக்கத்திற்கு போன் செய்கிறாள்.

உடனே ரதீஸ் இவளுடன் உரையாடுகின்றான். இருவரும் வழமையாக சந்திக்கும் இடமான *Beach*ல் சந்திக்கின்றனர். பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமா என்பதைப் போன்ற ரதீசைக் கண்ட ரன்ஜிதா ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுத்தோட இறுகக் கட்டித் தழுவுகிறாள்.

ரன்ஜிதாவின் கண்களிலிருந்த பீரிட்டு பாயும் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியாமல் இவளின் துயரைக் கண்டு வேதனைப் பட்டு இவனை அறியாமல் கண்ணீர் மேலோங்கி நிற்கிறது. இருப்பினும் நானும் ஆறுதல் சொல்லாமல் சேர்ந்து அழுது கொண்டிருந்தால் அவளின் மென்மையான உள்ளத்தை மேன்மேலும் புண்படுத்துவதாக இருக்கும் என்பதை மனதில் நினைத்தபடி துயரங்களை துச்சமாக நினைத்துக்கொண்டு அவளுக்கு ஆறுதல் கூறுகின்றான்.

ரன்ஜிதா என்ன சின்னப்பிள்ளை மாதிரி என் உள்ளத்தில் குடிக்கொள்ளப் போகும் தேவதையாக போற, குடும்பத் தலைவியாக மாறப்போற. இதை அடைய எத்தனையோ சவால்களையும், தாங்கக் கூடிய மனப்பக்குவம் உன்னிடம் இருக்க வேண்டும். ஆதலால் எதனையும் யோசிக்காதே அன்று உன்னிடம் கூறிய உறுதி மொழியை மீண்டும் நினைவு படுத்துகிறேன். எந்த இன்பம், துன்பம், சவால் அத்தனையையும் சுமந்து வாழ்ந்தாலும், தாழ்ந்தாலும் மன உறுதியை விட்டுவிடக் கூடாது சொல் ரன்ஜிதா.. உன் கண்களிலிருந்து கண்ணீர் வந்ததை நான் ஒருபோதும் கண்டதில்லை. சொல் சீக்கிரமா சொல். என் இதயமே வெடித்துவிடும் போலிருக்கிறது.

எனக்கும், சந்துருவுக்கும் ஈச்ஞ்ஞீது திருமண விஷயத்தில் தீவிரமாக ஈடுபடப் போகின்றார். ஆதலால் நீங்கள் சொன்னதைப் போன்று நாமிருவரும் பதிவுத் திருமணம் செய்து கொண்டு எங்கேனும் கண்காணாத இடத்திற்கு போய் விடுவோம்.

இந்த முடிவு ஏற்கனவே எதிர்பார்த்தது தான். கூடிய விரையில் எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டு நாமிருவரும் போய்விடுவோம். ஆனால் ஒரு நிபந்தனை, உன் பெற்றோர்களின் எந்த உடமைகளையும் எடுத்துக்கொண்டு வரக் கூடாது. கட்டிய உடையுடன் வந்தால் போதும். கௌரவம், அந்தஸ்து இவைகளினால் தன்னையே சமுதாயத்தில் பிணைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு காதல் உணர்வுகளைப் பற்றி எப்படித் தெரிந்து கொள்ள முடியும். இவர்களின் கொள்கைகளை அடியோடு மாற்ற வேண்டும். காதலர்கள் அழிந்தாலும் காதல் அழிந்ததாக வரலாறுகளில்லை. ஆகையால் கூடிய விரைவில் வறட்டு கௌரவத்திலிருந்து விடுபட்டு எங்களை ஆதரிக்கப் போகின்றார்கள். வெற்றிபெறுவது நாங்களே...ஆதலால் எதைப்பற்றியும் கவலைப் படாதே என ரன்ஜிதாவிற்கு ஆறுதல் கூறுகிறான் ரதீஸ்.

தொடரும்

தமிழ்நாட்டின் ஜேம்ஸ்பொண்ட் ஜெய்சங்கர்



தமிழ்த் திரையுலகில் மூன்று என்ற எண்ணுக்கு மிக்க மதிப்பு உள்ளது. ஒவ்வொரு காலகட்டத்திலும், அக்கால கட்டத்தில் ரசிகர்கள் மத்தியில் புகழ் பெற்ற மூவர் மிக உயர்வாகப் போற்றப் படுவார்கள். தற்போது அஜித், விஜய், சூர்யா. இதற்கு முன்னைய காலத்தில் ரஜினி, கமல், விஜயகாந்த். அதற்கும் முன்னைய காலகட்டத்தில், எம்.ஜி.ஆர்., சிவாஜி, ஜெமினிகணேசன். ஆனால், இவர்கள் காலத்தில், இவர்களுடன் கூடச் சேர்ந்து இன்னொருவர் பெயரையும் தவிர்க்க முடியாது சேர்த்துக் கொள்ள வேண்டியிருந்தது. அவர்தான் நடிகர் ஜெய்சங்கர். அவர்களுடன் மட்டுமன்றி, அடுத்த தலைமுறை நட்சத்திரங்களான ரஜினி, கமல் போன்றோருடனும் களத்தில் இருந்தவர் இவர். மோகன், கார்த்திக் போன்றவர்கள் பல வெற்றிப்படங்களைத் தந்தும் இன்று திரையுலகத்தால் ஒதுக்கப்பட்டிருப்பது போல் அல்லாமல், இறுதிவரை, திரையுலகில் மின்னி மறைந்த நட்சத்திரம்தான் ஜெய்சங்கர்.

அட்டகாசமான வசீகர முகம், நல்ல உடற்கட்டு, சிறந்த நடிப்பு - இம்மூன்று அம்சங்களையும் ஒன்றாகக் கொண்டிருந்தமையால், தமிழ்த் திரையுலக ரசிகர்கள் மத்தியில் - முக்கியமாகப் பெண்களிடம் - இவருக்கும் வரவேற்பு சற்று அதிகமாகத்தான் இருந்தது.

ஜெய்சங்கர் பிறந்தது 1938ம் ஆண்டு, ஜூலை பன்னிரண்டாம் திகதி. ஜெய்சங்கரின் தந்தை ஒரு நீதிவான் நீதிமன்ற நீதிபதி. மைலாப்பூரே இவரது சொந்த இடம். இவரது இயற்பெயர் சங்கர் மட்டுமே. ஆயினும், இவரது திரையுலகப் பிரவேசத்தின்போது அதாவது, இவர் நடித்த முதல் திரைப்படமான இரவும் பகலும் படத்தின்போது, தமிழ்நாட்டுத் திரையுலகின் வழக்கத்தின் பிரகாரம், இவரது பெயருக்கு முன்னால் ஜெய் என்ற இரண்டெழுத்தும் சேர்ந்துகொண்டது. இந்த இரண்டெழுத்தைச் சேர்த்து இவரை வெற்றிநாயகனாக மாற்றக் காரணமாயிருந்தவர், இந்தியத் திரையுலகின் புகழ்பெற்ற இயக்குநர் ஜோசப் தளியத்.

ஜெய்சங்கர், நடிப்புக்காகக் கல்வியைத் தூக்கியெறிந்தவர் அல்லர். அவர் கல்விமுறையில் ஒரு பட்டதாரி. எனினும், தந்தை வழியில் சட்டத்தைப் பயில ஆரம்பித்தாராயினும், சந்தர்ப்பமும் சூழலும் அவருடைய விருப்பமும் அவரை சுமார் ஒரு வருடத்திலேயே சட்டக் கல்வியைக் கைவிட வைத்தன.

சென்னையையே பிறப்பிடமாகக் கொண்ட ஜெய்சங்கர், விவேகானந்தா கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போது கல்லூரி மாணவர் ஒன்றியத்தின் செயலாளராக இருந்தார். அப்போது கல்லூரியில் பல்வகையான கலை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து திறம்பட நடத்தினார். இதற்குக் காரணம், இயல்பாகவே அவருக்கு கலையின்பால் இருந்த காதலே. கலைநிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ததோடு இவரது கலைத் தாகம் தீர்ந்துவிடவில்லை. பின்னாளில், அவர் நடத்திய கலை நிகழ்ச்சிகளில் ஒரு அம்சமாக காதலுக்கு மருந்து என்ற நாடகத்தை மேடையேற்றினார். அவரும் முதன் முதலாக, நடிகராக மேடை ஏறினார். இது எழும்பூர் மியூசியம் தியேட்டரில் நடைபெற்றது. அப்பழுக்கற்ற இயல்பான நடிப்புத்திறன், இவரது சக மாணவர்களை மட்டுமன்றி, விரிவுரையாளர்களும் வியந்து போற்றும் நிலைக்குக் கொண்டு சென்றது.

இதன் தொடர்ச்சியாக நடிகர் சோ நடத்திவந்த விவேகா ஃபைன் ஆர்ட்ஸ் குழுவில் இணைந்தார். அந்தக் குழுவில் பெரும்பாலானவர்கள் மயிலாப்பூரைச் சேர்ந்தவர்களே. அந்தக் குழுவினர் மேடையேற்றிய நாடகங்களில் சிறு சிறு கதாபாத்திரங்களே அவருக்குக் கிடைத்தன. தனக்கான இடம் இது இல்லை என்று நினைத்து அந்தக் குழுவில் இருந்து வெளியேறியவரை, கூத்தபிரான் என்பவர் நடத்திய கல்கி ஃபைன் ஆர்ட்ஸ் குழு தத்தெடுத்துக்கொண்டது. அந்தக் குழுவின் பிரபல நாடகமான அமர தாராவில் முக்கிய கதாபாத்திரம் கிடைத்தது ஜெய்சங்கருக்கு.

ஒருமுறை அவரது நாடகக் குழு நடத்திய நாடகத்தைக் காண அந்நாளில் பிரபலமாக இருந்த இசை அமைப்பாளரான டி.ஆர்.பாப்பாவும் வந்திருந்தார். திரையுலகில் இருந்த அவருக்கு ஜெய்சங்கர் திரைப்படத் துறைக்கு மிகப் பொருத்தமானவர் என்பது புரிந்தது. ஆனால், அவர் மூலம்தான் தன் கலை வாழ்க்கை புதிதாகப் பரிணமிக்கப்போகிறது என்பதை ஜெய்சங்கர் அறிந்திருக்க வாய்ப்பில்லை தான்.

அந்தக் காலகட்டத்தில்தான் இயக்குனர் ஜோசப் தளியத், தான் இயக்கவிருந்த புதிய படத்திற்காக புதுமுகங்களைத் தேடிக்கொண்டிருந்தார். இந்த விடயத்தைக் கேள்விப்பட்ட டி.ஆர்.பாப்பாவுக்கு ஜெய்சங்கரின் ஞாபகம் வரவே, ஜெய்சங்கரை தளியத்திடம் அறிமுகம் செய்து வைத்தார். ஜெய்சங்கரைப் பார்த்த தளியத்துக்கு மகா சந்தோஷம். தன் கதைக்காக அவர் மனதில் வரைந்துவைத்த கதாநாயகனின் உருவம் அச்சு அசல் ஜெய்சங்கரோடு பொருந்திப்போனதுதான் அதற்குக் காரணம். அதற்கடுத்துக் கேட்கவா வேண்டும்? எடுத்த எடுப்பிலேயே ஜெய்சங்கர் கதாநாயகனானார். இரவும் பகலும் என்ற படத்தின் மூலம் ஜெய்சங்கர் திரை உலகில் அறிமுகம் ஆனார். இந்தப் படம் 1965-ம் ஆண்டு பொங்கல் தினத்தில் வெளி வந்தது.

இந்தப் படத்தில், ஜெய்சங்கர் ஜோடி வசந்தா. முதல் படமே ஜெய்சங்கருக்கு பெயர் சொல்லும்படி அமைந்தது. இரவும் பகலும் படத்தை தொடர்ந்து நீ, எங்க வீட்டுப் பெண், பஞ்சவர்ணக்கிளி (இதில் ஜெய்சங்கர் இரு வேடங்களில் நடித்தார்). குழந்தையும் தெய்வமும் ஆகிய படங்கள் வெளி வந்தன. நீ படத்தில் ஜெயலலிதாவும், குழந்தையும் தெய்வமும் படத்தில் ஜமுனாவும் கதாநாயகிகள். ஏவி.எம். நிறுவனம் தயாரித்த குழந்தையும் தெய்வமும் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிப்படம்.



திரை உலகில் காலடி எடுத்து வைத்த முதல் ஆண்டிலேயே ஜெய்சங்கருக்கு அதிர்ஷ்டச் சக்கரம் சுழல ஆரம்பித்தது. மேல் நாட்டில் தயாரிக்கப்பட்ட ஜேம்ஸ்பொண்ட் படங்களின் பாணியில், 1966-ல் மொடர்ன் தியேட்டர்ஸ் தயாரித்த இரு வல்லவர்கள், வல்லவன் ஒருவன் ஆகிய படங்களில் ஜெய்சங்கர் சிறப்பாக நடித்தார். அதனால், தமிழ்நாட்டு ஜேம்ஸ்பொண்ட் என்று அழைக்கப்பட்டார். அதுமட்டுமல்லாமல் ஆங்கில கௌபோய் படங்களையொத்த தமிழ்த் திரைப்படங்களிலும் ஜெய்சங்கரே கதாநாயகன். ஆங்கில நட்சத்திரங்களின் முகவெட்டு ஜெய்சங்கரிடம் இருந்ததே இதற்குக் காரணம். இதே ஆண்டில், காதல் படுத்தும் பாடு, கௌரி கல்யாணம், நாம் மூவர், யார் நீ (பி.எஸ்.வீரப்பா தயாரித்தது) ஆகிய படங்களிலும் ஜெய்சங்கர் நடித்தார்.

அதற்கு அடுத்த ஆண்டில், ஜெய்சங்கர் நடித்து 9 படங்கள் வெளிவந்தன. காதலித்தால் போதுமா, சபாஷ் தம்பி, நான் யார் தெரியுமா?, பட்டணத்தில் பூதம், பவானி, பெண்ணே நீ வாழ்க, பேசும் தெய்வம், பொன்னான வாழ்வு, முகூர்த்த நாள் ஆகியவை அவை.

ஜெய்சங்கருடன் கே.ஆர்.விஜயா இணைந்து நடித்த பட்டணத்தில் பூதம் பெரிய வெற்றி படமாகும். ஜாவர் சீதாராமன் இப்படத்திற்கு வசனம் எழுதியதுடன் பூதம் வேடத்திலும் தோன்றினார். 1968-ம் ஆண்டில் அன்புவழி, உயிரா மானமா, சிரித்த முகம், டீச்சரம்மா, தெய்வீக உறவு, நீலகிரி எக்ஸ்பிரஸ், நேர்வழி, பால்மனம், புத்திசாலிகள், பொம்மலாட்டம், முத்துசிப்பி, ஜீவனாம்சம் ஆகிய 12 படங்கள் ஜெய்சங்கர் நடித்து வெளிவந்தன.

தொடர்ந்து சில ஆண்டுகள் வருடத்துக்கு முக்கால் டஜன் படங்களை தந்த ஜெய்சங்கர் 1972-ம் ஆண்டில் மட்டும் 15 படங்களில் நடித்து சாதனை படைத்தார். குறுகிய காலத்திலேயே நூறு படங்களைக் கடந்தார்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் புதிய படங்கள் வெளியாவது நாம் அறிந்ததே. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் தொடர்ச்சியாக ஜெய்சங்கரின் திரைப் படங்கள் வெளியாகத் தொடங்கின. அத்தனை படங்களின் பாத்திரங்களை ஏற்று கச்சிதமாக நடித்தார் ஜெய்சங்கர். இதனாலேயே அவரை வெள்ளிக்கிழமை நாயகன் என்று ரசிகர்கள் கொண்டாடத் தொடங்கினார்கள்.

எம்.ஜி.ஆர், சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன் முதலியோர் நடித்த அதே கால கட்டத்தில் நடித்தாலும், இவருக்கென ரசிகர்கள் இருந்தார்கள். இவரது சமகால நடிகர்களான முத்துராமன், ரவிச்சந்திரன் போன்றோருடனும் இவர் பல படங்களில் இணைந்து நடித்துள்ளார்.

சிவாஜிகணேசனுடன் ஜெய்சங்கர் பல படங்களில் இணைந்து நடித்துள்ளார். எம்.ஜி.ஆருடனும் படத்தில் நடிக்கும் வாய்ப்பு மலர்ந்தது. ஆனால் அந்தப் படம் வளரவில்லை. நூறு படங்களுக்கும் மேல் தொடர்ந்து கதாநாயகனாகவே நடித்த ஜெய்சங்கர் பிறகு வில்லன் வேடத்தையும் ஏற்று அதனை சிறப்பாக செய்தார்.

அந்த வேடத்தில் தோன்றிய முதல் படம் முரட்டுக்காளை. குறிப்பாக சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் கதாநாயகனாக நடித்த

வாரம் ஒரு வி.ஐ.பி.

முரட்டுக்காளை, பாயும்புலி, துடிக்கும் கரங்கள் போன்ற படங்களில் ஜெய்சங்கர் வில்லன் வேடம் ஏற்றார். ஏராளமான படங்களில் குணசித்திர வேடங்களை ஏற்றும் நடித்தார். மொத்தத்தில் 300-க்கும் அதிகமான படங்களில் நடித்தவர் ஜெய்சங்கர்.

பணம் பல விதத்திலும் வந்து குவிந்த போதும், மனிதத் தன்மையை இழக்காதவர் ஜெய்சங்கர். ஆயிரம் ரூபாவை உதவி என்ற பெயரில் வழங்கிவிட்டு, அதைச் செய்தியாக்க பத்தாயிரம் ரூபாய் செலவழிக்கும் பிரபலங்களுக்கு மத்தியில், சத்தமே இல்லாமல் பலருக்கு உதவி புரிந்தவர் ஜெய்சங்கர். தன் மீது விழும் புகழ் ஒளியைத் தன் பிள்ளைகள் மேல் திருப்பி அவர்களையும் உயர்த்திவிடும் பல நடிகர்களுக்கு மத்தியில், தன் மீது விழுந்த புகழ் ஒளியில் இருந்து தன் பிள்ளைகளை விலக்கி வளர்த்தவர் ஜெய்சங்கர். தனது நடிப்புத் திறமையை ஒரு நேர்த்தியான தொழிலாக மட்டுமே வைத்திருந்த அவரது மனப்பான்மை போற்றற்குரியது.

ஏழைகளுக்கு மட்டுமன்றி, படத்தைத் தயாரிக்க ஆரம்பித்து, அதை குறித்த நேரத்திற்கு வெளியிடுவதில் சிக்கலுடன் தன்னிடம் வந்த பல தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்களுக்கும் பண உதவி செய்து, அவர்களது வாழ்க்கையை வளர்த்தவர் ஜெய்சங்கர்.

2000-ம் ஆண்டு மே மாதம் குவைத் சென்றிருந்தார். அங்கு அவர் திடீரென்று மயங்கி விழுந்தார். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று சென்னை திரும்பிய அவர் தனியார் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். உடல் நலம் தேறி ஒரு வாரத்தில் வீடு திரும்பினார். மீண்டும் அவருக்கு ரத்த அழுத்தம் குறையவே நினைவு இழந்தார். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஜெய்சங்கர் 3-6-2000 அன்று இரவு மரணம் அடைந்தார். தமிழகத்தின் அன்னாளைய முதலமைச்சர் கருணாநிதி, த.மா.கா. தலைவர் மூப்பனார், எம்.ஜி.ஆர். கழகத் தலைவர் ஆர்.எம்.வீரப்பன், குமரி அனந்தன், திருநாவுக்கரசர், நடிகர்கள் சிவாஜிகணேசன், கமலஹாசன், விஜயகாந்த், சரத்குமார், சத்யராஜ், சிவகுமார், நெப்போலியன் உள்பட நடிகர், நடிகைகள், பட அதிபர்கள் ஜெய்சங்கர் உடலுக்கு இறுதி மரியாதை செலுத்தினார்கள்.

ஜெய்சங்கர் உடல் பெசன்ட் நகர் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. ஜெய்சங்கரின் மனைவி பெயர் கீதா. சஞ்சய், விஜய் என்ற 2 மகன்கள். சங்கீதா என்ற மகள். மூவருக்கும் திருமணம் ஆகிவிட்டது. இவர்களில் விஜய், இன்று சென்னையின் பிரபல கண் மருத்துவர்களில் ஒருவர்.

இன்னொரு சுவாரஸ்யமான செய்தி தெரியுமா? ஜெய்சங்கர் முதன் முதலாக நடித்தது இரவும் பகலும் என்ற படத்தில். அவர் நடித்த கடைசிப் படத்தின் பெயரும் அதுவேதான்.

★★★★★★★★★★★★★★★★

★★★★★★★★★★★★★★★

சான்றோருடைய குறிக்கோள் உண்மையே பேசுவது; உண்மையாகவே நடப்பதுதான். - கன்பூஷியஸ்

சிறுவர் முற்றம்
Kids World

முயலும் வேட்டை நாய்களும்

ஒரு தோட்டக்காரன் தோட்டத்தில் காய்கறிகளை பயிரிட்டான். ஆனால் முயல் அந்தத் தோட்டத்திற்கு தினம் வந்து காய்கறிகளைத் தின்று வந்தது. அந்த முயலை விரட்ட தோட்டக்காரன் என்னென்னவோ தந்திரம் செய்தான். ஆனால் ஒன்றும் சரியாகவில்லை.

ஒருநாள் அவனுக்கு முயலிடம் ரொம்பக் கோபம் வந்தது. இனி என்ன செய்வது என்று நினைத்து ஒரு ஜமீந்தாரிடம் சென்று முறையிட்டான்.

இந்த முயல் விஷயம் பெரிய மர்மமாய் இருக்கிறது. எத்தனை தடவை பொறிகளை வைத்தாலும் அது அகப்படுவதில்லை. கல்லையோ, கட்டையையோ அதன்மீது வீசினாலும் அதன்மேல் படுவதில்லை. இது மந்திரமோ, மாயமோ எனக்கு ஒன்றும் தெரியவில்லை. நீங்கள் தான் காப்பாற்ற வேண்டும் என்றான் தோட்டக்காரன். நாளைக் காலை வேட்டை நாய்க ளோடு வருகின்றேன். நீ ஒன்றுக்கும் கவ லைப்படாமல் வீட்டுக்கு போ என்றார் ஜமீந்தார்.

மறுநாள் காலை ஜமீந்தார் தமது வேட்டைக்காரர்கள், வேட்டைநாய்களோடு தோட்டத்திற்கப் போனார். தோட்டக்காரன் வந்தவர்களையும் சாப்பிடும்படி உபசரித்தான். பின்னர் எல்லோரும் முயல் வேட்டைக்குக் கிளம்பினார்கள்.

வேட்டைக்காரர்கள் பொம்புகளை ஊதினார்கள். தோட்டத்திற்குள் பதுங்கி இருந்த முயல் பயந்து போய் வேலியைத் தாண்டியது. அதைப் பார்த்த ஜமீந்தார் வேலிப் பக்கம் ஓடினார்.



அவர் பின்னால் நண்பர்களும், வேட்டைக்காரர்களும், வேட்டைநாய்களோடு தோட்டத்திற்கு ஓடினார்கள். இதனால் அந்த அழகான தோட்டத்தில் இருந்த காய்கறிச் செடிகளும் வேலியும் அழிந்தன.

ஒரு முயலைப் பிடிப்பதற்காக ஜமீந்தார் கோஷ்டிக்கு விருந்து வைத்தது போதாதென்று தோட்டமும் அழியும்படியாயிற்று. இதைப்பார்த்த பின்புதான் தோட்டக் காரனுக்குப் புத்தி வந்தது. ஒரு முயலை விரட்ட நான் விரும்பி அரை மணி நேரத்தில், என் தோட்டமே அழியும்படி செய்து விட்டேனே.

ஒரு முயல்லல்ல, ஆயிரம் முயல்கள் வந்தால் கூட இவ்வளவு நஷ்டம் ஏற்படுத்தியிருக்க முடியாதே என்று சொன்னான்.

தம்பி, தங்கைகளே., உங்கள் அபிமான 'கதிர் ஒளி' வார இதழ் உங்களது திறமைகளை வெளிக்கொண்டுவர தயாராக இருக்கிறது. உங்கள் ஆக்கங்களை ratha66@hotmail.com, kathirolinews@gmail.com என்ற முகவரிக்கு எழுதி அனுப்பிவையுங்கள்.



திருக்குறள்

காலத்தி னால்செய்த நன்றி சிறிதுஎனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

(குறள் விளக்கம்)

உற்ற காலத்தில் ஒருவன் செய்த உதவி சிறிதளவாக இருந்தாலும், அதன் தன்மையை ஆராய்ந்தால் உலகத்தைவிட மிகப் பெரிதாகும்.

இரண்டு படங்களுக்கும் இடையே உள்ள 10 வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்



தொகுப்பு:
ராதா ராம்

உங்களுக்குத் தெரியுமா?



எறும்பு


அமேசான் மழைக் காடுகளில் ஆரெஞ், மஞ்சள் நிறம் எறும்புகள் வசிக்கின்றனர். இவை தங்கள் இரையை பிடிப்பதே ஒரு விதமான பயங்கரத் திட்டமாக இருக்கிறது. தாவரத்தின் தண்டின் அடிப் பகுதியில் தூண்களைப் போன்று மெத் மெத் என்ற பிளாட்பார்மை அமைக்கின்றனர்.

மெல்லிய நார் போன்ற இழைகளால் ப்ளாட்பார்ம் அமைத்து இந்த எறும்புகள் தயாரிக்கும் ஒரு வகை காளானைக் கொண்டு கம் மாதிரி பூசி ஒட்ட வைக்கின்றன. அதன் மேற்புரங்களில் ஆங்காங்கே குழிகளை அமைத்து அதற்குள் வேலைக்கார எறும்புகள் பதுங்கிக் கொள்ளும்.

படத்தைப் பார்த்து இந்த சிம்பிள் கணக்கைச் செய்துபாருங்கள்!


8	-	3	=	
+		-		+
4	+	1	=	
=		=		=
	-	2	=	10

படம் கீறிப் பார்ப்போமா?



அன்பை விடக் கூர்மை படைத்தது, அறிவாளியின் புத்திக் கூர்மை. - ஜேம்ஸ் ஆலன்.

சேவரத்னா, மனித நேயர், கிராண்ட் மாஸ்டர் ராஜகுரு த. ரவிந்திரன் அவர்களின் சிந்தனை துளிகள்...



பெற்றோர்களுக்கு அவர்களுடைய குழந்தைகள் தான் உயிரில் கலந்த உண்மையான சொத்து. குழந்தைகளுக்கு அவர்களுடைய கல்வி அறிவு தான் வாழ்வில் கலந்த உண்மையான சொத்து.

ஒவ்வொரு குழந்தையும் அவரவர் பெற்றோர்களுடைய உயிருடன் கலந்த உண்மையான, முதன்மையான சொத்தாக உள்ளார்கள்.

ஒவ்வொரு குழந்தைக்கும் அவர்களுடைய கல்வி அறிவு தான் அவர்கள் வாழ்வில் கலந்த ஒரு உண்மையான, முதன்மையான சொத்தாக அமைகிறது.

மேலும் ஒவ்வொரு குழந்தையும் அவர்கள் பிறந்த மண்ணின் வாரிசுகளாகவும் அமைகிறார்கள்.

என்னைப் பொறுத்த வரையில் குழந்தைகள் தான் தெய்வீகத்தைப் பெற்று தெய்வத்தின் வடிவில் நம்மிடம் உள்ளார்கள் என்று கூற முடியும்.

"குழந்தையும் தெய்வமும் ஒன்று" என்ற உண்மைக்கு ஏற்றவாறு ஒவ்வொரு குழந்தையும் தன் பெற்றோர்களிடமும், தன் உறவினர்களிடமும், தன் நண்பர்களிடமும் தெய்வீகத் தன்மையுடன், பேசுவதும், சிரிப்பதும், பழகுவதும், செயல்படுவதும் பார்க்கும் போது ஒவ்வொரு மனிதனாலும் "குழந்தையும் தெய்வமும் ஒன்று" என்பதை உணர முடியும்.

என்னைப் பொறுத்த வரையில் கடவுளை எந்த மனித பிறவியாலும் பார்க்கமுடியாது. அவரவர்கள் மற்றவர்கள் மீது கொண்ட உண்மையான பாசத்தின் மூலமாகவும், மற்றவர்களுக்கு அவர்கள் செய்யும் உண்மையான சேவையின் மூலமாகவும் தான் எல்லாம் வல்ல இறைவனை உணர முடியுமே தவிர பார்க்கமுடியாது.

இறைவனை பார்க்க வேண்டுமானாலும் சரி, பார்த்துக் கொண்டே இருக்க வேண்டுமானாலும் சரி, தங்களுடைய குழந்தைகளின் முகத்தைப் பார்த்து தான் இறைவனை நினைத்து அவருடைய வடிவில் பார்த்துக் கொண்டு நிம்மதி அடையலாம்.

குழந்தைகள் என்று "தான் வாழப்போகிறேன்" என்ற உணர்வு அவர்களுக்கு வரும் வரை, அவர்கள் தெய்வீகத் தன்மையுடன் இறைவனுடைய வடிவில் இருப்பார்கள்.

அந்த உணர்வு ஏற்பட்ட பிறகு இறைவன் அவர்களுடைய இரு கண்களின் மூலமாக உண்மையான பாசத்திலும், அவர்களுடைய உண்மையான செயல்களிலும் கண்ணுக்குத் தெரியாமல் கலந்துக் கொள்கிறார். இதற்குப் பெயர் தான் "சத்தியம்" அல்லது "உண்மை" என்று பொருள்.

"சத்தியம்" என்றால் அது இறைவனைக் குறிக்கும். அது கண்ணுக்குத் தெரியாது, உணரத் தான் முடியும்.

"சத்தியம்" ஒரு போதும் சாகாது என்று சொல்வது "இறைவன்" ஒரு போதும் சாக மாட்டார் என்று அர்த்தம்.

ஒரு மனிதன் தன்னை உணர்ந்த பிறகு தான் சத்தியமான தெய்வத்தை இழக்கிறான் ஏனென்றால் அவனுடைய உண்மையான பாசத்திலும், உண்மையான செயல்களிலும், ஆசை, சுயநலம் இவ்விரண்டையும் பின்பற்றத் தொடங்குகிறான். இதனால்தான் சத்தியத்தை இழக்கநேரிடுகிறது, தெய்வீகத் தன்மை குறைகிறது.

இதையும் மீறி தெய்வீகத் தன்மையை பின் பற்றி வாழ நினைப்பவர்களின் "சத்தியத்திற்கு" சோதனைகளும், வேதனைகளும், தோல்விகளும் ஏற்படுகிறது. ஆனால் சத்தியம் சாகாது என்பதை மட்டும் உணர்ந்து வாழ முடிகிறது.

இறைவன் தப்பி தவறி ஒரு சமயம் என் எதிரில் பார்ப்பதைப் போல் வந்து விட்டால், அவராலும் (இறைவனாலும்) தர இயலாத இரண்டு வரங்களைக் கேட்பேன்.

1. எட்டு வயதுக்கு மேல் குழந்தைகளை (எங்களையும் சேர்த்து) வளர்த்து விடாதீர்கள்.

ஏனென்றால் தெய்வீகத் தன்மை விலகி, மனிதத் தன்மையை அடைவதால் தான், ஆசை, சுயநலம் போன்ற இரண்டு குணங்களையும் அடைந்து, தன்னுள் குறுகிய மனப் பான்மையைப் பெற்று வெளியில் நடித்துக்கொண்டு ஒரு நடிகராக வாழ்கிறோமே தவிர உயர்ந்த பிறவியான மனிதனாக, மனித நேயத்துடன் வாழ்வதை இழக்கிறோம்.

2. யாரையும் எங்களிடமிருந்து இறக்க வைத்து, எங்களுடைய உண்மையான பாசத்தை பிரித்துவிடாதீர்கள். இறுதி என்று ஒன்று இல்லாமல் சுவாசத்தை எங்களிடமே கொடுங்கள்.

ஏனென்றால் எங்களின் சமூக உறவுகளின் பாசப் பிரிவைத் தாள முடியாமல் வாழ்நாள் முழுவதும் இதயத்தினுள் அழுதுக் கொண்டு வாழ்ந்து வருகிறோம்.

என்று இவ்வாறு இரண்டு வரங்களைத் தான் கேட்பேன்.

என்னைப் பொறுத்த வரையில் பணம் நமக்கு எப்போதும் சந்தோஷத்தையும், துக்கத்தையும் தான் நமது செயல்களின் வாயிலாக நமக்கு வந்து சேரும். ஆனால் பணம் எப்போதும் நமக்கு நிம்மதியைத் (அமைதியை) தராது.

ஆனால் நாம் எவ்வளவு சந்தோஷங்களையும், துக்கங்களையும் பெற்றாலும் சரி, நமது வீட்டில் நமது தெய்வங்களின் வடிவில் தெய்வீகத்தன்மையில் உள்ள குழந்தைகளை கண்டாலேப் போதும் நமக்கு நிம்மதி ஏற்படும்.

பெற்றோர்களாகிய ஒவ்வொருவருக்கும் தங்களுடைய குழந்தைகள் தான் சொத்து. அக் குழந்தைகளுக்கு அவர்களுடைய கல்வி அறிவுதான் சொத்து.

இவ்விரண்டையும் பாதுகாக்க ஒரு நல்ல குருவைத் தேடிச் சென்று குழந்தைகளை ஒப்படைத்து, கல்வி அறிவுடன் கூடி தெளிவான சிந்தனையையும், சுயகட்டுப் பாட்டையும், நிறைவான தன்னம்பிக்கையையும், பூர்த்தியான ஞானத்தையும் பெற்று அமைதி யுடன் வாழ, வழிவகுத்து கொடுத்து தமது குடும்பத்திற்கும், சமுதாயத்திற்கும் பயன் பெற்று இறைவனுடைய அருளாலும், ஆசீர்வாதத்தாலும் குழந்தைகளை சிறப்புடன் வாழ வைக்க வேண்டும்.

குழந்தைகளானாலும், பெரியோர்களானாலும் நமது எண்ணங்களை நன்றாக வைத்திருந்தால், நமது செயல்கள் நன்றாக இருக்கும். நமது செயல்களை நன்றாக வைத்திருந்தால், நமது வாழ்க்கை நன்றாக இருக்கும். நமது வாழ்க்கையை நன்றாக வைத்திருந்தால், நமக்கு அமைதி (நிம்மதி) கிடைக்கும். நமக்கு நிம்மதி கிடைத்தால் தான், நாம் இறைவனை உணர முடியும்.

இப்பிறவியில் இந்த பூமியில் நான் பெற்ற முழுச் செல்வம் என்னுடைய உண்மையான மாணவ, மாணவிகளின், உண்மையான பாசம்தான் வெறொன்றும் இல்லை.

இப் பிறவியில் இந்த பூமியில் நான் அடைந்த செல்வங்கள்


1. என் பெற்றோர்கள் - என் கண்கண்ட தெய்வங்கள்
2. என் குடும்பம் - என் உண்மையான சொத்து
3. என் மாணவ மாணவிகள் - என் உண்மையான நிம்மதி
4. என் குருக்கள் - என் உண்மையான அமைதியின் வீரர்கள்
5. நான் ரசித்து விரும்பியவர்கள் - என் உண்மையான வழிகாட்டிகள்


ஆகவே ஒவ்வொரு குழந்தைகளுக்கும் என்னால் இயலும் வறை நல்ல வழிகாட்டியாக இருந்து அவர்களுக்கு நல் எண்ணங்களையும், நற் செயல்களையும், நல்ல ஒளிமையமான எதிர்கால இனிய வாழ்க்கையையும், மற்றும் இறைவனிடமிருந்து நல்ல மன அமைதியையும் பெற்று அவர்கள் நல்ல சிறப்புடன் வாழ எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தனை செய்து கொள்கிறேன.

என்றும் உண்மையான பாசத்துடன்.....

கிராண்ட் மாஸ்டர்
ராஜகுரு த. ரவிந்திரன் M.A., M.S.
தொலைபேசி: 647-707-5464

நேசியுங்கள்! சேவை செய்யுங்கள்!





இந்தியாவின் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா இலங்கை சென்றார்



இந்தியாவின் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா 4 நாள் அரசு முறை சுற்றுப்பயணமாக நேற்று தலைநகர் புதுடெல்லியிலிருந்து தனி விமானம் மூலம் இலங்கை சென்றார்.

கொழும்பில் உள்ள பண்டார நாயகா விமான நிலையத்திற்கு நேரில் சென்று இலங்கை வெளியுறவு மந்திரி ஜி.எல்.பெரீஸ் எஸ்.எம்.கிருஷ்ணாவை வரவேற்றார். பின்னர் முக்கிய பிரமுகர்கள் அறைக்குச்சென்ற அவர்கள் இருவரும் பேசிக்கொண்டு இருந்தனர்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவர் ஆர்.சம்பந்தம் மற்றும் தமிழர் தலைவர்களையும், முஸ்லிம் தலைவர்களையும் எஸ்.எம். கிருஷ்ணா சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். இந்த சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

இதையடுத்து இலங்கை அதிபர் ராஜபக்சேவை, எஸ்.எம்.கிருஷ்ணா சந்திக்க உள்ளார். அப்போது அவர் இலங்கையில் தமிழர்களுக்காக இந்திய உதவியால் நிறைவேற்றப்படும் வீடு கட்டும் திட்டத்தை விரைவுபடுத்துவதை வலியுறுத்த உள்ளார்.

இதேபோன்று தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவதை தடுத்து நிறுத்துவது பற்றியும் இலங்கை தமிழர் பிரச்சினையில் அதிகார பகிர்வு மூலம் அரசியல் தீர்வு காண்பது குறித்தும் வற்புறுத்துகிறார்.

இலங்கை பிரதமர் டி.எம். ஜெயவர்த்தனே, இலங்கை வெளியுறவுத்துறை மந்திரி ஜி.எல்.பெரீஸ் ஆகியோரையும் எஸ்.எம்.கிருஷ்ணா சந்தித்து பேசுகிறார்.

இதையடுத்து யாழ்ப்பாணம், கிளிநொச்சி, காலே ஆகிய நகர பகுதிகளுக்கு சென்று அங்குள்ள தமிழ் மக்களுக்கு வீடு, சைக்கிள், மருந்து பொருட்களை எஸ்.எம்.கிருஷ்ணா வழங்க உள்ளார்.

சுதந்திர இந்தியாவில் இதுவரை நடக்காதது: மத்திய அரசை எதிர்த்து ராணுவ தளபதி வழக்கு




தனது பிறந்த தேதியை ஏற்காத மத்திய அரசை எதிர்த்து, ராணுவ தளபதி வி.கே. சிங், சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்துள்ளார். சுதந்திரம் அடைந்த இத்தனை ஆண்டுகால வரலாற்றில் ஒரு ராணுவ தளபதி மத்திய அரசை எதிர்த்து கோர்ட்டுக்கு சென்றிருப்பது இதுவே முதல் முறையாகும் .

நம் நாட்டின் ராணுவ தளபதியாக உள்ள, வி.கே.சிங் பிறந்த தேதியில் சர்ச்சை நிலவுகிறது. இவருடைய மெட்ரிகுலேஷன் பள்ளி சான்றிதழில் பிறந்த தேதி, 10.5.51 என்றும், இவரை தேசிய பாதுகாப்பு அகடமிக்கு தேர்வு செய்ய, யு.பி. எஸ்.சி., நடத்திய நுழைவுத் தேர்வு விண்ணப்பத்தில், 10.5.50 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.எனினும், தன் பிறந்த தேதி, 10.5.51 என, வி.கே.சிங் வற்புறுத்தி வருகிறார். ஆனால், இவரது கருத்தை ராணுவ அமைச்சகம் ஏற்கவில்லை. இதையடுத்து, வி.கே.சிங், வரும் மே, 31ல் ஓய்வு பெற வேண்டியுள்ளது. தன் பிறந்த தேதியை ஏற்க மறுக்கும் பாதுகாப்பு அமைச்சகத்தின் செயலை எதிர்த்து, வி.கே.சிங். சுப்ரீம் கோர்ட்டில் நேற்று ரிட் மனு தாக்கல் செய்துள்ளார். வி.கே.சிங்கின் சார்பில், அவரது வழக்கறிஞர் யு.யு.லலித், இந்த மனுவை சுப்ரீம் கோர்ட்டில், தாக்கல் செய்தார்.

'எனது பிறந்த தேதி பிரச்னை, கவுரவம் மற்றும் ஒருமைப்பாடு சம்பந்தப்பட்டது. 10.5.51 என்ற தேதியின் அடிப்படையில் தான் கடந்த, 36 ஆண்டுகளாக ராணுவத்தில் பல்வேறு பதவிகளை பெற்று சேவையாற்றி வந்துள்ளேன். இப்போது ஏன் எனது தேதியில் அரசு மாற்றம் செய்கிறது?' என, வி.கே.சிங் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். நாட்டின் ராணுவ தளபதி பதவியில் உள்ள ஒருவர், அரசுக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளது, முன்னர் எப்போதும் நடந்திராத விஷயமாக கருதப்படுகிறது.


இந்தியா - மியான்மர் இடையே பேச்சுவார்த்தை விரைவில் தொடக்கம்



இந்தியா - மியான்மர் இடையே உள்துறை அமைச்சக மட்டத்திலான பேச்சுவார்த்தை வருகிற 19ம் திகதி தொடங்க உள்ளது. இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களான இமாச்சல பிரதேசம், நாகலாந்து, மணிப்பூர், மிசோரம் ஆகிய மாநிலங்கள் மொத்தம் 1640 கி.மீ. தொலைவில் மியான்மர் வரை பரவி உள்ளன.

இப்பகுதிகளில் போதைமருந்து கடத்தல், ஆயுதம் கடத்தல் உட்பட சமூகவிரோத செயல்களும், பயங்கரவாத செயல்களும் ஏற்படுவதாக புகார் எழுந்தது. மேலும் இந்தியாவில் செயற்பட்டுவரும் உல்பா, எம்.எஸ்.சி.என் எனப்படும் நாகா பிரிவு ஆகிய பயங்கரவாத அமைப்புகளுக்கும் கடத்தல் புகாரில் தொடர்பு இருப்பதாக கூறப்படுகிறது. இந்நிலையில் இந்தியா - மியான்மர் இடையே வரும் 19ம் திகதி உள்துறை அமைச்சக மட்டத்திலான பேச்சுவார்த்தை நடக்க உள்ளது. இதில் உள்துறை செயலர் ஆர்.கே.சிங், மியான்மர் தலைவர் நைப்பிட்டாவ் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

ஜம்மு காஷ்மீரில் வரலாறு காணாத பனிப்பொழிவு: மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு!



இந்தியாவின் ஜம்மு காஷ்மீரில் இந்த ஆண்டு வரலாறு காணாத பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளதன் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் கடந்த 3 நாட்களாக கடுமையான பனிப்பொழிவு ஏற்பட்டு வருகிறது. குறிப்பாக காஷ்மீர் பள்ளத்தாக்கு பகுதியில் பனிப்பொழிவு அதிகமாக இருந்து வருகிறது.

தலைநகர் ஜம்முவில் நேற்று முன்தினம் இரவு மட்டும் 4 செ.மீ பனிப்பொழிவு பதிவானது. வடக்கு காஷ்மீரில் உள்ள குல்மார்க் நகரில் 15 செ.மீ பனிப்பொழிவு ஏற்பட்டது.

சோனாமார்க்கில் அதிகபட்சமாக 20 செ.மீ பனிப்பொழிவு பதிவாகி இருந்தது. தொடர் பனிப்பொழிவு காரணமாக ஸ்ரீநகர்-ஜம்மு தேசிய நெடுஞ்சாலை மூடப்பட்டுள்ளது.

சாலையின் பல பகுதிகள் பனியால் மூடிகிடப்பதால் பனியை அகற்றும் பணியில் நெடுஞ்சாலை துறை ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். ஜம்மு காஷ்மீரின் புகழ் பெற்ற தால் ஏரி பனிப்பொழிவினால் உறைந்துள்ளது.

மேலும் ஸ்ரீநகர் விமான நிலையத்தின் ஓடுபாதையும் பனிப்பொழிவால் மூடப்பட்டது. இதனால் விமான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதோடு நாட்டின் பிற பகுதிகளில் இருந்து காஷ்மீர் பள்ளத்தாக்கு பகுதி துண்டிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீநகரில் இருந்து பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் தலைநகர் முசாபராபாத்துக்கு வாரந்தோறும் இயக்கப்படும் பேருந்து நேற்று இயக்கப்படவில்லை. பனிபொழிவு காரணமாக பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளதால் பேருந்து இயக்கப்படவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



மதுரை பாலமேடு ஜல்லிக்கட்டு: 39 பேர் படுகாயம்



தமிழர் திருநாள் பொங்கல் பண்டிகையின் இரண்டாவது நாளான (16.1.2012) மாட்டுப் பொங்கல் கோலகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

தமிழர்களின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு மதுரை மாவட்டம் பாலமேட்டில் நடைபெற்றது. சீறிப்பாய்ந்த காளைகளை அடக்க மாடுபிடி வீரர்கள் களத்தில் குதித்தனர்.

ஜல்லிக்கட்டில் மொத்தம் 600 காளைகளை அடக்க 500 மாடுபிடி வீரர்கள் பங்கேற்றனர். முதலாவதாக நஞ்சமலை கோயில் காளை ஜல்லிக்கட்டில் களமிறக்கப்பட்டது.


மதுரை ஆட்சியர் சகாயம், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் முன்னிலையில் போட்டி நடைபெற்று வருகிறது.

மேலும் ஜல்லிக்கட்டு கண்காணிப்புப் பணியில் சுமார் 1,500 போலீசார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

போட்டியின் போது 39 வீரர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

இவர்கள் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், இவர்களில் 7 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளன.

100 எம்.எல்.ஏ.க்களுக்கு டிக்கெட் மறுப்பு: மாயாவதி அதிரடி அறிவிப்பு



உத்தரபிரதேச மாநிலத்தில் சட்டமன்ற தேர்தல் 7 கட்டங்களாக நடக்கிறது. பிப்ரவரி 8-ந்தேதியில் இருந்து மார்ச் 3-ந்தேதி வரை அங்கு வாக்குப்பதிவு நடைபெறுகிறது. மாயாவதி தலைமையிலான ஆளும் பகுஜன் சமாஜ் கட்சிக்கும், எதிர்க்கட்சிகளுக்கும் இடையே கடும் போட்டி நிலவுகிறது.

அங்கு 4 முனை போட்டி நிலவுகிறது. பகு ஜன் சமாஜ், காங்கிரஸ் கூட்டணி, பா. ஜனதா கூட்டணி, முலாயம் சிங் யாதவின் சமாஜ்வாடி கட்சி ஆகிய கட்சிகள் தேர்தலை சந்திக்கிறது. சிறிய கட்சிகளும் களத்தில் உள்ளன. உத்தரபிரதேச தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியலை முதல்-மந்திரியும், பகுஜன் சமாஜ்வாடி கட்சி தலைவருமான மாயாவதி வெளியிட்டுள்ளார். தற்போது எம்.எல்.ஏ.க்களாக இருப்பவர்களில் 100 பேருக்கு மீண்டும் டிக்கெட் வழங்கப்படவில்லை. எதிர்க்கட்சிகள் ஊழல் குற்றச்சாட்டு சுமத்துவதால் மக்களின் நன்மதிப்பை பெற மாயாவதி இந்த அதிரடி நடவடிக்கையை எடுத்துள்ளார். டிக்கெட் ' மறுக்கப்பட்டவர்களில் மந்திரிகளும் அடங்குவார் கள்.

2007-ம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலில் கடைப்பிடித்த அதே கொள்கையை மாயாவதி தற்போதும் பின்பற்றியுள்ளார். இந்த வேட்பாளர் பட்டியலில் பல்வேறு சமுதா யத்தை சேர்ந்தவர்களும் வாய்ப்பு வழங்கப்படுகிறது.

கடந்த சட்டமன்ற தேர்தலில் மொத்தம் உள்ள 403 இடங்களில் பகுஜன் சமாஜ் கட்சி 206 தொகுதிகளை கைப்பற்றியது.

இந்த நிலையில் உத்தர பிரதேசத்தில் சீனியர் அதிகாரிகள் ஆளும் பகுஜன் சமாஜ் கட்சிக்கு ஆதரவாக செயல்படுவதாக காங்கிரஸ் குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக தேர்தல் கமிஷனிடம் மனு கொடுக்கப்பட்டுள்ளது.

இதயம் ரோஜா மலராக இருக்கும் போது, நினைவும் நறுமணமாகத்தான் இருக்கும். - மெஹர்பாபா



- கல்பனா

நல்ல அரக்கு நிறத்தில் ஒரெஞ் வர்ண போர்டர் வைத்த பட்டுப் புடைவையில் மதுமிதா தேவதையாக ஜொலித்தாள். இடையை மீறி நீண்டிருந்த கருநாகம் போன்ற நீண்ட ஜடையில் மூன்று வரிசைகளாகத் தொங்கவிடப்பட்டிருந்த மொட்டு மலராத மல்லி சரசமாடிக் கொண்டிருந்தது. குறுகிய நெற்றியும், வகிட்டில் வைக்கப்பட்ட சிவப்பு நிற குங்குமமும் அவள் அழகை மேலும் துலங்கச் செய்து பிரகாசமாக்கின. அவள் அழகிற்கு தானும் சளைத்தவனில்லை எனக் காட்டிக்கொண்டான் வாசுதேவன். வானம் கொண்ட நீலநிறத்தில் கறுப்பு கட்டம் போட்ட முழுக்கை சட்டையும், அடர்ந்த கறுப்பு நிற ஜீன்ஸ் பேண்டும், தூக்கி வாரிய ஹேர் ஸ்டைலும் அவனை ஆணழகனாக்கின.

என்னடா மது, ரெடியா? இதோ, அதோன்னு சொல்லி ஒரு மணி நேரமாச்சு. உன் அண்ணன் குழந்தையை தொட்டிலில் போடத்தான் போறோம். நீ வரும் வேகத்தைப் பார்த்தால் பிறந்த நாளுக்குத்தான் போவோம் போலிருக்கே என்று பரிகாசம் செய்தான்.

சொரிப்பா. இதோ ரெடியாயிட்டேன். நீங்க காரை ஸ்டார்ட் பண்ணி வைங்க. நான் வீட்டைப் பூட்டிட்டு வரேன்.

மதுமிதாவும், வாசுதேவனும் காதல் மணம் புரிந்தவர்கள். இருவரும் ஒரே ஜாதியாக இருந்ததால் திருமணம் யார் தடையுமில்லாமல் இனிதே முடிவு பெற்று வருடம் பத்தாகி விட்டது. யார் கண்பட்டதோ இந்த ஆதர்ச தம்பதிகள் கொஞ்சி மகிழ குழந்தைச் செல்வம் இல்லை. வாசுதேவன் செல்வத்தில் திளைப்பவன். வேலைக்குச் சென்று சம்பாதிக்க வேண்டும் என்ற கட்டாயமில்லாதவன். இருந்தாலும், தந்தை விட்டுச் சென்ற ஏற்றுமதி, இறக்குமதி தொழிலை திறம்படவே நடத்தி வருகிறான். உடன் பிறந்தவர்கள் என்று யாருமில்லை. வாசுவுக்குப் பத்து வயதாக இருக்கும் போதே அவனைப் பெற்றவள் உலக வாழ்க்கையிலிருந்து விடுபட்டாள். தந்தையும் இவனுக்கு மணம் முடித்த கையோடு புண்ணியஸ்தலங்கள் நோக்கிப் பயணப்பட்டார்.

மதுமிதா முற்போக்கு சிந்தனை கொண்டவள். குழந்தை இல்லை என்ற வருத்தம் உள்ளுக்குள் இருந்த போதிலும் அதை வெளிக்காட்டிக்கொண்டதில்லை. அப்படி வெளிக்காட்டிக்கொண்டால் பார்ப்பவர்களின் இரக்கத்திற்கு ஆளாகக் கூடும் என்பதால் அதைத் தவிர்த்தாள். குழந்தை இல்லை என்பதற்காக ஒரு போதும் சாமியையோ, சாமியாரையோ நாடிச் சென்றதும் இல்லை. அவளுடன் பிறந்தவர்கள் ஒரு அண்ணன், ஒரு தங்கை. அண்ணனுக்கு போன தையில் திருமணம் முடிந்து, குழந்தையும் பெற்று தொட்டிலில் போடப் போகிறான். தங்கைக்கு திருமணமாகி பத்தாவது மாதமே பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். இப்போது அந்த குழந்தைக்கு ஒரு வயதாகிறது.

வாசுவும், மதுமிதாவும் விசேஷத்துக்கு வந்து இறங்கிவிட்டார்கள். சம்பிரதாய விசாரிப்புகள் எல்லாம் முடிந்து அனைவரும் குழந்தையோடு தொட்டிலருகே சூழ்ந்தனர். வயதில் மூத்த பழம் ஒன்று குழந்தையைத் தொட்டிலில் போட்டுவிட்டு அதன் காதில் பெயரையும் கிசுகிசுத்துவிட்டு சென்றது.

கொழந்தைக்கு அத்தைங்க வந்து கொழந்த காதுல பேரைச் சொல்லிட்டுப் போங்க என்று அழைத்தவுடன் மதுமிதா கணவனுடன் தொட்டிலருகே சென்றாள். அதைப் பார்த்து அங்கிருந்த அனைவரும் ஒருவருக்கொருவர் குசுகுசுவென பேசிக் கொண்டனர். அந்த சமயம் பார்த்து மதுமிதாவின் தாய் பொற்கொடி அவளைத் தடுத்து, மது, நீ முதல்ல போக வேண்டாம்மா. உன் தங்கை போகட்டும். எல்லாரும் முடிச்ச பிறகு நீ போ. நான் சொல்ல வர்றது உனக்குப் புரியும்னு நினைக்கறேன். எல்லாம் குழந்தையோட நன்மைக்குத்தான்மா சொல்றேன் என்றதைக் கேட்டு மதுமிதாவிற்கு நெஞ்சில் ஈட்டியை பாய்ச்சியது போன்றிருந்தது. அப்படியே பின்னோக்கி வந்து நின்றாள்.

தங்கை கனிகா கையில் தன் குழந்தையோடு தவித்துக்கொண்டிருப்பதை பார்த்துவிட்டு, மதுமிதா அவளிடம் சென்று, கனி, நீ போய் குழந்தைக்குப் பேர் சொல்லிட்டு வா. அதுவரைக்கும் நான் உன் பொண்ணைப் பார்த்துக்கறேன் என்றாள்.

அய்யோ.... இல்ல மது.... அவ யார் கிட்டயும் அவ்வளவு சீக்கிரம் போக மாட்டா. அழுவ ஆரம்பிச்சுடுவா. உனக்கு எதுக்கு வீண் சிரமம். நானே வச்சுக்க றேன் என்று நாசூக்காக குழந்தையை தராமல் தவிர்த்தாள்.

இந்தக் கூத்தையெல்லாம் வாசுதேவன் கண்டும் காணாதவன் போல இருந்தான். மதுமிதாவுக்கு ஆறுதல் சொல்லப் போக அது மேலும் அவளைக் கழிவிரக்கம் கொள்ளச் செய்யுமே என்று அமைதியாக இருந்தான். இனிமேல் அங்கிருப்பதில் பிரயோசனமில்லை என்று உணர்ந்தவளாய் மதுமிதா தாயிடமும், அண்ணன் மனைவிடமும் சொல்லிவிட்டு கிளம்பலாம் என அவர்களிடம் சென்றாள்.

அண்ணி, எனக்கு குழந்தையை தூக்கும் தகுதிதான் இல்லாமப் போச்சு. இந்த செயினையாவது குழந்தைக்கு போடுவீங்களா? என்று கேட்டவுடன் அண்ணி அவசர அவசரமாக, என்ன மது அப்படி கேட்டுட்ட? தாராளமா செயினை போடலாம் என்றாள் வாயில் முப்பத்திரண்டு பற்களும் தெரியும்படி.

மதுமிதா அந்த செயினை குழந்தைக்கு அணிவிக்காமல் அண்ணியின் கையில் கொடுத்துவிட்டு, தாயிடம் சொல்லிவிட்டு கணவனுடன் கிளம்பிச் சென்றாள்.

என்னங்க, வண்டிய பீச்சுக்கு விடுங்க. கொஞ்ச நேரம் பேசிட்டுப் போகலாம்.

எனக்குத் தெரியும் மது, கண்டிப்பா பீச்சுக்கு போகச் சொல்லுவேன்னு என்றபடி உதட்டில் மெல்லிய புன்னகையை தவழவிட்டு காரை பீச் பக்கம் திருப்பினான். பீச்சில் ஆள் நடமாட்டம் குறைந்த இடத்தைத் தேர்வு செய்து அமர்ந்தார்கள். சிறிது நேரம் பலவித எண்ணங்கள் மனதில் அலைமோத, கடலலைகளை வெறித்துப் பார்த்துவிட்டு சகஜ நிலைக்கு மீண்டு பேசத் தொடங்கினாள் மதுமிதா.

குழந்தை இல்லாம இருக்கறது அவ்வளவு பெரிய சமூக குற்றமாங்க? நாமா குழந்தை பிறப்பை தள்ளிப் போடுறோம்? நமக்கு மட்டும் குழந்தையை கொஞ்சும் ஆசை இல்லையா என்ன? இன்னைக்கு பங்சன்ல கவனிச்சீங்களா? என்னை பெத்த தாயே அண்ணன் குழந்தையை நான் முதல்ல தூக்கி பேர் வைக்க கூடாதுன்னு சொன்னாங்க. கூடப் பிறந்த தங்கையே அவ குழந்தையை என்கிட்ட தரத் தயங்கினா. பெத்தவங்களும், கூட பிறந்தவங்களுமே என் மனசைப் புரிஞ்சிக்காதபோது இந்த ஊரும் உலகமும் புரிஞ்சுக்காம போனதுல என்ன தப்பு இருக்க முடியும்? இவங்களோட இந்த ஈனத்தனமான செய்கையால என் மனசு எந்த விதத்துலயும் காயப்படல. குழந்தை இல்லையேன்னு மண்ணோட மண்ணாகி போற அளவுக்கு நான் தளர்ந்தும் போகல. அது பிறக்கும் போது பிறக்கட்டும். எனக்கு நம்ம மேல நம்பிக்கை இருக்கு. இதனால கோயில் கோயிலாவும் நான் அலையப் போறதில்ல. இவங்களுக்கு பதில் சொல்ற காலம் வரும்போது நான் இவங்களப் பார்த்துக்கறேன். கடைசி வரைக்கும் உங்களோட அன்பும், புரிதலும், அரவணைப்பும் இருந்தா அதுவே போதுங்க எனக்கு என்று ஆதரவாக அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்.

அவள் பேசி முடிக்கும் வரை காத்திருந்து, அவளுடைய முன் நெற்றி முடிகளை ஒதுக்கி விட்டபடி, உன்னோட இந்த தன்னம்பிக்கையும், தெளிவான சிந்தனையும் இருந்தாலே போதும் எதுவும் சாத்தியமே. உனக்கு எந்த துறையில் ஆர்வமிருக்கோ அதுல நீ உன்னை ஈடுபடுத்திக்க. உன் எல்லா முன்னேற்றங்கள்லயும் நான் துணையா இருக்கேன். குழந்தை பிறக்கும்போது பிறக்கட்டும். அதுவரை நமக்கு நாமே குழந்தைகளா இருப்போம் என்று அவளின் மென்மையான கைகளை எடுத்து கன்னத்தில் வைத்துக் கொண்டான்.

இரண்டு வருடங்கள் கடந்து விட்ட நிலையில் மதுமிதா, தனக்கு பதினைந்து நாட்கள் தள்ளிப் போனதை உணர்ந்து பதட்டப்படாமல், உணர்ச்சி வசப்படாமல் கணவனிடம் சொன்னாள். அவனும் அவ்வாறே உணர்ச்சியை வெளிகாட்டிக் கொள்ளாமல், தாமதிக்காமல் அன்று மாலையே அவர்களின் குடும்ப டொக்டரிடம் சென்றார்கள். அங்கு அவள் தாய்மையடைந்திருப்பதை உறுதி செய்தார். இருவரும் அப்போதும் உணர்ச்சிகளை வெளிகாட்டிக் கொள்ளாமல், வரும் வழியில் ஒரு தரமான இனிப்பகத்தில் இனிப்புகளை வாங்கிக் குவித்துக் கொண்டு பக்கத்தில் இருந்த அனாதை இல்லத்திற்கும், முதியோர் இல்லத்திற்கும் சென்று அவர்களின் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டார்கள்.

வீட்டிற்கு வந்தவுடன் மனதில் இத்தனை நாள்பட்ட அவமானங்கள், வேதனைகளை கண்ணீரால் கழுவினாள். அவள் கர்ப்பமாக இருப்பதை பிறந்த வீட்டிற்குக்கூடத் தெரியப்படுத்த விரும்பவில்லை.

சரியாக பத்தாவது மாதம் அவள் அழகையும், வாசுவின் அழகையும் சரிபாதியாகக் கொண்டு இளவரசன் பிறந்தான். அந்த குழந்தையை தொட்டிலில் போடும் விசேஷத்திற்கு பிறந்த வீட்டினரை அழைத்திருந்தாள். அனைவரும் வந்திருந்தனர்.

அவளுடைய தாய் பொற்கொடி குழந்தையை தூக்கி கொஞ்ச ஆவலோடு அருகில் வந்தாள். உடனே மதுமிதா, அம்மா, ஒரு நிமிஷம், என்னுடைய விருந்தாளிகள் வந்துடட்டும். அவங்க தூக்கி ஆசிர்வதிச்சு பேர் வச்சி தொட்டில்ல போட்ட பிறகு நீங்க தூக்கினா போதும் என்றாள் அமைதியாக. பொற்கொடி அதைக் கேட்டு விதிர்விதிர்த்துப் போய் நின்றாள். இருக்கும் அத்தனை முக்கிய உறவுகளும் வந்துவிட்டார்கள். இன்னும் இவள் யாருக்காக எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறாள் என அறிய அனைவரும் ஆவலாக இருந்தார்கள்.

அப்போது வீட்டினுள் சில பெண்கள் கூட்டமாக வந்தார்கள். அவர்களைப் பார்த்து, வந்திருந்த விருந்தினர்கள் அதிர்ச்சியில் உறைந்தார்கள். ஏனென்றால் வந்திருந்த பாதிப் பேர் குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள். மீதிப் பேர் திருநங்கைகள். அதில் வந்திருந்த வயதில் மூத்த திருநங்கையில் ஒருவரிடம் மதுமிதா, குழந்தையை எடுத்துத் தந்து ஆசிர்வதிக்கச் செய்து பெயரிடச் சொன்னாள். அந்த அம்மாளும் மிகுந்த சந்தோஷத்துடனும், கண்களில் கண்ணீரோடும் குழந்தையை ஆரத்தழுவி உச்சி முகர்ந்து பெயரிட்டு மதுமிதாவிடம் தந்தார்.

அம்மா, தாயே... உன்னோட இந்த உயர்ந்த குணத்துக்கு, நீ புருஷன் புள்ளைகளோட நூறு வருசம் நல்லாயிருக்கணும். வட இந்தியாவுல யார் வீட்ல எந்த நல்ல விசேஷங்கள் நடந்தாலும் எங்களைத்தான் முதல்ல கூப்பிட்டு மரியாதை பண்ணுவாங்க. இந்த ஊர்லதான் எங்களை யாரும் மதிக்கறது இல்ல. மதிக்கலன்னாலும் பரவாயில்லமா. மனுசங்களாக் கூட நினைக்கறதில்ல. எங்க போனாலும் எங்களுக்கு கேலியும், கிண்டலும், தவறான பார்வையும்தான் மிஞ்சும். எரியுற கொள்ளில எண்ணெய ஊத்துற மாதிரி இந்த சினிமாக்காரங்களும் எங்களை நிரந்தரமா கேலிப் பொருளாவே ஆக்கிட்டாங்க. இந்த மாதிரி பிறப்பெடுத்தது எங்க குத்தமா? எங்களப் பெத்தவங்க குத்தமா? எங்களுக்கு குடும்பமா வாழணும்னு ஆசையா இருக்குமா. இந்த சமுதாயம் எங்களை அப்படி வாழ விடாதே. எல்லாரும் உன்னை மாதிரியே சிந்திச்சா எங்களுக்கு இந்த நிலைமை ஏன் வரப் போவுது? எங்க சொந்தங்கள் கூட எங்களை வீட்டு விசேஷத்துக்கு அழைச்சதில்ல. நீ இத்தன வருசம் கழிச்சு குழந்தை உண்டாகி பெத்தெடுத்திருக்க. எங்களையும் ஒரு மனுசியா மதிச்சு கூப்பிட்டு பெத்தவங்களையும் ஒதுக்கி வச்சுட்டு எங்களை முன்னாடி சபைல நிக்க வச்சி கௌரவப்படுத்திட்ட மா. எங்களுக்கு இந்த மரியாதையே போதும். ரொம்ப சந்தோஷமா இருக்குமா என்று கண்களில் நீர் பெருக்கோடு உணர்ச்சி வசப்பட்டுப் பேசினார்.


மதுமிதா அடுத்தடுத்து நீண்டகாலம் குழந்தைப்பேறு இல்லாத பெண்களை அழைத்து குழந்தைக்கு பெயரிடச் சொல்லி வாழ்த்தி செல்லும்படி கேட்டுக் கொண்டாள். அவர்களும் அளவிலா மகிழ்ச்சி கரைபுரண்டோட குழந்தையின் பெயரை காதில் சொல்லி ஆசை தீரும் மட்டும் குழந்தையின் அழகை கண்டு ரசித்து கொஞ்சி விட்டு சென்றனர்.

இவர்களெல்லாம் முடித்தபிறகு தாயின் பக்கம் திரும்பினாள்.

என்னம்மா, நம்ம வீட்டுக்கு சிறிதும் சம்பந்தமில்லாதவங்கள அழைச்சு குழந்தைய தொட்டில்ல போல சொன்னேன்னு பார்க்கறீங்களா? என்னை இதுபோல ஒரு நல்ல விஷயத்தை செய்ய உத்வேகமா இருந்தவங்களே நீங்கதானே. அதுக்காக என்னோட நன்றியை தெரிவிச்சுக்கறேன். நீங்கதானே அண்ணனோட குழந்தையை தொட்டிலில் போட்டு பெயர் சொல்ல நான் வந்தபோது குழந்தையில்லாதவள்னு தடுத்தீங்க? நானும் உங்க வயித்துல தானே பொறந்தேன். அண்ணனை போலவும், தங்கச்சிய போலவும் நானும் ஒரு குழந்தைக்கு தாயாவேன்னு ஏன் நம்பல. எப்பவும் பட்ட மரமாவே இருப்பேன்னு முடிவே பண்ணிட்டீங்களாமா? தங்கச்சி கூட அவ குழந்தைய என்கிட்ட தந்தா ஏதாவது ஆகிடுமோன்னு நினைச்சி தரல. இப்படிபட்ட குறுகிய சிந்தனையுள்ள உங்களை அழைச்சு முதல் மரியாதை தருவதை விட, இவ்வளவு நாள் குழந்தையில்லாம நான் பட்ட மனவேதனைகளையும், ரணங்களையும், வலிகளையும் தினம் தினம் சந்திச்சுட்டு இருக்கும் இவங்கள அழைச்சு தந்தா, என் கொழந்தைக்கு உண்மையான சந்தோஷமும், மனப்பூர்வமான ஆசீர்வாதமும் கிடைக்கும்னு தெரிஞ்சி தான் இவங்கள கூப்பிட்டேன். மணமில்லாத காகித மலரை யாரும் தலையிலும் வைக்க மாட்டாங்க. கடவுளுக்கும் மாலையாப் போட மாட்டாங்க. குழந்தையில்லாதவங்களும், திருநங்கைகளும் இன்னைக்கு அந்த நிலைமைலதான் இருக்காங்க. வீம்புக்காக உறவுகளை கட்டி அழ நான் தயாராக இல்லை. இந்த பன்னிரண்டு வருஷத்துல உறவுகளோட உண்மையான முகங்களை நான் பார்த்துட்டேன். நான் பண்ண ஒரே புண்ணியம் எனக்கு கிடைத்த கணவர். அவரோட துணையில்லாம என்னால இத்தனை முள் பாதைகளை கடந்து நான் வந்திருக்கவே முடியாது. எனக்கு இந்த உறவுகளே போதும் என அவள் உணர்ச்சி பிரவாகமாக மாறி பேசியதைக் கண்டு அவள் தாய் உட்பட வந்திருந்து அனைத்து உறவுகளும் தலைகுனிந்தனர்.

தன் தாய் பேசுவது முற்றிலும் நியாயமே என்று ஆமோதிப்பது போல தன் பொக்கை வாய் காட்டி சிரித்தது தொட்டிலில் இருந்த குழந்தை.

4-வது டெஸ்டில் டோனிக்கு தடை: ஷேவாக் கேப்டன்



டெஸ்ட் போட்டியில் தோல்விமேல் தோல்வியை சந்தித்து வருவதால் டோனி கடும் விமர்சனத்துக்கு ஆளாகி இருக்கிறார். டெஸ்ட் கேப்டன் பதவியில் இருந்து அவரை நீக்கவும் வலியுறுத்தப்பட்டு வருகிறது. இந்த நிலையில் டோனிக்கு சோதனைக்கு மேல் சோதனை ஏற்பட்டு உள்ளது.


ஒரு டெஸ்டில் விளையாட அவருக்கு ஐ.சி.சி. (சர்வதேச கிரிக்கெட் கவுன்சில்) தடை விதித்து உள்ளது. பெர்த்தில் நடைபெற்ற 3-வது டெஸ்டில் இந்திய அணி குறிப்பிட்ட நேரத்தில் 2 ஓவரை வீச முடியவில்லை. இந்த மெதுவான பந்து வீச்சு காரணமாக இந்திய அணி கேப்டன் டோனி ஒரு டெஸ்டில் விளையாட தடை விதிக்கப்பட்டது.

அதோடு 40 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டு உள்ளது. மற்ற வீரர்களுக்கு 20 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டது. பெர்த் டெஸ்டில் இந்திய அணி 4 வேகப் பந்து வீரர்களுடன் களம் இறங்கியது. இந்திய அணி மீது ஏற்கனவே இது மாதிரி மெதுவாக பந்து வீசிய குற்றச்சாட்டு இருப்பதால் டோனிக்கு ஒரு டெஸ்டில் தடை விதிக்கப்பட்டு உள்ளது.

இந்த தடை உடனடியாக அமலுக்கு வருகிறது. இதனால் வருகிற 24-ந்தேதி ஆஸ்திரேலியாவுக்கு எதிராக அடிலெய்ட்டில் தொடங்கும் 4-வது டெஸ்டில் டோனியால் ஆட முடியாது.

எனவே 4-வது டெஸ்டுக்கு ஷேவாக் கேப்டனாக பணியாற்றுவார். டோனிக்கு பதிலாக விக்கெட் கீப்பராக விர்த்திமான் சகா இடம் பெறுவார்.

முன்னாள் பிரபல கால்பந்து வீரர் மரடோனாவுக்கு ஆபரேசன்: கிட்னியில் இருந்த கல் அகற்றப்பட்டது



அர்ஜென்டினா நாட்டு கால்பந்து அணியின் முன்னாள் பிரபல வீரர் டிகோ மரடோனா. 1986-ம் ஆண்டு இவரது தலைமையில்தான் அர்ஜென்டினா உலக கோப்பையை கைப்பற்றியது.

அவரது ஆட்டம் இன்றும் பேசும் அளவுக்கு அபாரமாக இருந்தது. டிகோ மரடோனா தற்போது துபாயில் உள்ள ஐக்கிய அரபு எமி ரேட்ஸ் கிளப்பான அல்-வாசல் அணிக்கு பயிற்சியாளராக இருந்து வருகிறார்.

இந்த நிலையில் கிட்னியில் உள்ள கல்லால் மரடோனா அவதிப்பட்டு வந்தார். இதை தொடர்ந்து துபாயில் உள்ள கனடியன் சிறப்பு மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு நேற்று ஆபரேசன் நடந்தது. அவரது சிறுநீரகத்தில் இருந்த கல் அகற்றப்பட்டது. ஆபரேசனுக்கு பிறகு சில மணி நேரங்களில் மரடோனா 'டிஸ் சார்ஜ்' செய்யப்பட்டார்.

இன்னும் சில தினங்களில் அவர் தனது பயிற்சியாளர் பதவியை தொட ருவார். புகழின் உச்சத்தில் இருந்த மர டோனா 1990-ம் ஆண்டு உலககோப் பை போட்டியின் போது ஊக்கமருந்து விவகாரத்தில் சிக்கினார்.

அதில் இருந்து அவர் மீண்டு வர பல ஆண்டுகள் ஆனது. 2004-ம் ஆண்டு இருதய கோளாறு காரணமாக 10 நாட்கள் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றார்.

2005-ம் ஆண்டு அவர் வயிற்றுப்பகுதியில் ஆபரேசன் செய்துகொண்டார். 2010-ம் ஆண்டு உலககோப்பை போட்டியில் அர்ஜென்டினா அணிக்கு பயிற்சியாளராக பணியாற்றினார்.

தோல்வி காரணமாக அந்த பொறுப்பில் இருந்து விலகினார்.

தற்போது துபாயில் உள்ள கால்பந்து அணிக்கு சிறப்பு பயிற்சியாளராக உள்ளார்.

பெண்கள் ஹாக்கி இந்தியா வெற்றி

இரண்டாவது ஹாக்கி லீக் போட்டியில், இந்திய பெண்கள் அணி 2-1 என்ற கோல் கணக்கில் அஜர்பெய்ஜான் அணியை வீழ்த்தியது.


இந்தியா வந்துள்ள அஜர்பெய்ஜான் பெண்கள் ஹாக்கி அணி, நான்கு போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டியில் 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்ற இந்தியா 1-0 என முன்னிலை வகித்தது. நேற்று நடந்த இரண்டாவது போட்டியின் 18வது நிமிடத்தில் இந்தியாவின் ரிது ராணி முதல் கோல் அடித்தார். இதற்கு 23வது நிமிடத்தில் அஜர் பெய்ஜானின் ஜியாங்கா கிம், பதிலடி கொடுத்தார். இதனால் முதல் பாதி முடிவு 1-1 என சமநிலையில் இருந்தது.



பின், இரண்டாவது பாதியில் எழுச்சி கண்ட இந்திய அணிக்கு 41-வது நிமிடத்தில் சபா அஞ்சும் கோல் அடித்தார். இதற்கு அஜர்பெய்ஜான் வீராங்கனைகளால் பதிலடி கொடுக்க முடியவில்லை. ஆட்டநேர முடிவில் இந்திய அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இதன்மூலம் இந்திய அணி 2-0 என தொடரில் முன்னிலை வகிக்கிறது. 18.01.2012, இவ்விரு அணிகள் மோதும் மூன்றாவது போட்டி நடக்கிறது.

இந்திய ஒருநாள் அணியில் மீண்டும் சச்சின், ஜாகீர் கான், இர்பான் பதான்





அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள முத்தரப்பு தொடர் மற்றும் 20 ஓவர் போட்டிக்கான இந்திய கிரிக்கெட் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. உலகக்கோப்பைக்கு பின்னர், சச்சின் டெண்டுல்கர் மீண்டும் அணியில் இடம்பிடித்துள்ளார்.

மகேந்திர சிங் டோனி தலைமையிலான 17 பேர் கொண்ட அணியில், சச்சின், சேவாக், கம்பீர், கோஹ்லி, ரெய்னா, ரோகித் ஷர்மா, ஆகிய வீரர்கள் இடம்பெற்று உள்ளனர்.

ரவீந்திர ஜடேஜா, மனோஜ் திவாரி, அஷ்வின், ராகுல் ஷர்மா, பார்த்தீவ் படேல் ஆகிய இளம் வீரர்களும் அணியில் உள்ளனர்.

ஜாகீர் கான், இர்பான் பதான், பிரவீன் குமார், வினய் குமார், உமேஷ் யாதவ் ஆகிய பந்து வீச்சாளர்களும் அணியில் இடம்பிடித்துள்ளனர்.

சென்னையில் நேற்று கூடிய ஸ்ரீகாந்த் தலைமையிலான தேர்வுக்குழுவினர் இந்த அணியை அறிவித்தனர்.

துப்பாக்கி சுடுதல் இந்தியாவுக்கு இரண்டு தங்கம்



ஆசிய துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் தொடரில் நேற்று இந்தியாவுக்கு இரண்டு தங்கப் பதக்கம் கிடைத்தது.


கத்தார் தலைநகர் தோகாவில், 12வது ஆசிய துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் தொடர் நடக்கிறது. நேற்று நடந்த பெண்களுக்கான 10 மீ., 'ஏர் பிஸ்டல்' அணிகள் பிரிவில், இந்திய அணி (1147) ஒரு புள்ளி வித்தியாசத்தில் சீனாவை (1146) வீழ்த்தி தங்கம் வென்றது. இந்தியா சார்பில் அனு ராஜ் சிங், சுவேதா சவுத்திரி, ஹீனா சித்து பங்கேற்றனர். இதன்மூலம், கடந்த ஆண்டு நடந்த ஆசிய விளையாட்டு போட்டியில், சீனாவிடம் கண்ட தோல்விக்கு இந்திய வீராங்கனைகள் பதிலடி கொடுத்தனர்.

இதன் தனிநபர் பிரிவில், இந்தியாவின் அனு ராஜ் சிங் (481.2 புள்ளி) மூன்றாவது இடம் பிடித்து வெண்கலம் வென்றார். தென் கொரியாவின் கிம் ஜாங்-மி (482.3), சீனாவின் சென் இங் (481.6) முதலிரண்டு இடங்களை பிடித்தனர்.

பெண்களுக்கான தனிநபர் 50 மீ., 'ரைபிள் புரோன்' பிரிவில், இந்தியாவின் ராஜ் குமாரி (594 புள்ளி) முதலிடம் பிடித்து தங்கம் வென்றார்.

இதன்மூலம் ஆசிய சாம்பியன்ஷிப் தொடரில், 'ரைபிள் புரோன்' பிரிவில் தங்கம் வென்ற முதல் இந்தியர் என்ற சாதனை படைத்தார்.

மலேசிய ஓபன் பாட்மின்டன்: இகான் வாங் சாம்பியன்



மலேசிய ஓபன் பாட்மின்டன் தொடரின், பெண்கள் ஒற்றையர் பிரிவில் சீனாவின் இகான் வாங் சாம்பியன் பட்டம் வென்றார்.

மலேசிய தலைநகர் கோலாலம்பூரில், மலேசிய ஓபன் பாட்மின்டன் தொடர் நடந்தது.


நேற்று நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவு பைனலில், சீனாவின் இகான் வாங், ஜிங் வாங் மோதினர்.

இதில் அபாரமாக ஆடிய இகான் வாங் 21-19, 21-11 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று, சாம்பியன் பட்டம் வென்றார்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவு பைனலில், மலேசியாவின் சோங் வி லீ, ஜப்பானின் கெனிசி டாகோவை சந்தித்தார்.


இதில் அபாரமாக ஆடிய சோங் வி லீ 21-6, 21-13 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று, சாம்பியன் பட்டம் வென்றார்.

அவுஸ்திரேலிய பகிரங்க டெனிஸ்: சானியா தோல்வி



மகளிர் பிரிவின் முதல் சுற்றில் இந்தியாவின் சானியா மிர்சா ஒரு மணி 28 நிமிடங்களில் 4-6, 2-6 என்ற நேர் செட்டுகளில் பல்கேரியாவின் ஸ்வெடானா பிரோன்கோவாவிடம் தோல்வியைத் தழுவினார். தரவரிசையில் சானியா 105-வது இடத்திலும், பிரோன்கோவா 47-வது இடத்திலும் உள்ளனர்.

காயம் காரணமாக சோம்தேவ் தேவ்வர்மன் பங்கேற்காத நிலையில், சானியாவின் தோல்வியால் இப்போட்டியின் ஒற்றையர் பிரிவில் இந்தியர்களின் சவால் முடிவுக்கு வந்துள்ளது.









தை மாதப்பிறப்பு நாள்!

அன்றுதான் தமிழர் மரபுப் புத்தாண்டு விழா

தமிழ்முனி வள்ளுவன் பிறந்த நாள் விழா

தமிழ் மக்களின் கலாச்சாரப் பொங்கல் விழா

காலம் என்பது மாறாத அசைவு வேகத்தைக் கொண்டு அளவிடப்படுவது. நாம் வாழும் பூமியானது தன்னைத் தானே சுற்றி வருகிறது. அது ஒரு முழுச் சுற்றுச் சுற்ற எடுக்கும் காலத்தை ஒரு நாள் என்று அனைத்து மக்களும் எடுத்துக் கொள் கின்றனர். மேல் நாட்டார் நள்ளிரவில் தொடங்கி மறு நள்ளிரவு வரை ஒரு நாள் என்று எடுத்துக் கொள்கிறார்கள்.

தமிழரும் இன்னும் பல ஆசிய நாட்டாரும் காலை (6 மணி- சூரிய உதயம்) தொடங்கி மறு காலை வரை ஒரு நாள் என்று எடுத்துக் கொள்கிறார்கள். பூமி தன்னைத் தானே சுற்றுவதோடு சூரியனையும் சுற்றி வருகிறது. பூமி சூரியனைச் சுற்றிவர எடுக்கும் காலத்தை அனைத்து மக்களும் ஒரு வருடம் என்று எடுத்துக் கொள்கிறார்கள். சர்வதேச மட்டத்தில் அரசியல் வர்த்தக உறவு ஒருங்கிணைவுக்காக ஆங்கில வருடம் ஜனவரி முதல் நாள் புதுவருடமாகக் கொள்ளப்படுகிறது. ஆனால் வெவ்வேறு நாடுகள், வெவ்வேறு மத, இன மக்கள் தமது மரபுப்படி வெவ்வேறு பருவ காலநேரத்தில் வருடம் தொடங்கி முடிவதாகக் கொள்கிறார்கள்.

முஸ்லிம் மக்கள் தமது மத அடிப்படையில் தமது ஆண்டுத் தொடக்கத்தை கைக்கொள்கிறார்கள். இந்து மத மக்கள் சித்திரை மாதத்தை தமது முதல் மாதமாகக் கொள்கிறார்கள். ஆனால் தமிழ் மக்கள் என்று கூறும் போது அவர்கள் பல்வேறு மதத்தைப் பின்பற்றுகிறார்கள். ஆனாலும் அவர்கள் தமக்கென ஒரு பொதுவான கலாச்சார அடிப்படையில் ஒரே தமிழ் மொழியைப் பேசுகின்றவர்களாக வாழ்கிறார்கள். இவ்வகையில் தமிழ்மக்களின் புது வருட ஆரம்பம் எது?

இதைப்பற்றி இந்தியாவில் தமிழகத்தில் கூடி ஆராய்ந்த தமிழ் அறிஞர்கள் பண்டிதர்கள் சான்றோர்கள் தமிழரின் புத்தாண்டு தை மாதம் முதல் தேதி தான் என்று 1921 ம் ஆண்டு அறிவித்தார்கள். அதே போல் மறுபடியும் 1937 ம் ஆண்டிலும் கூடி ஆராய்ந்த தமிழ் அறிஞர்கள் அதை உறுதிப் படுத்தினார் கள்.

தமிழ் ஈழத்தில் நடைமுறை அரசொன்று இருந்தபோது அதையே அவர்களும் நடைமுறைப் படுத்தினார் கள்.

1971 ல் தமிழக அரசும் அதைச் சட்ட மாக்கி நடைமுறைப் படுத்தியது. சர்வ தேசத்தின் பரிணாம வளர்ச்சி மாற்றங்களுக்கேற்ப மதவித்தியாசத்தைப் புறம்தள்ளி ஒரே இனம்,ஒரே தமிழ்க் கலாச்சார இனம், ஒரே மொழி பேசுகின்ற இனம் என்ற வகையில் ஒன்றுபட்டு நிற்கவேண்டிய ஒரு பூகோளதேவை கருதி அனைத்து மத தமிழ் மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தமிழ் வருடப் பிறப்பாக தை மாத முதல் நாளையே கைக்கொள்ள வேண்டுமென்பதே முடிந்த முடிவாகும்.

தனிப்பட்ட மதத்தவர்கள் தத்தம் மத சார்பான வருடத்தையும் கொண்டாடுவ தில் தவறில்லை. பூமியின் சமரேகைக்கு வடக்கே 23 1/2 பாகைக்கும் தெற்கே 23 1/2 பாகைக்கும் இடையில் தான் சூரிய அசைவு இருக்கிறது. பூமியில் பெரும் பாலான தரைப்பிரதேசம் வடபகுதியி லேயே இருப்பதால் அங்கு வாழும் மக்கள் சூரியன் வடதிசை நோக்கி அசையத் தொடங்குவதை மகிழ்ச்சி யோடு வரவேற்பது இயல்பானதே.

அப்படிப் பார்த்தால் தமிழர் தைமாதப் பிறப்பை அதாவது சூரியனின் அசைவு தென் முனையில் இருந்து வட திசை நோக்கி ஆரம்பிக்கும் நாளை வருடப் பிறப்பாகக் கொண்டாடுவது அறிவுபூர்வ மானதும் கூட.

புலம்பெயர் தமிழ் மக்கள் தை முதல் நாளையே தமிழ் மரபு வருடப் பிறப்பாகவும் தமிழர் மரபுப் பொங்கல் திருநாளாகவும் தமிழ் மறை தந்த முனிவர் திருவள்ளுவர் பிறந்த நாளாகவும் கடந்த சில வருடங்களாகவே கொண்டாடி வருகிறார்கள். கனடாவில் ஒன்ராரியோ மாநிலத்தில் உள்ள மார்க்கம் நகர சபையும் பிக்கரிங் நகர சபையும் தமிழ் மரபுப் புதுவருடத்தை அங்கீகரித்து ஜனவரி 13 ,14 ,15 ம் தேதிகளை (ஆங்கிலத் தேதி) தமிழரின் மரபுரிமை நாட் களாகவும் அந்த விழாவைத் தமிழரின் மரபு விழாவாகவும் கொண்டாட ஒப்புதல் அளித்துள்ளன. இந்த அரச ஒப்புதலைப் பெறுவதற்கு முன்னின்று உழைத்த பலரும் பாராட்டப் பட வேண்டியவர் களே. அதில் மார்க்கம் நகர சபை 7 ம் வட்டார உறுப்பினர் திரு லோகன் கணபதியின் பங்கு அளப்பரியது. அவருக்கு நா.க.த.அ. சார்பில் எமது மனமார்ந்த பாராட்டுதல்களையும் நன்றி யையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் தை மாத முதல் நாளை தமிழரின் புதுவருடப் பிறப்பாகவும் பொங்கல் திருநாளாகவும் திருவள்ளுவர் பிறந்த நாளாகவும் நா.க.த.அ. பிரகடனப் படுத்துவதோடு தமிழ்மக்கள் அனை வரையும் கோலாகலமாகக் கொண்டாடு மாறும் தமிழ் மரபுக் கலாச்சார வளர்ச்சிக் கான நிகழ்வுகளை நடத்துமாறும் வேண்டி நிற்கிறது.

எம்மினிய தமிழ் மக்களுக்கு நா.க.த.அ.ன் புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

கலாநிதி ராம் சிவலிங்கம்

உதவிப் பிரதமர் / நா.க.த.அ.

கல்வி கலாச்சார உடல்நல அமைச்சர்.

கனடா விக்டோரியா மாநிலத்தில் மாணவர் கருத்தரங்கில் தொற்றுநோய் பரவியது!

கனடாவில் விக்டோரியா மாநிலத் தில் மாணவப் பத்திரிகையாளர் நடத் திய கருத்தரங்கில் கலந்து கொண்டவர் களுக்குத் திடீரென்று தொற்றுநோய் தாக்கியது. இதனால் தாக்குதலுக்கு உள்ளானவர்கள் தத்தம் அறைகளி லேயே தங்கியிருக்குமாறு தனிமைப் படுத்தப்பட்டனர்.

இவர்களுக்கு வாந்தி, வயிற்றுப் போக்கு, தலைவலி மற்றும் தசையிறுக் கம் ஏற்பட்டது. கனடாவில் பல்கலைக் கழக ஆண்டுக் கருத்தரங்கு (NHSH), ஹார்பர் டவர்ஸ் உணவுவிடுதியில் நடந்தது. இதில் கலந்து கொண்ட 360 பேரில் 60 பேருக்கு நோய்த்தொற்று ஏற்பட்டது. CBCசெய்திக்கு எம்மா கோட்மேர் தெரிவித்தார். இவரும் பேராளராக வந்து நோய்த்தொற்றுக்கு ஆளானார். மருத்துவர்கள் உணவு விடுதிக்கு வந்து சிகிச்சை அளிக்கின்ற னர்.

செயிண்ட் தாமஸ் பல்கலைக்க ழகத்தின் மாணவப் பத்திரிகையாள ரான லாரா பிரௌன் அங்கிருந்து வந்த பத்துப்பேரில் ஐந்துபேருக்கு வைரஸ் தாக்குதல் ஏற்பட்டதாகக் கூறினார். இந்த நோய் விரைவாகப் பரவும் என்பதால் அறையிலேயே தங்கியிருக் குமாறு மருத்துவர்கள் கூறியுள்ளனர். இதனால் தங்கும் செலவு மாணவருக்கு அதிகரித்துள்ளது.

உணவு விடுதியில் சாப்பிட்ட பிறகு விக்டோரியா பல்கலைக்கழகத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சிக்காக பேராளர்கள் அனைவரும் பேருந்தில் வந்தனர். பேருந்திலேயே சிலருக்கு மயக்கம் ஏற்பட்டது. உடனே அவர்கள் அந்த நிகழ்ச்சிக்குப் செல்வதை ரத்துத் செய்தனர். மருத்துவ சிகிச்சையைப் பெற்றனர்.

விக்டோரியாவில் 74ஆவது பல்கலைக் கழக மாணவர்கள் கருத்தரங்கு கடந்த புதனன்று தொடங்கி சனியன்று நிறைவு பெற்றது. இக்கருத்தரங்கை விக்டோரியப் பல்கலைக்கழகத்தின் மாணவப் பத்திரிகையான மார்ட்லெட்டும் காமோசும் கல்லூரியின் மாணவப் பத்திரிகையான நெக்ஸசும் நடத்தின.

மனிதன் என்பவன் தெய்வமாகலாம்

திருமதி விஜயா ராமன்

பாகம் - 7

வாழ்க்கையில் எல்லாமே மாறிக் கொண்டே தான் இருக்கின்றன. எதுவுமே நிலையாக நிலைத்திருப்பதில்லை. இன்பமோ, துன்பமோ, உயர்வோ தாழ்வோ இப்படி எல்லாமே மாறும் தன்மையையே கொண்டிருக்கின்றன. ஏன்? குழந்தையாகப் பிறக்கின்ற நாம் குழந்தையாகவே இருந்து விடுகின்றோமா? தினந்தோறும் கணந்தோறும் இந்த உடலும் உள்ளமும் மாறுதலைடைந்து கொண்டே போகிறது. குழந்தை சிறுவனாகி, சிறுவன் வாலிபனாகி, வாலிபன் பல நிலைகளை அடைந்து இறுதியில் வயோதிகனாகி அங்கங்கள் தளர்ந்து உடல் மரணித்து விடுவதே வாழ்க்கை.

உடல், மனம் எல்லாமே அநித்யம். அழியாதது ஆத்மா மட்டுமே! அது தான் என்னுள் உயிராக இருந்து சக்தியாக வெளிப்பட்டு செயல்படுகின்றது. அது நித்தியமானது. அழிவில்லாதது. இதைப் பற்றி நாம் முதலில் அறிய வேண்டும். இந்த அறிகின்ற தேவையைப் பற்றிய விரிவான ஆராய்ச்சி தான் சாங்கிய யோகம். அதாவது உண்மையான நான் என்பது எது என்ற ஞானத்தை உணர்த்துவது.

தன்னைப் பற்றிய உண்மைகளைச் சரியாக நாம் அறிந்துகொள்ள வேண்டியது மிக அவசியம். ஏனெனில் ஒன்றைப் பற்றிய உண்மையை நாம் அறிந்து கொண்டால் தான் நமக்குள் ஒரு தெளிவு ஏற்படும். நம்மைப்பற்றி நாம் உண்மையாகத் தெரிந்துகொண்டு விட்டால் பிறகு நம் மனம் அமைதி அடைந்துவிடும். பிறகு இந்த வாழ்க்கை ஒரு போர்க்களமாக இருக்காது. விளையாட்டுத் தளமாக மாறிவிடும்.

இதைப்புரிந்து கொள்ளாமல் மனித மனத்தின் இயற்கையான அடிப்படைத் தேவையான ஆன்மீகத்தை ஏதோ புதிரான ஒன்றாக நினைத்துக்கொண்டு இந்த வயதில் ஆன்மீகம் தேவையா? அந்த வயதில் பார்த்துக் கொள்ளலாம் என்று பெரும்பாலும் நினைக்கின்றனர். ஆனால் இளம் வயதில் ஆன்மீகக் கல்வியைப் பெறும் வாய்ப்புப் பெறுபவர்கள் தான் பாக்யசாலிகள். ஏனெனில் தன்னைப் பற்றிய மெய்யறிவைப் பெற்றவர்கள் வாழ்க்கையைப் புரிந்துகொண்டு வாழ்கின்றனர். மேலும் அவர்கள் தம்மையும் தம் சுற்றுப்புறத்தையும் அமைதியடையச் செய்து விடுகின்றனர். அவர்களிடம் நிதானம், ஆராய்ந்து பார்க்கும் திறன், நடுநிலையில் நின்று செயல்படுதல், பிறரையும் தன்னைப் போல் நினைத்துச் செயல்படும் தன்மை போன்ற பல உயரிய பண்புகள் நிறைந்திருக்கும்.

60 வயதுக்கு மேல் ஆன்மீகத்தை அறிய முயலும்போது உடலும் உள்ளமும் ஒத்துழைப்பு தராது. முதுமையின் சகல குறைபாடுகளுடன் எப்படி ஞானம் பெறுகின்ற பயிற்சியில் தொடர்ந்து அயராமல் ஈடுபட முடியும்? மரணத்திற்கு நெருக்கமான முதுமை நிலையில் பொறிகள் சரியா இயங்கா நிலையில், விளக்கம் மண்டையில் ஏறாது, மனதில் பதியாது. ஆகவே அறுபது வயதிற்குப் பின்பு தான் ஆன்மீகம் என்பது புற இன்பங்களில் தணியாத தாகம் கொண்ட யாரோ சொல்லி வைத்த பிழையான கருத்து ஆகும். ஆன்மீகத்தை அறிவதற்கு மனப் பக்குவம் தான் தேவை. மனப்பக்குவப் பட்டவர்களுக்கு வயது ஒரு தடையல்ல.

சிறுவனான முருகன் தான் தந்தைக்கு ஞான உபதேசம் செய்தான். ஞான சம்பந்தர், பிரகலாதன், துருவன், விவேகானந்தர், பரமஹம்ச யோகாநந்தர், பகவான் ரமணர், சேஷாத்ரி ஸ்வாமிகள், வள்ளலார், ஷீர்டி சாயிபாபா, இப்படி எத்தனையோ மஹா புருஷர்கள் எல்லாம் மிகச் சிறிய வயதிலேயே ஞானத்தை அடைந்தவர்கள். ஆகவே ஆன்மீக அறிவைப் பெறுவதற்கு வயது முக்கியமல்ல. அதற்குத் தேடல் உணர்வும், பற்றற்ற மனப்பக்குவமும் தான் முக்கியம்.

இந்த ஞானத் தெளிவை அடையாததால் தான் அர்ச்சுனன் பல சந்தர்ப்பங்களில் அவசரப்பட்டிருக்கிறான். ஆவேசப்பட்டிருக்கிறான். அப்பொழுதெல்லாம் அவனைத் தடுத்து நிறுத்தி நெறிப்படுத்தி வழி காட்டியவர் ஸ்ரீ கிருஷ்ணர். எனவே தான் இப்பொழுதும் மனம் தடுமாறிய நிலையில், செய்ய வேண்டியது என்ன என்று புரிபடாத நிலையில், கண்ணா! நீங்களே என் குரு! எனக்கு வழி காட்டுங்கள்!; என்று அர்ச்சுனன் பணிவுடன் இறைஞ்சுகிறான்.

நான் யார்? என்ற மிகப்பெரிய வினாவிற்குரிய விடையைக் குரு சிஷ்ய உரையாடலின் மூலம் தான் விளங்கிக் கொள்ள முடியும். அறியாமையில் சிக்கி, நான் யார்? என்ற உண்மை தெரியாமல் மனம் போன போக்கிலும், பிறரால் தரப்பட்ட கருத்துக்களை ஆராய்ந்து பார்க்காமல் தொடர்ந்து கடைப்பிடிப்பதாலுமே இந்த வாழ்க்கை அல்லல் நிறைந்ததாக இருக்கின்றது. இப்படி அல்லல்படும் ஜீவனை அந்தப் பரம்பொருள்தான் கருணை கூர்ந்து குருவாக வந்து ஆட்கொள்கின்றார். கொஞ்சம் கொஞ்சமாகத் தத்துவ விசாரணை முறையின் மூலம் சீடனின் ஐயங்களை அகற்றி, நான் யார்? என்ற உண்மையைப் புரிய வைக்கின்றார்.

இந்த முறையில் தான் தனக்கு வழி காட்டும்படி வேண்டிப் பணிந்த அர்ச்சுனனுக்கு, ஆத்மா வேறு, இந்த உடல் வேறு என்பதை எடுத்துரைப்பதோடு இந்த ஆத்மாவின் தன்மைகளையும் கிருஷ்ணர் எடுத்துரைக்கின்றார். ஸ்ரீ கிருஷ்ணர் எடுத்துரைத்த கருத்துக்கள், நமக்குத் தெளிந்த ஞானத்தைத் தருவதாக இருக்கின்றன.

அறிவுத் தெளிவினால் மட்டுமே, வாழ்க்கை என்பது ஒரு நாடகம் என்பது விளங்கும். நாம் ஏற்கின்ற பாத்திரங்கள் பொய்யானவை. நமக்கு வைக்கப்பட்டிருக்கும் பெயரும், தரப்பட்டிருக்கும் உடலும் மற்ற அனைத்துமே கர்மப் பயனால் வந்து சேர்ந்தவை. இந்தப் பிறவியோடு இவை முடிவடைந்துவிடும். ஆனால் நான் என்னும் இந்த சைதன்யத்திற்கு அழிவே இல்லை. அது தான் வளர்ந்து, தேய்ந்து, மடிகின்ற இந்த உடலுக்குள் இருந்து வேறு உடலுக்கு மாறி மாறி எத்தனையோ பிறவிகளாகப் பயணித்துக் கொண்டிருக்கிறது.

பிறவிகள் தோறும் உடல்கள் மாறுமே தவிர, உள்ளே குடியிருக்கும் ஆத்மாவிற்கு அழிவில்லை. மாற்றமும் இல்லை. இந்த உண்மையை அறிய முற்படுபவர்களுக்குத் தான் இந்த ஞானம் கிடைக்கும்.

இந்த உடல் நமது வாழ்வின் உண்மையான நோக்கத்தை அடைவதற்காக அளிக்கப்பட்ட கருவி மட்டுமே! இந்த உடல் நான் அல்ல. இது எனக்குத் தரப்பட்ட வாகனம். இந்த வாகனம் எப்படிப் பயணப்பட்டு எங்கே சென்று சேர வேண்டும் என்பதை நாம் தான் தீர்மானிக்க வேண்டும். அதற்குப் புத்தித் தெளிவும் இறையருளும் தேவை. இதைப் பயன்படுத்தி நாம் எங்கிருந்து வந்தோமோ அங்கேயே சென்று சேர வேண்டுமே தவிர, அறியாமையால் வந்த இடத்தில் நின்று ஆடிக் கொண்டிருக்கக்கூடாது.

அழியக்கூடிய இந்த உடம்பிற்காக எந்த விதத் தீர்மானத்தையும் எடுக்கக்கூடாது. வாழ்க்கையின் நோக்கத்தைப் புரிந்துகொள்ளாமல் பணம், புகழ், பட்டம், பதவி, வீடு, வாசல் என்று அலைந்து அலைந்து தேடக்கூடாது.

எதற்காகவும் ஆசைப்படாமல், ஏங்கித் தவிக்காமல், இருப்பதை நிறைவோடு ஏற்றுக்கொண்டு அமைதியாக, ஆனந்தமாக, திருப்தியாக வாழ்வது தான் சிறந்த வாழ்க்கை. இன்னும் இன்னும் என்று வசதிக்காக ஏங்க, ஏங்க, இருக்கிற நிம்மதியும் போய்விடும். அறியாமை தான் எல்லாவற்றிற்கும் மூல காரணம். மெய்ஞானம் தான் போதும் என்ற திருப்தியையும் நிறைவையும் தரும்.

மரணம் பயத்தைத் தருவதாகவே பலருக்கும் இருக்கிறது. ஆனால் மரணம் என்பது இந்த உடலிலிருந்து விடுபடுவதே தவிர பயப்படத்தேவையில்லை.

'சோகம், அறியாமை, மரண பயம் இந்த மூன்றும் மாயையின் வெளிப்பாடுகளே தவிர, அவை உன்னுடையவை அல்ல.!' என்று ஸ்ரீ கிருஷ்ணர் அர்ச்சுனனிடம் கூறுகிறார்.



மெய்ப்பொருளின் தளத்தில் நிற்பவருக்கு இவை மூன்றும் இருக்கவே இருக்காது. ஏனெனில் உண்மையான நான் என்னும் சைதன்யத்திற்குக் கவலையோ, துன்பமோ, அறியாமையோ, மரணமோ இல்லை. நான் என்பது எங்கும் நிலைத்திருப்பதான பரம்பொருளே என்பதைப் புரிந்து கொண்டவர்களுக்கு இவை இல்லை.

இந்த உடலையும், மனதையும், புத்தியையும் நான் என்று நினைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு சோகம், அறியாமை, மரணபயம் இருக்கும். நான் பரம்பொருளின் அம்சமே என உணர்ந்தவருக்கு ஆனந்தமும் அன்பும் ஞானமும் தான் இருக்கும்.

உலகத்தில் உள்ள பொருள்கள் எல்லாமே அழியக்கூடியவை. நான் அழியாதவன். இந்த உலகிலுள்ள சகல ஜீவராசிகளுக்கும் எனக்கும் உள்ள தொடர்பு என்னவென்றால், எல்லாம் ஒரே சைதன்யத்தின் பல்வேறு தோற்றங்களே, சைதன்யமெனும் பெருங்கடலில் ஒரு சிறு அலையே நான். எனவே அவையும் நானும் எல்லாம் ஒன்று. இப்படி எண்ணத் துவங்கும்போது நாம் உலகக் குடிமகனாக ஆகிவிடுகின்றோம். நமக்குள் பேதமில்லை. அன்பு தான் எல்லாவற்றையும் இணைக்கின்றது.

இந்த அன்பு என்னும் மனிதகுல தர்மத்தைக் காக்க வேண்டும் என்பதற்காகத்தான் கிருஷ்ணர் மகாபாரதக் கதையில் எத்தனையோ சூழ்ச்சிகளைக் கையாள்கின்றார். ஏனெனில் தர்மம் தான் வெல்ல வேண்டும். அநீதியும், அதர்மமும் ஒரு நாளும் வெற்றியடைய முடியாது. தர்மத்தைக் காப்பாற்ற வேண்டிய நிலை வரும்போது, காலம், இடம், ஏவல், பொருள் ஆகியவற்றைக் கொண்டு அந்தத் தர்மத்தையே கூட வளைக்கலாம்.

இந்து சமயத்தில் செய், செய்யாதே என்ற கட்டுப்பாடுகள் என்றுமே கிடையாது. எதையும் செய்யலாம். ஆனால் எதைச் செய்கிறாயோ அதற்குரிய பலனையே நீ அடைவாய்! என்று அது எச்சரிக்கின்றது.

நீங்களே கவனித்திருக்கலாம்! பெரியவர்கள் அறிவுரை கூறி இளையவர்கள் அதைக் கேட்க விரும்பாமல் தம் மனம் போனப் போக்கில் நடக்கின்றபோது, அனுபவமிக்க அந்தப் பெரியவர்கள் அவர்களை மேலும் வளைத்துக் கட்டுப்படுத்தித் திருப்பாமல், போ! பட்டுத் தெளிந்து வா! என்று சொல்லி விட்டு வி'டுவார்கள். இதற்குக் காரணம் இந்த தர்மக் கோட்பாட்டை அவர்கள் அறிந்திருப்பது தான். எதைச் செய்கிறோமோ அதற்குரிய விளைவு தான் ஏற்படும்.

தர்ம வழியில் நடக்கப் பழகினால் விளைவு சரியாகவே அமையும். மாறி நடந்தால் விளைவும் அதற்கேற்றபடி மாறித் தான் அமையும். நமக்குரிய குறைபாடுகள் எல்லாமே இந்தப் பிறவிக்குரியவையே தவிர உண்மையான நான் என்பது இறை நிலை. குறைகளை நாமே உணர்ந்து அவற்றைத் திருத்தி மேல்நிலைக்கு உயர முயன்றால் அடுத்த பிறவி மேம்படும். சோகம், அறியாமை, மரணபயம் இவை மூன்றும் நம்மிடமிருந்து நீங்கி விட்டாலே இந்த இறைநிலை நமக்குள் தானாக ஏற்படும். நாம் யாராக இருந்து செயல்பட்டாலும் இது நானல்ல, நான் அழிவில்லாத ஆத்மா! என்பதை உணர்ந்து அந்த நிலையிலிருந்தே செயல்படப் பழக வேண்டும். மனமும் புத்தியும் இப்படி அமைதியடைந்து கொண்டே வந்தால் அன்பும் கருணையும் தானாகவே வெளிப்படும். இப்படி இறை உணர்வில் இருந்து செயல்படும்போது வாழ்க்கை எளிதாக மாறிவிடுமென்பது மற்றொரு நன்மை.

தங்கம் தங்கமாக இருக்கும் வரை அதற்கு மதிப்பும் அழகும் குறைவு. அந்தத் தங்கம் ஆபரணமாக மாறுகின்றபோது தான் அதற்கு மதிப்பு அதிகம். அதுபோல நம்மை யார் என அறிந்து தெய்வீகப் பண்புகளுக்கு நம்மை உயர்த்திக் கொண்டால் தான் இந்தப் பிறவி சிறப்படையும். பரிணாம உயர்வு



ஏற்படும். இந்தத் தெய்வீக உணர்வில் நம்மை நிறுத்தி வாழ்கின்றபோது, பிறகு இந்த வாழ்க்கையை விரும்புவதுமில்லை. விலகுவதுமில்லை. உள்ளது உள்ளபடி அப்படியே வாழ்க்கையை ஏற்க முடியும். இந்த ஞானத்தை அர்ச்சுனன் பெற்று உயர வேண்டும் என்றுதான் கிருஷ்ணர் உண்மையை எடுத்துரைக்கின்றார்.

(தொடரும்)

ஏமாற்றுதல் என்பது மிகச்சிறிய முள்; அதைப் பிடுங்கி எறிவது கடினம். - மகாவீர்

தைத்திருநாள் தமிழர் திருநாள், பெருநாள், தமிழர் ஆண்டின் முதல்நாள்!

நாடுகடந்த தமிழீழ அரசு வழங்கும் நற்செய்தி.

தைபிறந்தால் வழிபிறக்கும் என்பது தமிழரிடையே பண்டுதொட்டு இன்று வரை தமிழர் நாவில் நடம்புரியும் சொற்றொடராக விளங்குகிறது. ஆனால், ஆண்டுகள் பல உருண்டோடியும் தமிழனுக்கு நல்வாழ்வு பிறக்கவில்லை. உலகெல்லாம் சிதறுண்டு சீரழியும் தமிழனுக்கும் இந்நிலைதான். ஆனால் ஈழத் தமிழன் நிலையோ மீளமுடியாத கவலையைத் தருகின்றது. எனினும், எந்நிலையிலும் நம்பிக்கை இழப்பதற்கு நாம் ஆயத்தமில்லை. நம்பிக்கையில்தான் தமிழர் மட்டுமல்ல மானிட இனமே வாழுகின்றது. நம்பிக்கை அழியாத் தன்மை உடையது என்பது உலக இனங்களே ஒத்துக்கொள்கின்ற உண்மையாகும். நம்பிக்கை என்றும் வாழ்வை வழங்குகிறது. (*Hope is eternal*) நம்பிக்கை மலைகளையே அசைக்கும் என்று விவிலியம் விளம்புகின்றது. 'ஆண்டவன் மீது உனக்கு நம்பிக்கை இல்லையெனினும் உன்மீது நம்பிக்கை வைத்து செயல்படு' என்று வீரத்துறவி விவேகானந்த அடிகளார் விளம்புகின்றார். '*Even if you don't have faith in God have faith in yourself*' என்பதுதான் விவேகானந்தரின் ஆங்கிலச் சொல்லாட்சி. 'தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி தன் மெய் வருந்தக் கூலி தரும்' என்றும், 'எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் எண்ணியர் திண்ணியராகப் பெறின்' என்பதும் வள்ளுவர் வழங்கியுள்ள நம்பிக்கையூட்டும் வாய்மொழிகளாகும். '*God helps only those who help themselves*' (தமக்குத்தான் உதவியாய் இருந்தால்தான் தெய்வம் நமக்கு துணைநிற்கும்.) மேலே கூறிய கூற்றுக்களுக்கு மேலும் வலுவூட்டுகின்ற முறையில் எம் பொய்யாமொழிப் புலவர் தனது குடி செயல்வகை என்ற அதிகாரத்தில் 1023ஆம் குறளில் 'குடி செய்வல் என்னும் ஒருவர்க்குத் தெய்வம் மடிதட்டித் தான்முந் துறும்' என்று கூறியுள்ளார். இதற்கு 'என் குடியை உயரச் செய்வேன் என்று முயலும் ஒருவனுக்கு ஊழ், ஆடையை இறுகக் கட்டிக்கொண்டு தானேவந்து துணைசெய்யும்' என்பது முனைவர் மு.வ. தரும் விளக்கம்.

அரவிந்தர் அறையும் கூற்று

இந்திய விடுதலை வரலாற்றில் தனியிடம் பெறும் விடுதலைப் போராளியாகவும் மெய்யியல் வல்லுனராகவும் விளங்கிய அரவிந்தர் அவர்கள் இன்றைய சூழ்நிலையில் ஈழத் தமிழர்க்கு ஏற்றவொரு கூற்றாக அமைவதினால் அதனையும் நாம் இங்கு தருகின்றோம். நீ எதில் நம்பிக்கை வைக்கிறாயோ அதற்காக நீ போராட வேண்டும். இன்றைய சூழ்நிலை உனக்குச் சார்பற்றதாக இருக்கலாம். ஆனால் எதிர்கால நிகழ்ச்சிகள் உன் சார்பில் அணைவது உறுதி என்று அவர் கூறியது எல்லை மீறிய இன்னல்களுக்கு ஆளாகி நம்பிக்கை இழந்து வாழ்கின்ற தமிழனுக்கு தெம்பூட்டும் சொற்றொடராக அமைகின்றது.

ஏ! ஈழத்தமிழனே! எந்நிலையிலும் நம்பிக்கை இழக்காதே என்பதே நாடுகடந்த தமிழீழ அரசின் சார்பில் நாம் தருகின்ற நம்பிக்கையாகும்.

விழா எடுத்து விழ்ந்தவன் தமிழன்

விழா எடுத்து வீழ்ந்தவன் தமிழன் என்று பேசுகின்ற அளவுக்கு பொருளற்ற பல விழாக்களை எடுத்து தமிழன் வீழ்ச்சி கண்டுள்ளான். ஆனால், தமிழரின் திருநாளாகிய தைப்பொங்கல் பொருள் பொதிந்த விழாவாகும். தமிழன் பல விழாக்களை பொருள் பொதிந்தவற்றையும், பொருளற்றவற்றையும் கொண்டாடியுள்ளான் என்பதற்கு ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தரின் பின்வரும் பாடல் சான்று பகர்கின்றது.

'ஐப்பசி ஓணவிழா
கார்த்திகை விளக்கீடு,
மார்கழி ஆதிரைநாள்
நெய்ப்பூசம்
ஒண்புழுக்கள்
நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசம்
மாசி கடலாட்டு
பங்குனி உத்தரம்
பதினெண் கணங்கள் தம்
அட்டமி நாள்'

என்று ஞானசம்பந்தன் நவிலும் இவ்விழாக்கள் எதுவும் தமிழனின் முழுத் தனித்துவத்தைக் காட்டுவதாக அமையவில்லை. சிலவற்றில் தமிழ்ச் சாயல் உண்டு. ஆனால், பலவற்றில் வடநாட்டின் வல்லாண்மைக்கு நாம் ஆளாகி இருப்பதையே இவ்விழாக்கள் எடுத்துக் காட்டுகின்றன. ஆனால், இவற்றிற்கு முற்றிலும் மாறுபட்டு விளங்குவதுதான் தைப்பொங்கல் திருநாள். தைப்பொங்கல் திருநாள் என்ற சொற்றொடரே தனித் தமிழ் சொல்லாட்சியையும் தமிழன் அடையாளத்தையும் காட்டிநிற்கிறது.

தைப்பொங்கல் வேறு, மகர சங்கராந்தி வேறு.

தைப்பொங்கல் வேறு, மகர சங்கராந்தி வேறு. இங்கும் தமிழன் தனித்துவத்தைச் சிதைக்கும் முறையில் மகர சங்கராந்தி என்ற வடமொழிச் சொல்லாட்சி எம்மீது திணிக்கப்பட்டுள்ளது. வேறு சொற்களில் விளம்பின் வடநாட்டுப் பண்பாட்டுப் படையெடுப்பிற்குச் சான்றாய் இப்பெயர் மாற்றங்கள் ஏற்படுகின்றன. பண்பாட்டுப் படையெடுப்பு காலப்போக்கில் அரசியல் படையெடுப்பிற்கும் வழிவகுக்குமென்பதை நாம் உணர்ந்து என்றும் விழிப்போடு இருத்தல் வேண்டும்.

சுப்பிரமணிய முதலியார் சுட்டிக்காட்டும் உண்மை

'தமிழர் பொங்கலுக்கு செய்கின்ற சடங்குகள் வடமொழியாளர் சங்கராந்திக்குச் செய்வதில்லை. வடமொழியாளர் செய்வனவற்றை தமிழர் செய்யும் ஏற்பாடும் கிடையாது. எனவே, ஒருநாளை வெவ்வேறு வகையில் இவர்கள் அறிந்து கொண்டாடினர். எனவே பயிர்களுக்கு இன்றியமையாத வெப்பத்தைத் தந்து, உயிர்கொடுத்து வளர்த்து வந்த கதிரவனை நோக்கி உழவர்களாகிய தமிழர்கள் அவ்வுதவியினால் வந்த புதிய விளைச்சலைக் கொண்டு கொண்டாடுவதாகிய பொங்கல் தமிழருக்கே சிறப்பாக உரிய விழாவாக விளங்குகின்றது என்பது வெளிப்படை' என்று தமிழறிஞர் சி.கே.சுப்பிரமணிய முதலியார் மொழிந்துள்ள கூற்றுக்கு நாமும் வழிமொழி கூறுவோமாக.

போகிப்பண்டிகை

தைப்பொங்கல் விழா சிறப்பாக அமையப் பொங்கலுக்கு முதல்நாள் நாம் வதியும் இடமும் சுற்றாடலும் தூய்மைப் படுத்தப்படுகின்றது. இது போகிப் பண்டிகை என்று குறிப்பிடப்படுகின்றது. எம்மைச் சூழ்ந்துள்ள அழுக்குகள் அனைத்துப் போக்கப்படுவதனால் 'போகிப் பண்டிகை' என்று பெயர்பெற்றது போலும். மாதங்களில் நான் மார்கழி என்று கண்ணன் பகவத் கீதையில் பகர்ந்திருந்தாலும் 'பீடை நோய் பிடித்த மாதம் மார்கழி' என்று தமிழர்கள் கருதுவதனால் மார்கழியைப் போக்கி தையை வரவேற்கும் நிகழ்ச்சியாய் இது அமைகின்றது.

உழவின் உயர்வை உலகுக்கு உணர்த்தும் நாள்

உழவின் உயர்வை உலகிற்கு உணர்த்தும் திருநாள் தைத் திருநாளாகும். 'பாடுபடுவர்க்கே இந்த பாரிடம் சொந்தமையா' என்ற கவிமணியின் கூற்றினை ஏற்று உலகின் அச்சாணியாக விளங்கும் உழவுத் தொழிலின் உயர்வை உவந்து போற்றும் விழாவாகவும் இப்பொங்கல் விழா அமைகின்றது. 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம், வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்' என்று பாட்டுக்கொரு புலவன் பாரதி உழவரின் உயர்வை விளக்கிச் செல்கிறார். ஆனால் எங்கள் வள்ளுவரோ 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர்' என்று அன்றே கூறிய கூற்று என்றும் காலத்தால் அழியாத கூற்றாக, மெய்ப் பொருளாக விளங்குகிறது. உழவுத் தொழில் உயர்ந்து விளங்க உறுதுணையாக விளங்குவது ஞாயிற்றின் தோற்றமாகும்.

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்

'ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்' என்று கதிரொளி வீசும் கதிரவனுக்கு நன்றி செலுத்தப்படுகின்றது. 'இருள் கடிந்து உள்ளத்தே எழுகின்ற ஞாயிறே போன்று' இறையருள் தன் இதயத்தில் ஏற்பட்டுள்ளது என்று மணிமொழியாளர் - மாணிக்கவாசகர் - மொழிந்துள்ள திருவாசகத் தொடரும் நம்மை ஆட்கொள்ளத்தான் செய்கின்றது.

நன்றியுடைமை நவிலும் மாட்டுப் பொங்கல்

பொங்கலோ பொங்கல் என்று தைப் பொங்கலை எம் நெஞ்ச நிறைவோடு நாம் கொண்டாடிய நிலையில், அடுத்த நாள் நிகழ்ச்சி மாட்டுப் பொங்கலாக - பட்டிப் பொங்கலாக மலர்ந்துள்ளது. செங்கதிர்ச் செல்வனுக்கு நன்றி நவின்ற தமிழர் தம் உற்றார் உறவினருடன் கூடி மகிழ்ந்த தமிழன் தன் உழவுத் தொழிலுக்கு உறுதுணையாக விளங்கிய - ஏற்றம் தந்த எருதினையும், நனிசுவை மிக்க பால் தந்த பசுவினையும் - ஆவினையும் - மறக்காத நன்றியுணர்வுள்ள விழாவாக மாட்டுப் பொங்கல் அமைகின்றது. 'உண்ணீர் உண்ணீர் என்று' தனக்குத் துணைநின்ற - ஏற்றம் தந்த எருதிற்கும் பசும்பால் தந்த பசுவிற்கும் தமிழன் உணவூட்டும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். தமிழனின் நன்றியுணர்வு மானிட சமுதாயத்தை மட்டும் தழுவி நில்லாது, விலங்கு உலகையும் வியந்து போற்றுகின்ற உயர் உள்ளத்தையும் உலகிற்கு எடுத்துக் காட்டுகின்றது. எனவே, இவ்வாண்டுப் பொங்கலை வரவேற்கும் நாம் மன்னிய சுவையென இனிக்கும் எம் வண்டமிழ் பரப்பும் ஆண்டாக வரவேற்று வாழ்த்துவோமாக.

ஏக்கம் தந்ததாய் கடந்த ஆண்டுகள் அமைந்திடினும்.

நாம் இவ்வாண்டுப் பொங்கலை வரவேற்கின்றபோது, நடந்த கசப்பான நிகழ்ச்சிகளையும் நாம் மறப்பதற்கில்லை. 'அந்த நாட்களில் சொந்தங்கள் கூடி முற்றங்கள் ஒவ்வொன்றிலும் கோலமிட்டுத் தாளம் போட்டு ஏற்றிய பானைகள்' நம் நினைவுக்கு வருகின்றன. நிறைந்த செவ்வரிசிப் பொங்கலை எழுகின்ற ஞாயிற்றோடு வரவேற்போம். ஆனால், அன்று நாம் பூமியெங்கும் பொங்கிய அந்த ஆனந்தம் எங்கே? இன்று எமக்கு பூமியே இல்லை ஐயா, பொங்கிப் படைக்க. தலையே இல்லாத எங்களுக்கு - தலை வாழையிலைக்குத் தவிக்கும் எங்களுக்கு, கூடிக்குலவிக் கும்மாளமிட்ட குடும்பங்கள் இன்று எங்கே என்று தவிக்கும் எமக்கு, நாம் எவ்விதம் இவ்வாண்டுப் பொங்கலை புத்துணர்வோடு கொண்டாட முடியும் என்ற ஏக்க உணர்வு எம்மை வாட்டி வதைக்கிறது என்பதை நாம் மறப்பதற்கில்லை. ஆனால், எம் கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிட்டதற்கு அமைய, நாம் எந்நிலையிலும் நம்பிக்கை இழப்பதற்கு ஆயத்தமில்லை. எம்முடைய உள்ளுணர்வு சொல்லுகிறது 2012 ஆம் ஆண்டு வருகின்ற தைப்பொங்கல் திருநாள் ஏதோவொரு திருப்புமுனையை தமிழருக்கு குறிப்பாக ஈழத் தமிழருக்கு ஏற்படுத்துமென்ற நம்பிக்கை எமக்குண்டு. உலகின் கருத்தினை எம்பாலீர்க்கும் முயற்சியில் நாடுகடந்த தமிழீழ அரசு பெரு வெற்றி காணவில்லை எனினும் நாம் ஓரளவு வெற்றிகண்டுள்ளோம் என்பதனை எம்மோடு மாறுபடுவோரும் ஒத்துக்கொள்வர். எனவேதான் எதையும் தாங்கும் இதயம் படைத்த அறிஞர் அண்ணா வழியில் சிந்திக்கின்ற நாம், கவிஞர் கருணானந்தம் தந்த பின்வரும் கவிதையை நினைவுகொண்டு இக்கட்டுரையை நிறைவுசெய்ய விழைகிறோம்.

இதோ அவர் தந்த கவிதை:

'உலகம் வியக்க நிலவிய புகழும்,
கழகம் வளர்த்த பழந்தமிழ் மொழியும்
அறநெறி பரப்பும் குறள்முறை தழுவிப்
பிறரைப் பணியாத் திறனும் படைத்த
தன்னேரில்லாத் தமிழக உழவர்
பொன்னேர் பூட்டிச் செந்நெல் விளைத்தே
ஆண்டின் பயனை அடைந்திடும் பெருநாள்,
தூண்டிடும் உவகையில் துள்ளிடும் திருநாள்!'

என்று கவிஞர் கருணானந்தம் கூறுகின்ற கூற்றுக்கு வழிமொழி கூறி வரவேற்க விரும்புகின்றோம். கவிஞர் குறிப்பிடுகின்ற 'தமிழக உழவர்' என்ற சொற்றொடருடன் தமிழீழ உழவரையும் இணைத்து இன்பம் காணவிழைகிறோம்.


மேற்குறித்த கவிதை 'ஞாயிறு போற்றுதும்' என்ற தலைப்பில் எம் இதயத்தில் நீங்காத இடம்பெற்றுள்ள அறிஞர் அண்ணா 14.01.1963இல் வரைந்துள்ள தம்பிக்கு எழுதிய கடிதத்தில் காணப்படும் அரியதோர் கருத்தாகும்.

தைத்திரு நாள் என்ற தமிழ் நங்கையே, உன் வருகை நல்வரவாக அமைய வாழ்த்தி வரவேற்கிறோம்.

மா.க.ஈழவேந்தன்

லெபனானில் கட்டிடம் இடிந்து விழுந்ததில் 13 பேர் பலி

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் ஆறு மாடி கட்டிடம் சரிந்து விழுந்தது. இதில்.13 பேர் பலியாகி உள்ளனர். 20-க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர்.



இந்த சம்பவம் குறித்து லெபனான் உள்நாட்டு பாதுகாப்பு தலைவர் ரேமண்ட் கட்டார் கூறுகையில்: நாங்கள் இதுவரை பலியானவர்களின் 13 உடல்களை மீட்டுள்ளோம் மற்றும் 20-க்கும் மேற்பட்டோர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுள்ளனர்.

மேலும் பலர் இந்த கட்டிட இடிபாடுகளில் சிக்கி இருக்கலாம் என அஞ்சிகின்றோம் ஆறு மாடி கட்டிடம் முவதுமாக தரைமட்டம் ஆகியுள்ளது. மீட்கப்பட்ட உடல்களில் அதிகம் சூடான் நாட்டை சேர்ந்தவர்கள் என அவர் கூறினார்.

தை மாதம் தமிழ் வரலாற்று மாதமாக ரொறன்ரோ மாநகரசபையால் அங்கீகரிப்பு!


தை மாதத்தை தமிழர்களின் பாரம்பரியங்களை வெளிக்கொணரும் மாதமாக ரொறன்ரோ மாநகரசபையின் முதல்வர் ரொப் போட் பிரகடணப்படுத்தியுள்ளார். இது குறித்து ரொறன்ரோ மாநகர முதல்வர் ரொப் போட் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், பல்வேறு இனங்களின் கலாச்சார விழுமியங்களை வெளிக்கொணருவதிலும் அவற்றைப் பாதுகாப்பதிலும் தன்னை ஈடுபடுத்தியுள்ள ஒரு நகரம் என்றும் தெரிவித்ததோடு,

தைத் திங்களை தமிழர் மாதமாகப் பிரகனடப்படுத்தியுள்ளதன் மூலம் அந்த மாதத்தில் தமிழர்கள் தங்களுடைய கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களை ஏனையோருடன் பகிர்ந்து கொள்ள இது இந்தப் பிரகடணம் உதவும் எனவும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இத்தகைய கொண்டாட்டங்கள் ரொறன்ரோவில் வாழும் சமூகங்களிடையே புரிந்துனர்வையும், ஒற்றுமையும் தோற்றுவிப்பதுடன் கலச்சார விருத்திகளையும் வாழ்க்கை முறை மேம்பாட்டையும் உருவாக்கும் என தனது பிரகடணத்தில் தெரிவித்துள்ளார்.

நல்ல நட்பை இழப்பதை விட, கொஞ்சம் பணத்தை இழப்பது மேலானது. - காண்டேகர்

மனிதனிலும் வயதான பூச்சிகள்



மனிதன் உலகில் தோன்றுவதற்கு முன்பே பூமியில் தோன்றி வாழ்ந்து வரும் பெருமை பூச்சியினங்களுக்கு உண்டு. இவற்றின் ஆற்றலும், சிந்தனைக்கே எட்டாத பணிகளும் நம்மை வியக்க வைக்கின்றன.

சமீப காலம் வரை புதிராக இருந்த பூச்சியினங்களின் வாழ்க்கை விசித்திரங்களை இயற்கை ஆய்வாளர்கள் தமது நுண்ணறிவைக் கொண்டு, உழைப்பு, துணிவின் மூலமும் கண்டுபிடித்திருக்கின்றனர். பூமியின் உண்மையான பழங்குடிகள் பூச்சிகளே.

பல்வேறு விதமான எதிரிகளை எதிர்த்துப் போராடி பல லட்சம் ஆண்டுகளாகப் பூமியில் நிலைத்து நிற்கும் பூச்சியினம், இயற்கையின் படைப்பில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றிருக்கிறது. பல துறைகளில் மனிதனின் திறனுக்கு அப்பாற்பட்ட அதிசயத் திறனை பூச்சியினம் பெற்றிருக்கிறது.

பூச்சி இனத்தில் தச்சுத் தொழிலாளர்கள், மண்பாண்ட விற்பன்னர்கள், வீரர்கள், பாடகர்கள், அஞ்சா நெஞ்சுறுதி படைத்தவர்கள், கட்டிடக் கலைஞர்கள், பொறியியல் வல்லுநர்கள் என்று பலரும் உள்ளனர் என்றால் ஆச்சர்யமாயில்லை?

மனிதனுக்கு முன்பே கரையான்கள் அடுக்குமாடிக் குடியிருப்புகளை அமைத்திருக்கின்றன. குளவிகள் காகிதமும், சுண்ணாம்புச் சாந்தும் உற்பத்தி செய்திருக்கின்றன. கம்பளிப் பூச்சிகள் நெசவுத் திறன் வாய்ந்தவையாக உள்ளன. எறும்புகள் தமது கூட்டு முயற்சியால் மண் குன்றுகளில் பெருநகர்களை அமைத்திருக்கின்றன.

இப்படி பூச்சியினங்களை ஆராயும் போது அவை ஏற்படுத்தும் ஆச்சரியம் விரிந்துகொண்டே போகிறது.

****

நோய் அறியும் கருவியாகும் போன்

நம் கண்களே நம்மை ஏமாற்றும்படியான பல அதிசயங்களையும், ஆச்சரியங்களையும் நமக்கு பரிசளித்துக் கொண்டிருக்கிறது நவீன தொழில்நுட்பம். வெறும் பொழுதுபோக்குக்காக உருவாக்கப்படும் நவீன வசதிகளுள் ஒன்று, செல்போன்களில் வந்திருக்கும் தொடுதிரை தொழில்நுட்பம் (டச் ஸ்கிரீன் செல்போன்). ஆனால் அதே தொழில்நுட்பம் மனித வாழ்க்கையின் அடிநாதமான ஆரோக்கியம், மருத்துவம் ஆகியவற்றுடன் கைகோர்க்கும்போது பிரபலமாகிவிடும்.

கணனி சிப்பில் ஒரு சோதனைக்கூடம் *(lab on a chip model)* என்பது நோய் அறியும் மருத்துவ தொழில்நுட்பத்தின் உச்சம் எனலாம். அதாவது, கணனி சிப் போன்ற சிறிய கருவியின் மீது எச்சில், ரத்தம் அல்லது சிறுநீர் போன்றவற்றை வைத்தால், அதிலிருக்கும் நோய் உயிர்க் குறிகளை (நோய் இருப்பதைக் குறிக்கும் மூலக்கூறு) ஈர்த்து வைத்துக்கொள்ளும். அதன்பிறகு அந்த சிப்பை ஒரு சோதனைக் கூடத்துக்கு அனுப்பி அதன் மூலம் நோய் அறிகுறிகளை அறிந்து கொள்ளலாம்.


இந்த சிப் சோதனைக்கூட மாதிரியை நாம் அன்றாடம் பயன்படுத்தும் ஸ்மார்ட் போன்களுக்குள் பொருத்திவிட்டால் என்ன என்று முயற்சித்ததன் விளைவு, ஸ்மார்ட் போனின் தொடுதிரை நோய் அறியும் கருவி ஆனது என்கிறார்கள் கொரிய ஆய்வாளர்கள்.

நம் விரல் நுனிகளின் தொடுதலை கொண்டு இயங்கும், ஸ்மார்ட் போன்களின் இயக்கத்துக்கு அவற்றின் மின் தேக்குதிறன்தான் *(capacitance)* அடிப்படை. தொடுதிரைகளின் இந்த பண்பினை விரல் நுனிகளை விட மிக மிக நுண்ணிய மூலக்கூறுகளான டி.என்.ஏ அல்லது நுண் கிருமிகளை ஆய்வு செய்யும் வண்ணம் மாற்றி வடிவமைக்க முடியும் என்று நம்புகிறார்கள் இந்த கொரிய விஞ்ஞானிகள்.

ஏனென்றால், தற்போது விரல் நுனிகளை உணர பயன்படுத்தப்படும் தொடுதிரைகள், இதைவிட நுண்ணிய மூலக் கூறுகளை உணரும் அளவுக்கு பல மடங்கு அதிக திறன் வாய்ந்தவை. மின்தேக்கு திறனில் ஏற்படும் மிகச்சிறிய அளவு மாற்றங்களைக்கூட துல்லியமாக உணரும் திறன் வாய்ந்த தொடுதிரைகளை, நுண்ணிய கிருமிகள் அல்லது நோய் குறிகளை இனம் கண்டறிய பயன்படுத்திக் கொள்ளலாம்.

இந்த முயற்சியின் முதற்கட்டமாக, க்ளோமைடியா என்னும் ஒரு வகை நோய் ஏற்படுத்தும் பாக்டீரியாவின் மரபுப் பொருளை, வெவ்வேறு அளவுகள் கொண்ட மூன்று திரவங்களாகத் தயாரித்தார்கள். ஐபோனின் தொடுதிரை போன்ற ஒரு தொடுதிரையின் மீது இந்த மூன்று திரவங்களையும் வைத்தபோது, அவற்றின் மின்தேக்குதிறன் வித்தியாசங்களின் அடிப்படையில் பிரித்தறிந்தது.

இதற்கும் ஒரு ரத்த மாதிரியிலிருந்து ஒரு நுண் கிருமியைக் கண்டறிவதற்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. ஆனால், தொடு திரையை ஒரு நோய் அறியும் கருவியாக மாற்றுவதற்கான முயற்சியின் முதல் முக்கியமான படி இது என்பது குறிப்பிடத்தக்கது.




நம் எச்சில், சிறுநீர் அல்லது ரத்தம் இதையெல்லாம் நம் ஸ்மார்ட்போன் திரைமேல் வைத்துவிட்டு, பிறகெப்படி அதை தொலைபேசப் பயன்படுத்துவது என நீங்கள் நினைக்கலாம். இதற்கும் ஒரு தீர்வு வைத்திருக்கிறார்கள் கொரிய விஞ்ஞானிகள்.

அதாவது, நோய்க் குறிகளை ஈர்க்கும் ஒரு திரையை நமது ஸ்மார்ட் போன் மீது ஒட்டிவிட்டு, அதன்மீது நம் எச்சில், சிறுநீர் அல்லது ரத்தம் போன்றவற்றை வைத்து பரிசோதனையை முடித்துக்கொண்டு, அதன்பிறகு அந்த திரையை தூக்கி எறிந்து விட்டால் போதுமே என்கிறார்கள்.

****

இந்த ஆண்டின் முதல் விண்வெளிச் சாதனை அண்டவெளியில் நுழைந்தது வொயேஜர்



மனிதனால் ஏவப்பட்ட ஒரு விண்கலம் முதன்முதலாக நமது சூரியக் குடும்பத்தில் உள்ள கோள்கள் அனைத்தையும் தாண்டி, நமது பால்வெளி மண்டலத்துக்குள் *(Milky way galaxy)* நுழைந்துள்ளது.

பால்வெளி மண்டலத்துக்குள் தான் நமது சூரியன், அதைச் சுற்றியுள்ள 9 கோள்கள் ஆகியவை உள்ளன. நமது சூரிய குடும்பத்தின் கோள்களையும் தாண்டிச் சென்றால் என்ன இருக்கும்? வெறுமையான அண்டவெளி தான். இந்த அண்டவெளியில் கோள்களோ, நட்சத்திரங்களோ, எரிகற்களோ எதுவுமே இருக்காது.

இந்தப் பகுதியை முழுக்க முழுக்க வெறுமையான பகுதி என்று சொல்லிவிட முடியாது. மிக 'கனமான' வெற்றிடம் என்று சொல்லலாம். இந்த வெற்றிடத்துக்கு 'கனம்' எங்கிருந்து வருகிறது? அயனி நிலைக்குத் தள்ளப்பட்ட *(ionized state)* ஹைட்ரஜன், ஹீலியம், நியூட்ரினோக்கள் (இவை சூரியனில் நடக்கும் அணு இணைப்பால் உருவாகும் சப் அடாமிக் பார்ட்டிகிள்), மின்காந்த கதிர்வீச்சு ஆகியவை தான் இந்த வெற்றிடத்தை நிரப்பியுள்ள விஷயங்கள்.

இந்தப் பகுதிக்குள் தான் இப்போது நுழைந்துள்ளது வொயேஜர்-1 விண்கலம். ஏவப்பட்டு 34 ஆண்டுகளுக்குப் பின் இந்தப் பகுதியை அடைந்துள்ளது வாயேஜர்-1. இதனோடு சேர்த்து ஏவப்பட்ட வாயேஜர்-2 விண்கலமும் அந்தப் பகுதியை நோக்கிச் சென்று கொண்டுள்ளது.

அமெரிக்காவின் கொலராடோ பல்கலைக்கழகம் உருவாக்கிய வொயேஜர்-1 மற்றும் வொயேஜர்-2 விண்கலங்கள் 1997ம் ஆண்டு விண்ணில் செலுத்தப்பட்டன. வொயேஜர்-1 விண்கலம் வியாழன், சனி கிரகங்களை எட்டிப் பார்த்துவிட்டும், வொயேஜர்-2 விண்கலம் யுரேனஸ், நெப்டியூன் கிரகங்களுக்கு அருகே சென்று படம் பிடித்துவிட்டும் இப்போது அண்டவெளியை அடைந்துள்ளன.

இதில் வொயேஜர்-1 இன்றைய தேதியில் பூமியிலிருந்து 17,000 கோடி கி.மீ. தூரம் பயணித்துவிட்டது. இன்னொரு பாதையில் இந்த பயணத்தில் ஈடுபட்டுள்ள வொயேஜர்-2 சுமார் 14,000 கோடி கி.மீ. தூரத்தைக் கடந்துவிட்டது. அதாவது, இவை இரண்டுமே ஒரு நொடிக்கு 5 கி.மீ. தூரம் என்ற வேகத்தில் பறந்து கொண்டுள்ளன.

இந்த இரு விண்கலங்களுமே இன்னும் பூமிக்குத் தகவல்களை அனுப்புகின்றன என்பது தான் முக்கியமான விஷயம்.

இந்த 33 ஆண்டுகளில் இந்த இரு விண்கலங்களும் வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூனின் 23 நிலவுகளைக் கண்டுபிடித்தன, வியாழனின் நிலவான 'லோ'-வில் வெடித்துச் சிதறும் எரிமலையைக் கண்டுபிடித்தன, சனி கிரகத்தைப் போல வியாழனுக்கும் வளையங்கள் இருப்பதைக் கண்டுபிடித்தன, நெப்டியூனில் மணிக்கு 1,200 கி.மீ. வேகத்தில் வீசும் புயல்களைக் கண்டுபிடித்தன, நியூட்டனின் நிலவான ட்ரைடனில் இருந்து நைட்ரஜன் வாயு அண்டவெளியில் பாய்வதைக் கண்டு பிடித்தன. மேலும் வியாழனின் நிலவான 'லோ'-விலிருந்து வெடித்துச் சிதறும் எரிமலைத் துகள்கள் ஒன்று சேர்ந்துதான் ஜூபிடருக்கு வளையத்தை உருவாக்கியதையும் வொயேஜர் விண்கலங்கள் கண்டுபிடித்தன.

மேலும் சனி கிரகத்தை சுற்றியுள்ள வளையங்கள் அனைத்தும் பல்வேறு சிறிய வளையங்களால் ஆனவை என்பதும், இதில் 'எப்' என்ற வளையத்தை இரு சிறிய துணைக் கோள்கள் கட்டுப்படுத்துவதையும் வொயேஜர் விண்கலங்கள் கண்டு பிடித்தன.

மேலும் சனி கிரகத்தின் இந்த வளையங்களில் அலைகள் இருப்பதும், இந்த கிரகத்தின் நிலவுகளால் தான் இந்த அதிர்வலைகள் உருவாவதையும் இந்த விண்கலங்கள் கண்டுபிடித்தன. இதை வைத்து அந்த வளையங்களின் எடையையும் கூட நாஸாவால் கணக்கிட முடிந்தது.



வழியில் வேற்றுகிரகவாசிகள் யாராவது இந்த விண்கலங்களைக் காண நேர்ந்தால், பூமியைப் பற்றிய தகவல்களை அவர்களுக்கு சொல்லும் வகையில், இந்த விண்கலத்தில் மனிதர்களின் படங்கள், பூமியின் படங்கள், சூறாவளி-கடல் அலைகளின் சத்தம், பறவைகளின் ஓசை, இசை என பலவகைப்பட்ட தகவல்களும் இடம் பெற்றுள்ளன!.


இந்த விண்கலங்கள், இந்த மாதத் துவக்கத்தில் 'டஹுடேினிண்டஹுச்ஹுட' என்ற நமது சூரியனின் கதிர்வீச்சுகள் தொடும் அதிகபட்ச தூரத்தை எட்டியுள்ளன. இந்தப் பகுதியைத் தாண்டிவிட்டால், சூரிய கதிர்வீச்சுக்கள் கூட இருக்காது, அதாவது நமது சூரியனின் கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டை தாண்டிவிட்டதாக அர்த்தம்.

இந்த விண்கலங்கள் இன்னும் 2,96,000 வருடங்களுக்கு சேதமடையாமல் பயணித்தால்தான் வானிலேயே மிகப் பிரகாசமான நட்சத்திரமான குடிணுடிதண் ஐக் கடந்து 37 டிரில்லியன் கி.மீ. தூரத்தை இவை அடைய முடியும்.

இப்போது புரிகிறதா.. இந்த அண்டவெளி எப்படி விரிந்து கிடக்கிறது என்று!

****

அவுஸ்திரேலியாவில் கலப்பினச் சுறாக்கள்



அவுஸ்திரேலியாவில் உள்ள கடல் பகுதிகளில் 57 கலப்பின சுறா மீன்கள் இருப்பதாக உலகின் முன்னணி கடல் வாழ் உயிரின ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர். அவுஸ்திரேலியாவில் உள்ள குவின்ஸ் லேண்ட்டில் இருந்து நியூ சவுத் வேல்ஸ் கடலில் வாழும் உயிரினங்கள் குறித்து அவர்கள் ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வின்போது, அக்கடல் பகுதிகளில் 57 கலப்பின சுறா மீன்கள் இருந்ததை கண்டறிந்தனர்.

அந்த கலப்பின வகை சுறாக்கள் பொதுவான பிளாக்டிக் சுறாக்களும், அவுஸ்திரேலிய பிளாக்டிக் சுறாக்களும் கலந்து உருவான கலப்பினம். இவை மற்ற சுறா மீன்களை விட வலுவாகவும், உறுதியாகவும் உள்ளன. கடல் நீரின் தன்மை மற்றும் பருவ நிலை மாற்றத்துக்கு தக்கபடி தங்களைப் பாதுகாத்துக்கொள்ள அவை தாங்களாகவே கலப்பினச் சுறாக்களை உருவாக்கிக் கொண்டதாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

பொதுவாக சுறாக்கள் இதுபோன்று கலப்பினத்தை உருவாக்கும் முயற்சியில் ஈடுபடாது. ஆனால் பருவ நிலை மாற்றம் காரணமாகத்தான் அவை புதிய இனத்தை உருவாக்கியுள்ளதாக குவின்ஸ் லேண்ட் பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர் ஜெஸ் மோர்கன் என்பவரும் தெரிவித்துள்ளார், இந்த சுறாக்களின் மரபணுக்களை விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்து வருவதாக தெரிகிறது.

காலத்துக்கு பாகுபாடு கிடையாது; யார் மீதும் அதற்கு பாரபட்சம் இல்லை. - தாமஸ் மான்.



தன்னடக்கமே வலிமை; நல்ல நினைப்பே ஆண்மை; அமைதியே ஆற்றல். - ஜேம்ஸ் ஆலன்

கதிர் ஒளி

செவ்வாய்க்கிழமை 17-01-2012

அதிரடித் தள்ளுபடி
இவ்விடத்தில்
உங்கள்
விளம்பரங்களை
பிரசுரிக்க
$50/- மட்டுமே

எந்தப் பேச்சானாலும், தீர ஆலோசனை செய்த பிறகே பேச வேண்டும். - மகாவீர்